வியாழனை முதல் முறையாக படம் பிடித்துள்ளது ஜூனோ
பக். 14 - 15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 | கதிர் 232 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 31, வெள்ளிக்கிழமை 15.07.2016

34c - 27c
தெளிவான காலநிலை

## சரணடைந்தவர்கள் தொடர்பில் விரிவான விசாரணை அவசியம்

பரணகம வலியுறுத்து

இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம்.

இவ்வாறு வலியுறுத்தினார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம. அவரது ஆணைக்குழுவின் பதவிக் காலம் இன்றுடன் முடிகிறது.

"போரின் போது தவறுகள் இருபக்கத்திலும் இழைக்கப்பட்டிருக்கின்றன. அவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவேண்டும். ஆணைக்குழுவைக் கலைக்குமாறு ஐ.நா. பரிந்துரைப்பது வேடிக்கையானது" என்றார் பரணகம.

(விரிவு: பக்கம் 11)

## யாழ்ப்பாணத்தில் அநுரகுமார எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு நிலவரங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

இதில் நேற்று யாழ்ப்பாண வணிகர் கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்து வடக்கு மாகாண வர்த்தக நிலவரங்கள் தொடர்பில் அநுரகுமார கேட்டறிந்தார். அத்துடன் பல்வேறுபட்ட தரப்பினரின் கருத்துக்களைக் கேட்டறிந்து வடக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எடுத்துக்கூறுவேன் என அவர் தெரிவித்தார்.

(விரிவு: பக்கம் 02)

## அரசதுறைகளுக்கான ஆள்சேர்ப்பில் அந்தந்த மாவட்டத்திலேயே நியமனம்

வடக்கு மாகாணத்தில் அரச நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்யும்போது வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தின் ஆளணித் தேவைகளுக்கு ஏற்ப, அந்த மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படவேண்டும்.

(விரிவு: பக்கம் 07)

# போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை என நான் ஒருபோதும் கூறவில்லை

## அப்படிக் கூறவும் முடியாது என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 15

போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்று நான் கூறவில்லை. அவ்வாறு என்னால் கூறவும் முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மாறான நிலைப்பாட்டை நான் ஒருபோதும் தெரிவிக்க மாட்டேன். பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்று நான் தெரிவித்ததாக வந்த செய்தி பிழையானது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.



சம்பந்தன், 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகள் பக்.24

## 15 அத்தியாவசிய பொருள்களுக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, ஜூலை 15

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்ட 15 அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைப்பட்டியல் அரசினால் நேற்று வெளியிடப்பட்டது.

கோழி இறைச்சி (தோலுடன்) - 410 ரூபா, தோல் இல்லாமல் - 495 ரூபா, நெத்தலி (தாய்லாந்து) - 495 ரூபா, துபாய் - 410 ரூபா, ரின்மீன் - 140 ரூபா, கருவாடு (கட்டா) - 1,100 ரூபா, சால - 425 ரூபா, மாசி - 1,500 ரூபா, சிவப்பு பருப்பு - 169 ரூபா, சீனி - 95 ரூபா, கடலை - 260 ரூபா, பயறு - 220 ரூபா, கோதுமை மா - 87 ரூபா, முழு ஆடைப்பால் மா (இறக்குமதி செய்யப்பட்டது) - 810 ரூபா, உள்நாடு - 735 ரூபா, சஸ்டஜன் பால்மா - 1,500 ரூபா, உருளைக் கிழங்கு (உள்நாடு) - 120 ரூபா, பெரிய வெங்காயம் - 78 ரூபா, செத்தல் மிளகாய் - 385 ரூபா.

குறித்த அத்தியாவசியப் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்தது. (வ-5)

முச்சந்தி முரளி



இதுக்குத்தானே பன்னாட்டு நீதித்துறை கேட்கிறம்... இப்ப புரியுதா ஏனெண்டு...

## தெற்கில் சமையல் கிழக்கில் சாமி...



கிழக்கு மாகாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர்கள் திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட போது...

# இன முறுகலைத் தோற்றுவிக்கவே சாம்பல்தீவில் விகாரை அமைப்பு

## கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, ஜூலை 15

"நாட்டில் தற்போது அமைதி நிலவினாலும், புத்தர் சிலைகளால் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. திருகோணமலை - சாம்பல்தீவில் விகாரை அமைக்கப்படுவது இனங்களிடையே ஒரு முறுகல் நிலையைத் தோற்றுவிக்கும் - நல்லாட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தும் ஒரு சதி முயற்சியாகவே நாம் கருதுகின்றோம்".

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பியோகேஸ்வரன்.

"சாம்பல்தீவு சந்தியில் இராணுவத்தினர் முகாமிட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான காணியில் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையை முகாம் அகற்றப்பட்டபோது நியாயமான முறையில் எடுத்துச் சென்றுவிட்டனர். பின்னர் அந்த இடத்தில் பிள்ளையார் சிலை மற்றும் சூலம் வைக்கப்பட்டன. எனினும், அன்றைய தினமே குறித்த பிள்ளையார் சிலை பக்.23

# இராணுவம் சொன்னது ஒன்று நீதிமன்றில் கொடுத்தது ஒன்று

## போரின் இறுதியில் சரணடைந்தோர் விவரங்களில் கட்டளை அதிகாரி நடத்திய விளையாட்டு

முல்லை., ஜூலை 15

இறுதிப் போரில் சரணடைந்த விடுதலைப் புலிகளின் பட்டியலுக்குப் பதிலாக, புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட போராளிகளின் பட்டியலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்வைத்தார் 58ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி. ஆனால் அதனை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

"நீதிமன்றம் கோரிய ஆவணம் இதுவல்ல. உரிய ஆவணத்துடன் அடுத்த தவணையில் முன்னிலையாகவேண்டும்" என மேஜர் ஜெனரல் சாணக்ய குணவர்த்தனவுக்கு அழுத்தமாக அறிவுறுத்தினார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன். பக்.23

வர்தன ரன்வரம
தங்க நகை அடகுச் சேவை



தங்க நகைகளுக்காக அதிக பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்
• நவீன தொழில்நுட்பத்தில் நகைகள் பரிசீலிக்கப்படும்
• பூரண இரகசியத்தன்மை பேணப்படும்
• கடனை சிறிது சிறிதாக செலுத்தி நகைகளை மீட்கலாம்

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு
73/5, காலி வீதி, கொழும்பு 03. Web : www.dfcc.lk
துரித அழைப்பு: (011) 2 350 000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் கால தாமதம் இருக்கக் கூடாது

## பிஷ்வாலிடம் வலியுறுத்தினார் கிழக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூலை 15
புதிய அரசமைப்பு உருவாக்கம் இழுத்தடிக்கப்படாது - காலம் தாழ்த்தப்படாது உடனடியாகச் செய்து முடிக்கப்பட வேண்டும். இதற்கான தேவை உள்ளது.



இவ்வாறு அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வாலிடம் எடுத்துக்கூறினார் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட்.
இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர்கள் இருவரும் திருகோணமலை மாவட்டத்திற்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டனர். இந்தப் பயணத்தின்போது கிழக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சரவையினரையும் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் முடிவில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாண முதலமைச்சர், தெரிவித்ததாவது:
"13ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்ட அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு முழுமையாக வழங்கப்படவேண்டும். 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் முறையாக நடைமுறைப் படுத்த வேண்டிய தேவை உள்ளது.
மாகாணத்திற்கான நிதி ஒதுக்கீடுகளில் செயற்படுத்தும் திட்டங்களில் நடுவண் அரசு தலையீடு செய்யக்கூடாது" என்று பிஸ்வாலிடம் வலியுறுத்தினார் என நசீர் அகமட் குறிப்பிட்டார்.
(வ-5)

# புதிய அரசமைப்பின் ஊடாக தமிழருக்கு நிரந்தரத் தீர்வை வழங்க ஜே.வி.பி. ஆதரவு

## யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் அநுரகுமார எம்.பி

யாழ்ப்பாணம், ஜூலை 15
சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு, இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் நியாயமானதே. இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்றில் தெரிவிப்பேன். புதிய அரசமைப்பில் அரசியல் தீர்வை எட்டுவதற்கும் ஆதரவு வழங்குவோம்.



இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க.
மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். யாழ்ப்பாண வணிகர் கழகத்தினருடன் அவர்கள் கலந்துரையாடினர்.
யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாகவும் வர்த்தக மேம்பாடுகள் மற்றும் களத் தொடர்பிலும் ஆராய்வதற்கு யாழ்ப்பாண வணிகர் கழகத்திடம் ஜே.வி.பியினர் அனுமதி கேட்டனர். அதனடிப்படையிலேயே நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது என வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.
இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஜெயசேகரம் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சபை பொறுப்பேற்று 2 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் என்ன சாதித்துள்ளனர்? கல்வி, சுகாதாரத்தில் உள்ள அதிகாரங்களை அவர்கள் சரிவரப் பயன்படுத்தலாம்.
தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் ஜே.வி.பியினருக்கு எடுத்துக்கூறினோம்.
சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் காணிகள் விடுவிக்கப்பட்டு, முகாம்களில் இருக்கும் மக்கள் சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப்படவேண்டும். இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களினால் எமது மீனவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டது.
எமது பகுதியில் பௌத்த விகாரைகள் அதிகளவில் அமைக்கப்படுவது குறித்து கவலை வெளியிட்டோம். பொதுமக்களின் (தனியார்) காணிகளில் கூட விகாரைகள் அமைக்கப் படுகின்றன. இந்த நடவடிக்கையால் தமிழ் மக்கள் அச்சத்துக்கும் வெறுப்பு நிலைக்கும் உள்ளாகியுள்ளனர். பௌத்த விகாரை அமைக்கப்படுவதற்குச் சட்டம் ஒழுங்குகூட சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இங்கே பாரபட்சம் காட்டப்படுகிறது. இப்படியான காலப்பகுதியில் நாம் எவ்வாறு சிங்கள அரசை அல்லது சிங்கள அரசின் சட்ட திட்டங்களை நம்புவது? எமது மக்கள் பாதிக்கப்படுவது தொடர்பாகச் சிங்கள மக்களுக்குத் தெரிவியுங்கள். இனப்பாகுபாட்டுக்காக நாங்கள் இதனைக் கூறவில்லை. நாம் படும் பாட்டை அந்த மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.
67 வருடங்களாக நீடிக்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக நிரந்தரத் தீர்வைக்காண ஜே.வி.பி ஆதரவு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம் - என்றார்.
(வ-4,ரி)

# கொலைக் குற்றவாளியின் பிணை மனுத் தள்ளுபடி

கொலைக் குற்றச்சாட்டில் 10 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி, அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ள நிலையில், தன்னைப் பிணையில் விடுமாறுகோரி மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவை யாழ். மேல் நீதிமன்று தள்ளுபடி செய்தது.
கோப்பாயில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி இரத்தினம் மணிவண்ணன் என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கிருஸ்ணபிள்ளை பிரேமன் என்பவருக்கு 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி 10 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் குற்றவாளி மேன்முறையீடு செய்தார். பின்னர் பிணைகோரி யாழ். மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். கடந்த செவ்வாய்க்கிழமை அதனைப் பரிசீலித்த நீதிபதி மா. இளஞ்செழியன், கொலைக் குற்ற வழக்கில் பத்து வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவருக்கு மேன்முறையீட்டுவழக்கு நிலுவையில் உள்ளபோது பிணை வழங்க முடியாது.
குற்றவாளியாகக் காணப்பட்டு 7 ஆண்டுகளுக்கு மேல் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், மேன்முறையீட்டின்போது அவருக்கு பிணை வழங்குவதில்லை என்றுகூறி பிணை மனுவைத் தள்ளுபடி செய்தார்.
(வ-4)

# கிணற்றிலிருந்து 6 கைக்குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் கிணற்றிலிருந்து 6 கைக்குண்டுகளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அந்தப் பகுதியிலுள்ள வீட்டு வளவிலிருந்த கிணற்றை வீட்டு உரிமையாளர்கள் நேற்றுத் துப்புரவு செய்தனர். அதற்குள் 6 கைக்குண்டுகள் காணப்பட்டன. அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று கைக்குண்டுகளைப் பார்வையிட்டனர்.
அவற்றில் 3 பழைய குண்டுகளும், 3 புதிய குண்டுகளும் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவற்றை நீதிமன்றின் அனுமதியு டன் அழிப்பதற்கான நடவடிக்கையை சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
(வ-106)

# கிராமத்தில் வசிக்காமலேயே 140 குடும்பங்களுக்கு சமுர்த்தி

## உடனடியாக நிறுத்துமாறு பிரதேச செயலர் அறிவுறுத்து

முல்லைத்தீவு, ஜூலை 15
கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிக்கிராவத்தை கிராமத்தில் வசிக்காத 140 குடும்பங்களுக்கு வழங்கப்படும் சமுர்த்திக் கொடுப்பனவை உடனடியாக நிறுத்துமாறு பிரதேச செயலாளர் குணபாலன் அறிவுறுத்தினார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 163 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. 100 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லை. கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் பெரும்பான்மையான கிராம அலுவலர் பிரிவுகளுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன.
கிக்கிராவத்தை கிராமத்தில் பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இந்தக் கிராமத்தில் இல்லாத வேறு மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கும் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப் படுவதாக மக்கள் முறைப்பாடு செய்தனர்.
"கிக்கிராவத்தை கிராமத்திலிருந்து 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த குடும்பங்கள் போருக்குப் பின்னர் தற்போதுதான் மீளக்குடியமர்கின்றனர். அவர்கள் சமுர்த்தி கொடுப்பனவிற்குத் தகுதி உடையவர்கள். மாவட்டத்தில் வசிக்காத 140 குடும்பங்களும் கிக்கிராவத்தையில் சமுர்த்தி பெறுவதான குற்றச்சாட்டு எனது கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்தபோது குற்றச்சாட்டில் உண்மை இருக்கின்றது.
மாவட்டத்தில் வசிக்காத சமுர்த்தித் திட்டத்தில் பயன்பெறுகின்ற அனைவரது பெயர்களையும் பெற்றுள்ளோம். சமுர்த்திக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அழைக்கப்பட்டு, தவறாகப் பயன்பெறுகின்ற 140 குடும்பங்களுக்கான கொடுப்பனவை உடன் நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.
நிறுத்தப்படும் 140 குடும்பங்களுக்கான கொடுப்பனவிற்குப் பதிலாக, அதே கிராமத்தில் வசித்துவரும் மக்களில் இன்றுவரை சமுர்த்தி கிடைக்காதவர்களை உள்வாங்கி இந்தப் பிரச்சினைக்கு நீதியான தீர்வைக் காணுமாறு பணித்துள்ளேன். இந்த மாத இறுதிக்குள் தீர்வு காணப்படும். இந்த விடயம் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது" - என்றார் பிரதேச செயலாளர்.
(வ-5-101)



# 85 கிலோ மரை இறைச்சி வைத்திருந்த மூவர் கைது

வவுனியா, ஜூலை 15
வவுனியா கள்ளிக்குளம் காட்டுப் பகுதியில் 85 கிலோ கிராம் மரை இறைச்சி வைத்திருந்த மூன்று பேரை சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுக் காலை கைது செய்தனர்.
சந்தேகநபர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் சிறப்பு அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், அவர்களின் மோட்டார் சைக்கிள் மற்றும் மர இறைச்சி உள்ளிட்டவைகள் சிறப்பு அதிரடிப் படையினரால், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.
சந்தேகநபர்கள் இன்று வவுனியா நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர் என்று வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
(வ-5-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நீதிபதிகளுக்கு ஒருபோதுமே இடமில்லை

## கூறுகிறார் பீல்ட்மார்ஷல் பொன்சேகா



கொழும்பு, ஜூலை 15
இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க முடியாது.
இவ்வாறு தெரிவித்தார் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.
போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் உள்ளடக்கத்தின் அவசியத்தை அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் அரசிடம் வலியுறுத்தினார். இது தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்தபோதே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
நாட்டின் சட்டத்திற்கு அமையவே அனைத்தையும் செய்ய வேண்டியுள்ளது. எமது நாட்டில் அரசமைப்பு உள்ளது. எமது நாட்டில் சட்டமொன்று உள்ளது. அதன் பிரகாரம் வெளிநாட்டு நீதிபதிகள் தலையீடு குறித்து எந்தவொரு முறைமைகளும் இல்லை. எனவே அந்த விசாரணைகள் கட்டாயமாக உள்ளகப் பொறிமுறையாகவே இருக்கும். உள்நாட்டு நீதிபதிகளே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பிரிவுகளிலும் உள்ள ஆர்வத்தின் அடிப்படையில், குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆர்வத்தினால் நடைமுறையொன்றைப் பின்பற்ற வேண்டும். அடிப்படையில் அவர்களுக்கு உறுதிப்படுத்துவது அவசியமாகும்.
அதனால் நான் நினைக்கின்றேன் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் வெளிநாடுகளில் இருந்து வரமுடியும். எவ்வாறாயினும் நீதிபதிகள் மற்றும் பொறிமுறை ஆகியன தேசிய ரீதியானதாக இருக்க வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமரும் இதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். தொழில்நுட்ப ஆலோசகர்களாக வெளிநாட்டவர்களை நியமிப்பதற்கு யோசனை முன்வைக்க முடியும் – என்றார்.
(வ-5)



# முட்டை ஏற்றிவந்த கூலர் தடம்புரண்டது

யாழ்ப்பாணம், ஜூலை 15
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு முட்டை ஏற்றி வந்த கூலர் ரக வாகனம் ஏ-9 வீதி வவுனியாவில் நேற்றுமுன்தினம் தடம்புரண்டதால் கோழி முட்டைகள் நாசமடைந்தன.
யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் முட்டைத்தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் கொழும்பில் இருந்து 70 ஆயிரம் கோழி முட்டைகளை எடுத்துவந்ததாக அதனை எடுப்பித்திருந்த தனியார் வர்த்தகர் தெரிவித்தார். (வ-101)

# புகையிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு 90 சதவீத வரி அறவிட அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 15
புகையிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு 90 சதவீத வரி விதிப்புத் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளேன்.
இவ்வாறு தெரிவித்தார் சுகாதார அமைச்சரும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன.
அரசதகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:
நாட்டின் சுகாதார சேவை குறித்து தவறாகக் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. நல்லாட்சி அரசு அமையப்பெற்று தொடக்கம் நாட்டின் சுகாதார சேவை வலுவடைந்தது. ஊழல், மோசடிகள் தடுக்கப்பட்டுள்ளன. ஊழல், மோசடிகளிலிருந்து காப்பாற்றப்பட்ட பணத்தில் அதிநவீன மருத்துவ கருவிகள் வைத்தியசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. சர்வதேச சுகாதார அமைப்பும், ஐ.நாவும் எமது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் அதியுச்ச பொதுசேவை சுகாதாரத்தை வரவேற்றுள்ளதுடன், உதவிகளையும் வழங்கியுள்ளது.
குறிப்பாக, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, இந்தியா, சீனா போன்ற நாடுகள் எமது நாட்டின் சுகாதார சேவையின் தரத்தை உயர்த்த உதவிகளை வழங்கிவருகின்றன. வரலாற்றில் முதல் தடவையாக பாதுகாப்புக்கு அடுத்ததாக சுகாதார சேவைக்கு அதிகளவான நிதி வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.
தொற்றாநோயிலிருந்து இலங்கைவிடுபட்டுள்ளது. ஆனால், தொற்றுநோயிலிருந்து இன்னமும் விடுபடவில்லை. அத்துடன், எச்.ஐ.வி. நோயும் அதிகரித்துவருகின்றது. அதனைக் கட்டுப்படுத்த அரசு பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.
உலக சுகாதார அமைப்பால் நடத்தப்பட்ட கூட்டத்தில் புகையிலைப் பாவனையால் ஏற்படும் நோய்கள் தொடர்பில் பேசப்பட்டதுடன், தற்போது ஆஸ்திரேலியாவில் காணப்படும் 'பிளாங்க் பைக்கற்' முறை குறித்து ஆராயப்பட்டது.
'பிளாங்க் பைக்கற்' என்பது வெண்ணிறத்திலான பெட்டியில் முழுவதும் எச்சரிக்கை குறித்த புகைப்படங்களும் அறிவித்தலும் மட்டுமே காணப்படும். சிகரெட்டை உற்பத்தி செய்யும் நிறுவனம் தனது உற்பத்திப்பொருளில் பெயரை மட்டுமே அச்சிட முடியும்.
'பிளாங்க் பைக்கற்' முறையை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கும்.
வற் வரியானது தற்காலிகம் என்பதால் அதனைப் புகையிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு விதிப்பதில் எவ்வித பயனுமில்லை. ஆனால், 90 சதவீத வரி விதிப்பை மேற்கொள்வதால் வற் வரியில் பெற்றுக்கொள்ளும் வருமானத்திலும் பார்க்க அதிக வருமானத்தை அரசு பெற்றுக்கொள்ள முடியும் –என்றார்.
(வ-4)

# சேவை நயப்புவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 15
வலிகாமம் கல்வி வலயத்தில் 17 வருடங்கள் வர்த்தக பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகவும் 17 வருடங்கள் ஆசிரியராகவும் சேவையாற்றிக் கடந்த 2 ஆம் திகதி ஓய்வு பெற்ற ந.துரைராஜசிங்கத்தின் சேவைநயப்பு விழா அண்மையில் நடைபெற்றது.
வலிகாமம் கல்வி வலய நலன்புரிக்கழகம் நடத்திய இந்தச் சேவைநயப்பு விழா வலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
கழகத்தின் தலைவர் க.ஆதித்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் விழா நாயகனும் பாரியாரும் கௌரவிக்கப்பட்டு வாழ்த்துபா வாசித்து வழங்கப்பட்டு, பணப்பரிசும் வழங்கப்பட்டு வாழ்த்துரைகளை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் வழங்கியிருந்தனர்.
(4)

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ் பிரதான வீதியில்(மாம்பழ சந்தி வரை) கோயில் வீதி, கொழும்புத்துறை ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை
தொடர்பு.0768502992
0776405572

**பெயர் மாற்றம்**
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த சுவாமிநாதன் ஆகிய எனது தந்தையின் பெயரை மகனான பாலசந்திரன் ஆகிய நான் இரத்தினம் என பெயர்மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
இரத்தினம் பாலச்சந்திரன்

**வீடு விற்பனைக்கு**
இருபாலை அரசடி ஒழுங்கையில் 02 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு
(பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு அருகில்)
தொடர்புக்கு:
077 4976 815, 077 9317 674

## மாசி உற்பத்தி இலங்கையில் அதிகரிப்பு

அடுத்த இரண்டு வருடங்களுக்குள் மாசிக் கருவாடு இறக்குமதி செய்வதை நிறுத்த முடியும் என கடற்றொழில் வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அம்பாந்தோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாசி உற்பத்தித் செயற்திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். குறித்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரு குடும்பத்தினர் ஒரு நாளைக்கும் 1,000 கிலோ கிராம் மாசி கருவாட்டை உற்பத்தி செய்வதாகத் தெரிவித்த அமைச்சர், அதன்படி ஒரு கிலோமாசி 900 ரூபாவுக்கு விற்பனை செய்வதாகக் கூறினார். (வ)

# தனயன் வெட்டியதால் கையை இழந்தார் தந்தை

கிளிநொச்சி, ஜூலை 15
தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் கத்தி வெட்டில் முடிந்தது. இதனால் தந்தை ஒரு கையை இழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் பரந்தனில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்றது. காயமடைந்த முதியவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். காயமடைந்தபகுதி வீக்கமடைந்து கொதிவலி ஏற்பட்டதைத் தொடர்ந்து, அவர் வைத்தியசாலையில் மீண்டும் சேர்க்கப்பட்டார். இதன்போதே வழங்கப்பட்ட சிகிச்சை பயனளிக்காததனால் நேற்று அவரின் கை முழங்கை பகுதியுடன் அகற்றவேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.
(வ-101)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

தலைவர், மாவட்டச் செயலக பெறுகைகள் குழு சார்பில் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம், **சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உள்ளக வீதிகளை புனரமைப்பதற்காக**, தகுதி மற்றும் தகைமை உடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றனர்.

1. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2. கேள்விதாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (CIDA), வீதி நிர்மாணிப்பிற்கு வழங்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படடிருக்கும் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினைக்கொண்ட சான்றிதழைக் கொண்டிருப்பதோடு, பொது நிதிச் சுற்றறிக்கை, இல. 04/2016 இற்கு அமைவாக அவ்விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **மீள்குடியேற்ற பிரிவு. மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் **18.07.2016** தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்கள் தேவைப்படின் **யாழ். மாவட்டச் செயலக மீள்குடியேற்ற பிரிவின் 021 222 4029 எனும்** தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

4. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் **மீள்குடியேற்ற பிரிவு மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **18.07.2016 ஆம் முதல் 01.08.2016 வரை** காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 2000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் ,யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **02.08.2016 ஆம் திகதியன்று பி.ப 2.30மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் **அரச அதிபர் அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

6. காலந் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். **கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.** கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்டமுகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில **02.08.2016 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு** திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்

8. Prebid Meeting **26.07.2016** முற்பகல் **10.00மணிக்கு மாவட்டசெயலகத்தில்** நடைபெறும்.

| இல | கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | இடம் | மதிப்பீட்டுத் தொகை (Rs in mn) | தேவையான தராதரம் (CIDA) | கேள்வி பிணைவிபரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 1 | JF/RES/INFRAS/R ROAD/2016 | வீதி திருத்தம் | தெல்லிப்பழை | 14.25 | C6 | Rs 142,500.00 | 90 நாள்கள் | 60 நாள்கள் |

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

# INVITATION FOR BID (IFB)
## Department of Agrarian Development Jaffna District

1. **The Assistant Commissioner, Department of Agrarian Development, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for civil works as described in the table below.**
2. **Bidding will be conducted through Open National Competitive Bidding Procedure.**
3. **To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the ICTAD registration and qualification requirements listed below. Additional details are provided in the Bidding Documents.**
4. **Interested eligible bidders may obtain further information and inspect the Bidding Documents at the Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna during office hours.**
5. **A complete set of Bidding Documents in English language should be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Commissioner, Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna from 15.07.2016 to 28.07.2016 from09:00 hrs to 15:00 hrs, upon payment of a nonrefundable fee ofRs.2000.00for each set. The method of payment will be by cash.**
6. **Bids shall be delivered to the Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna on or before 14:00 hrs on 29.07.2016. Late Bids will be rejected. Bids will be opened immediately after the closing in the presence of the bidders' representatives who choose to attend.**
7. **Bids shall be valid upto90 Days after the deadline for bid submission.**
8. **All bids shall be accompanied by a bid security issued by a bank in the form of Bid Security included in Section – 9. The amount of Bid Security Shall be as per details given below and shall be valid to 120Days from the date of Bid opening.**
9. **Pre-bid meeting will be held at Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna commencing at10.00 a.m. on 21.07.2016**
10. **The Table referred to above is:**

| No | Contract No & Title of contract | Proposed contract Price (Mn Rs.) | Bid Security Amount (Rs) | Construction Period | Required ICTAD Registration in Irrigation |
|---|---|---|---|---|---|
| 1 | DAD/JF/BU/01/2016 Construction of Fertilizer Store at Keerimalai ASC – Capacity of 150 MT | 3.43 | 35,000.00 | 3 Months | C8 or Above |

**Assistant Commissioner,**
**Department of Agrarian Development,**
**Jaffna District**

T.P No – 021 222 2596
Fax – 021 222 4058

**Date: 14.07.2016**

(C/24321)
(ம.18)

# தங்கமாய் விளங்கிய தங்கம்மா



தேவரும் கரங்கூப்பத் தெல்லியை வடிவமைத்த
திருவருட்செல்வியே அன்னை தங்கம்மா
யாவரும் இவர்போல முழுநேரம் பணி செய்தால்
யாமிருக்கும் பூமியில் தங்கம் விளையாதோ?

தங்கமாய் விளங்கிய தங் கம்மா போற்றிய
தாரணியாம் துர்க்கைக்குத் தரணியில் பொற்கோயில்
எங்குமே பெரும் பேறு பெற்ற இந்த ஆலயம்
இப்புவியில் தானாய் வளர வழிசமைத்தார் அன்னை.

தன்னை அர்ப்பணித்தார் தம் பொருளைத் தாமீந்தார்
தமிழைச் சிவமாக்கினார் தரணிக்கு அருள் பொழிந்தார்.
என்னதான் இருந்தாலும் அம்பாளையே அறமாக் கினார்.
இந்தமண் உள்ளவரை தங்கம்மா எங்கள் தங்கமே.

கே.எஸ்.சிவஞானராஜா

(செல்வி அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவு தினம் நேற்று)

# அதிபரே ஆசிரியரைத் தாக்கிவிட்டு விசாரணையை திருப்ப முயல்கிறார்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 15

பாடசாலையில் ஆசிரியரை அதிபரே தாக்க முயன்றார். ஆசிரியர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அதிபர் வைத்தியசாலையில் சேர்ந்துள்ளார். அதிபர் விசாரணையைத்திசை திருப்ப முயல்கின்றார்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியது.

துணுக்காய்கல்விவலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் பாடசாலைஅதிபரை ஆசிரியர் தாக்கினார் என்றும், அதனால் மயக்கம் ஏற்பட்டது என்றும் தெரிவித்து அதிபர் வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்ந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இருவருக்குமிடையே கற்பித்தல் பாடவேளைகளை வழங்குவதில் பல நாள்களாக இழுபறி இருந்தது. குறித்த ஆசிரியரின் பாடவேளைகளை அங்கு புதிதாகச்சென்றஆசிரியையிடம் அதிபர் வழங்கியதால் முரண்பாடு ஏற்பட்டது. இது துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்கும் குறித்த ஆசிரியரால் கொண்டு செல்லப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. சம்பவ தினத்தன்று குறித்த ஆசிரியர் சற்றுத் தாமதமாகப் பாடசாலைக்குச் சென்றதால் அதிபருடன் முரண்பாடு ஏற்பட்டது. ஆசிரியரை அதிபர் தள்ளித்தாக்க முற்பட்டார் என்று அறியமுடிகிறது.

ஆசிரியர் உடனடியாக துணுக்காய் வலயக்கல்வி பணிமனைக்கு முறையிடச் சென்ற போது வலயக்கல்விப் பணிப்பாளர் அங்கு இல்லை. மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் அன்று முற்பகல் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணை மேற்கொள்ள அதிபரை பொலிஸார் அலைபேசி மூலமாக அழைத்தபோது மதியம் வருகின்றேன் என்று அதிபர் தெரிவித்தார். முற்பகல் மாங்குளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்ந்தார் என்று அறிந்தோம். இந்த விடயத்தில் நீதியான விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் – என்றுள்ளது.

"குறித்த ஆசிரியர் வலயத்தில் முறைப்பாடு செய்ய முன்னரே பொலிஸில் முறைப்பாடு செய்தார். வலயத்தால் குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. விசாரணை முடிவின் பின்னரே மேலதிக விடயங்கள் தெரியவரும்" என்று துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ரவீந்திரநாதன் தெரிவித்தார். (ற–4)

# பொது அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை
## வீதிப் போக்குவரத்து தடை செய்தல்

எமது சபைக்கு உரித்தான உடுவில் பாடசாலை வீதியில் உள்ள பாலம் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளதனால் இன்று முதல் மறு அறிவித்தல் வரை வீதி போக்குவரத்துக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் போக்குவரத்துக்காக மாற்றுப்பாதையைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன் புனரமைப்பு வேலைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வலி தெற்கு பிரதேச சபை சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்துக்குண்டுப் பாவனை சட்டத்துக்கு மாறானதல்ல

## மீண்டும் கூறுகின்றார் பரணகம

கொழும்பு, ஜூலை 15

கொத்துக் குண்டுப் பாவனையை மீண்டும் நியாயப்படுத்தினார் காணாமற்போனோர் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.

**இவர் முன்னரும் இவ்வாறான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.** அந்த அறிக்கையை "அதிமேதாவித்தனத்தைக் காண்பிக்க முயற்சிக்கின்றார்" என்று வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமர வீர சாடினார்.

நேற்று மக்ஸ்வெல் பரணகம புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:

2008ஆம் ஆண்டு மே 30ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கொத்துக் குண்டுகளை தடை செய்யும் பன்னாட்டு உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடவில்லை.

உடன்படிக்கை பன்னாட்டு அளவில் 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமே நடைமுறைக்கு வந்தது. இந்தக் காலப் பகுதிக்கு முன்னர் இலங்கை கொத்துக் குண்டுகளை பயன்படுத்தியிருந்தால் அதனை சட்ட விரோதமானது எனத் தெரிவிக்க முடியாது.

இலங்கை மட்டுமல்ல 70 நாடுகள் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதை நாங்கள் எந்தத் தருணத்திலும் நியாயப்படுத்த முயலவில்லை. இலங்கையில் உள் நாட்டு மோதல் இடம்பெற்ற வேளை காணப்பட்ட சட்டங்கள் குறித்தே சுட்டிக்காட்ட முயன்றுள்ளோம்.

இலங்கை இராணுவம் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தியதை உறுதியாக நிராகரித்துள்ளது. கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் புதிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றால், யார் அவற்றைப் பயன்படுத்தியது மற்றும் பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களின் அடிப்படை கொள்கைகளுக்கு முரணற்றதாக காணப்படுகின்றதா போன்ற விசாரணைகளை, விசாரணை அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ற-5)

## விதிகள் மீறிய சாரதிகளுக்கு தண்டம்

போக்குவரத்து விதி முறைகளை மீறி வாகனம் செலுத்திய ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று 48 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 15 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், மது போதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி பயணித்தபோது பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தும் நிறுத்தாமல் சென்ற சாரதிக்கு 12 ஆயிரத்து 500 ரூபாவும், வாகன இலக்கத்தகடு இன்றியும் வாகன வரிப் பத்திரமின்றியும் வாகனம் செலுத்திய சாரதிக்கு 4 ஆயிரம் ரூபாவும், ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் தண்டம் விதித்தார். (ற-9)

## வீதியில் தாக்கி கொள்ளையடித்த நால்வருக்கு ஒத்திவைத்த சிறை

தென்மராட்சி, ஜூலை 15

வீதியில் சென்ற நபரைத் தாக்கி அவரிடமிருந்து மோட்டார் சைக்கிளையும் தங்கச்சங்கிலியையும் கொள்ளையடித்த நான்கு பேருக்கு 2 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனை விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

கைதடியில் கடந்த வருடம் ஜூலை 7 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை வழிமறித்த நால்வர் அவரை தாக்கி காயப்படுத்தியதுடன் அவர் கொண்டு சென்ற மோட்டார் சைக்கிளையும் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் கொள்ளையடித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரிநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இரு பகுதியினருக்கிடையான கொடுக்கல் வாங்கலில் பணத்தை மீள வழங்குமாறு கேட்டபோது - வழங்க மறுத்ததால் சம்பவம் நடந்தது என்று எதிர்மனுதாரர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணியால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

முதலாவது குற்றச்சாட்டான கைகளாலும், கால்களாலும், பொல்லாலும் தாக்கிய குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதால் நீதிமன்றம் இரு பகுதியினரையும் சமாதானமாகச் செல்லுமாறு கூறியது. அதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக தனக்கு நட்டஈடு வேண்டாம் என்று மனுதாரர் தெரிவித்தார். கைதடி அரச சிறுவர் இல்லத்துக்கு நால்வரும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் செலுத்த வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

இரண்டாவது குற்றச்சாட்டான மோட்டார் சைக்கிள் மற்றும் தங்கச் சங்கிலி ஆகியவற்றை அபகரித்த குற்றச்சாட்டில் அவை ஏற்கனவே மனுதாரரிடம் வழங்கப்பட்டுள்ளபோதும் இதற்குச் சமாதானம் செய்யமுடியாது என்று கூறிய **நீதிவான் நால்வருக்கும் தலா இரண்டு** வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத்தண்டனை விதித்தார். (ற-9)

பொது அறிவித்தல்
2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது.
கம்பனியின் பெயர்
பி.எஸ்.ட. எண்ட் சன்ஸ் (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம்: பீவி- 114764
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.07.02
பதிவு முகவரி: இல.191 A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
சபையின் கட்டளைப்படி
மேன்செக் சர்விசஸ் (பிறைவட்) லிமிடட்
செயலாளர் தொ. பே.
011 259 7910 011 259 7911

தவறிவிட்டது
திருநெல்வேலியைச் சேர்ந்த க. யோகேஸ்வரி என்பவரின் தேசிய அடையாள அட்டை (528161170V) யாழ்ப்பாணத்துக்கும் திருநெல்வேலிக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேலுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 685 9604

Personal / Group Classes (English)
+ General English A/L
+ Grade 6- O/L
+ Special O/L repeat Candidates
+ Spoken & Grammar Practices
Student Can get free tutes & model Papers.
077 464 9579

மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1982 உத்தரட்டாதி 7இல் செவ்வாய், சனி உடைய உயரம் - 160CM, கிரகபாவம் 24 ஆசிரியர் (BSc, M.Sc) மணமகனுக்கு அரச தொழில்புரியும் மணமகள் தேவை. 1986 இற்குப் பின் பிறந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 227 7309

வேலையாள்கள் தேவை
பட்டினசபை வீதி, சங்கானையில் இயங்கும் பற்றிக் ஆடை உற்பத்தித் தொழிற்சாலைக்கு பணியாள்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 077 538 6255

கணக்குப் பதிவாளர்கள் தேவை
நெல்லியடியில் இயங்கிவரும் தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு கணக்குப் பதிவாளர்கள் தேவை.
க.பொ.த உயர்தரத்தில் கணக்கியல் வர்த்தக பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
077 905 8252, 021 226 2941

உதவியாளர் தேவை
இணுவில் சுன்னாகத்திலே வதியும் இரு வயோதிபப் பெண்களுடன்(சகோதரிகள்) தங்கியிருந்து பணிபுரிய 35 வயதுக்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு.0212240393
0777542174

வீடு விற்பனைக்கு / வாடகைக்கு
A9 வீதிக்கும், கேரதீவு வீதிக்கும் இடையில் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து ஒரு km தூரம் உள்ள தச்சந்தோப்பில் 8 பரப்பில் அமைந்துள்ள நன்கு விசாலமான வீடு விற்பனைக்குண்டு. அல்லது வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள் / களஞ்சியசாலைக்கு உகந்தது.
தொடர்பு: 077 749 3841




ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials. (BOOK 11
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, 2016 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
உடனுக்கு உடன் பரீட்சைகள், பதிவுகள் (சான்றிதழ் 7 நாட்களில்)
இம்மாத இறுதியிலும் பரீட்சை செய்யமுடியும்
British Council'S IELTS Registration Centre
Spoken English (Veta Fluency Diploma)
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை விட்டாவது ஜனாதிபதிக்கு நான் யார் என்பதைக் காட்டுவேன்

## கொந்தளிக்கின்றார் மட்டக்களப்புத் தேரர்

கொழும்பு, ஜூலை 15
எனது உயிரை விட்டாவது நான் யார் என்பதை ஜனாதிபதிக்கு காட்டுவேன்.
இவ்வாறு மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் தலைமை விகாராதிபதி அம்பிட்டியே சுமணரட்ன தேரர் தெரிவித்தார்.
தேரரால் அவரது விகாரையில் நேற்று முன்தினம் மாலை ஊடக சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் அவர் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி 3 தடவைகள் மட்டக்களப்புக்கு வந்து சென்றார். 3 தடவையும் விகாரைக்கு வருவதற்கு விரும்பவில்லை. இங்கு மொத்தம் 3 விகாரைகள் உள்ளன. இதில் ஒன்றுக் காவது வரமறுத்தது ஏன்?
பள்ளிவாசலுக்கு செல்ல முடியும், ஆலயங்களுக்கு செல்ல முடியும். ஏன் விகாரைக்கு வருமாறு அழைப்பு விடுத்தும் அவர் வர மறுத்தது என்று எனக்கும் தெரியும். அதுபோல ஜனாதிபதிக்கும் தெரியும் என்று நினைக்கின்றேன்.

> ஜனாதிபதி 3 தடவைகள் மட்டக்களப்புக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். 3 தடவையும் விகாரைக்கு வருவதற்கு விரும்பவில்லை. இங்கு மொத்தம் 3 விகாரைகள் உள்ளன. இதில் ஒன்றுக் காவது வரமறுத்தது ஏன்?

இங்கு போர்க் காலம் முதல் இனபேதம், மத பேதமின்றி நான் தனியாளாக இருக்கின்றேன். எனது அழைப்புக்கு செவி சாய்க்காதது வேதனைக்குரிய விடயமாகும். அதனால் ஜனாதிபதியின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை நான் சேதப்படுத்தினேன். அந்தக் காட்சியை சில பன்னாட்டு ஊடகங்கள் தவறான பாதைக்குக் கொண்டு சென்றுள்ளன.
அது உண்மை இல்லை. இங்குள்ள சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பெரிய சவால்கள் தொடர்பாக பேச விரும்பிய எனக்கு ஜனாதிபதியின் புறக்கணிப்பு வேதனைப்படுத்தியது என்னை கல்வெட்டை சேதப்படுத்தும் அளவுக்குக் கொண்டுசென்றது.
நான் விவாதிக்கத் தயாராக உள்ளேன். முடிந்தால் என்னுடன் விவாதிக்க வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கின்றேன்.
இன்று நான் இங்கு இருப்பதற்கு எத்தனை உயிர்த் தியாகங்கள் இடம்பெற்றுள்ளது என்பது எனக்குத்தான் தெரியும்.
நீங்கள் என்னை தவறானவனாக சித்திரிக்கவேண்டாம். எனது உயிரை விட்டாவது நான் யார் என்பதை ஜனாதிபதிக்குக் காட்டுவேன் - என்றார். (ந-5)

## நாமலைச் சிறைக்குள் தள்ளி "சுறா" என மார் தட்டுகின்றனர்

### வெதும்புகின்றார் மகிந்த எம்.பி.

கொழும்பு, ஜூலை 15
நாமல் ராஜபக்சவை சிறை வைத்து விட்டு சுறாவைப் பிடித்து விட்டோம் என்று மார் தட்டிக்கொள்கின்றனர். நாமல் சுறா அல்ல. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
ராஜபக்சாக்களை பழிவாங்குகின்றனர். இந்தச் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. மேற்குலக நாடுகளே இதன் பின்னணியில் இருந்து செயற்படுகின்றன.
இவ்வாறான அடக்குமுறைகளால் அரசியலை விட்டு நான் ஓடிவிடப் போவதில்லை. மேலும் வலுவாகவே செயற்படுவோம்.
நாமல் ராஜபக்ச கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார். அரசியல் பழிவாங்கல் இல்லை என்று கூறமுடியாது.
சுறாவைப் பிடித்து விட்டோம் என்று நினைக்கின்றனர். நாமல் சுறா அல்ல. எமது அரசியல் பயணம் தெளிவானதாகவே உள்ளது.
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரும்போது அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை அறிவிப்போம். இந்த அரசு தேர்தலை நடத்துமா என்பதிலேயே சந்தேகம் இருக்கின்றது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நல்லாட்சி எதிர்ப்பு அணியே நாங்கள். கூட்டு எதிர்க்கட்சி என்ற வகையில் தேர்தல்களை வலுவாக எதிர்கொள்வோம் - என்றார். (ந-5)

## ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது

### சுதந்திர ஊடக இயக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15
'சத்ஹண்ட' பத்திரிகையின் சிறப்பு அம்சங்கள் பகுதி ஆசிரியரும், சுற்றுச்சூழல் தொடர்பான பத்திரிகையாளருமான தயா நெத்தசிங்க மீது கடந்த செவ்வாய்க்கிழமை காலி, நெலுவ பிரதேசத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கண்டிக்கத்தக்கது.
இவ்வாறு சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்தது.
அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
காலி நெலுவ பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையில் இடம்பெற்ற சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நீர்மின் உற்பத்தி நிலையத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சமயமே ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
நீர்மின் உற்பத்தித் திட்டம் தொடர்பாகக் கடும் அக்கறை செலுத்தி வந்த முன்னைய அரசின் அமைச்சரொருவரது ஆதரவாளர்கள் குழுவொன்றே திட்டத்தால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் என்று ஊடகவியலாளர் தெரிவித்த கருத்தால் அதிருப்தி கொண்டு தாக்குதலை மேற்கொண்டனர் என்று தெரிய வந்தது.
சுதந்திரமாகத் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு ஊடகவிய லாளர்களுக்கு ஏற்படுத்தப்படும் இத்தகைய பாதிப்பு, அச்சுறுத்தல் என்பவற்றைச் சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.- என்றுள்ளது. (ந-5)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15
சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவன தின விழாவும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.
நிகழ்வு பாடசாலையின் விவேகானந்தர் மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி றிசா தனஞ்சயன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்குப் தலைமை விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் கலந்து கொள்கின்றார். (ந-ரி4)

## தேவாலயப் பெருநாள்

யாழ்ப்பாணம், ஜூலை 15
குருநகர் புனித உத்தரிய அன்னை தேவாலயப் பெருநாள் நாளை சனிக்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.
வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழா திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.
சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு 'புனித நிலைக்கு வழிகாட்டும் எம் புனிதை' என்னும் மகுட வாக்கியத்தில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும் தேர்ப்பவனி இரவு 7.30 மணிக்கு ஆலயத்தை அடைந்து அன்னையின் திருச்சொரூப ஆசிர் வழங்கலுடன் நிறைவடையும். (ந-160)

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 15
போதைப் பொருளற்ற உலகு எனும் தலைப்பிலான கருத்தமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு வலிமேற்குப் பிரதேச சபையில் இடம்பெறும்.
வலி.மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் தலைமையில் மேற்படி கருத்தமர்வு இடம்பெறும். கலந்துரையாடலில் வலி. மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட 87 சனசமூக நிலைய பிரதிநிதிகள், சபை அலுவலக ஊழியர்கள் கலந்துகொள்வர்.
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன பிரதிநிதிகள் மேற்படி கலந்துரையாடலுக்கான வளவாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர். (ந-50)

## மின்தடை


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாணத்தில் இடைக்காட்டிலும், வவுனியாவில் ஆதி விநாயகர் கோயில் பிரதேசத்திலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சாரசபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந-ரி)

### கண்ணீர் அஞ்சலி



வணிகத்துறைத் தலைவர்
பேராசிரியர் க. தேவராஜா
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி
**அன்னம்மா கந்தையா**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு.
அவருக்கு எமது அஞ்சலியையும் அவர்களின் உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**வணிகத்துறை விரிவுரையாளர்கள்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சபையில் சாரதியாகக் கடமையாற்றும்
திரு.கை.கைலவாசீசன் அவர்களின் தந்தையார்
**அமரர் சின்னத்துரை கைலாசபிள்ளை**
அவர்களின் ஆத்மசாந்தியடைய
இன்றைய 31 ஆம் நாளில்
(15.07.2016) இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை,
யாழ்ப்பாணம்.

எங்கள் அருமை பாசச் செல்வனின்

### பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அன்னை மடியில் 10 . 06 . 1952
ஆண்டவன் பாதத்தில் 15 . 07 . 2006

**அமரர் செல்லத்துரை சிவபாதம்**

எங்களின் அருமை பாசச்செல்வன் தம்பி அண்ணா
பார்த்திபன் பாதத்தை சென்றடைந்து பத்து ஆண்டுகள் ஓடி விட்டதையா
இன்றும் எம் மனமும் உடலும் பதறுகின்றதே
நாமும் இவ்வுலகை விட்டு நீ சென்ற இடத்திற்கு வரும் வரை
எங்கள் பாச மலரை எம் உள்ளத்தில் வைத்துப் பூஜித்து வணங்குகிறோம்.

அன்னை நிழல்
செட்டியார் மடம், வட்டுக்கோட்டை.
077 621 8389

நித்தமும் உன் நினைவாக வாழும்:
உனது அக்காமார், தங்கை,
தனலட்சுமி, இராஜேஸ்வரி,
வசந்தரா.

### நீங்கா நினைவுகளுடன்

60 ஆம் ஆண்டு



இறப்பு 15 . 07 . 1956

66 ஆம் ஆண்டு



இறப்பு 26 . 09 . 1950

அமரர். அருளப்பு மேரிமாகறெற் அருளம்மா

கண்ணிமை போல் காத்தீரே, வளர்த்தீரே
மறக்க முடியவில்லையே மறவோமே எந்த நாளும் உங்கள் ஆன்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.

26A, சத்தியமூலி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
அ.மரியதாஸ் (மகன்) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி, பிரதமருடன் விரைவில் வடக்கு மீனவர்கள் சந்தித்துப் பேச்சு

### மக்கள் பிரதிநிதிகளும் உடன் இருப்பர் கடற்றொழில் அமைச்சரின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 15
இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் ஜனாதிபதியுடன் வடக்கு மக்கள் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் பங்குபற்றும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.
இதற்கு முன்னோடியான கலந்துரையாடல் எதிர்வரும் 21ஆம் திகதி நடுவண் அரசின் கடற்றொழில் அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராகவும், இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு எதிராகவும் வடபகுதி மீனவர்கள் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண சபைக்கு முன்பாகப் போராட்டம் நடத்தினர்.
இந்த விவகாரத்தில் தமக்கு நிரந்தரமான தீர்வு உடனடியாகப் பெற்றுத்தரப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்த விரும்புகின்றோம் என்றும் அப்போது குறிப்பிட்டனர்.
இதையடுத்து மீனவர் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை அழைத்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் சந்திப்பு நடத்த நடுவண் அரசின் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.
இந்தச் சந்திப்புக்கு முன்னதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் சந்திப்பு இடம்பெறும்.
யாழ். மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத்துக்கு சந்திப்புத் தொடர்பில் அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் சகலரையும் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கும் பிரதிநிதிகள் சம்மேளனத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ற-5-115)

### விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்கு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஜூலை15
க.பொ.த. (உ/த) மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் விசேட தேவையுடைய பரீட்சாத்திகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.
பரீட்சைத் திணைக்கள அலுவலர்களால், நாளை பி.ப 2 மணிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் தேர்வு இடம்பெறும்.
யாழ். மாவட்டத்தில் தோற்றும் குறித்த பரீட்சாத்திகள் மேற்படி தேர் வில் பங்கு பற்றினால் மட்டுமே சலுகைகளைப் பெறமுடியும் என வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்தார். (ற-ரி4)

### நவரத்தினராஜா ஞாபகார்த்த குறுங்கதைப் போட்டி பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15
ஊடகவியலாளர் நவரத்தினராஜா ஞாபகார்த்த குறுங்கதைப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் போட்டியில் பங்குபற்றிய அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற-ரி)

### பெருந்திருவிழா

அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.
உற்சவத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திரு விழாவும், 18ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 19ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், 20 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும். (ற-36)

### வயாவிளான் உத்தரியமாதா திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 15
வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள வயாவிளான் உத்தரியமாதா கோயில் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்குப் பங்குத் தந்தை கி.ஜெயக்குமார் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.
ஆலயத்துக்குச் செல்பவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலை 8 மணிக்கு இளவாலை பத்தாவத்தையிலிருந்து புறப்படும் பஸ் சில்லாலை, சுன்னாகம், யாழ். அருள் ஆச்சிரமக் கோயில், பருத்தித்துறை வீதியூடாக, அச்சுவேலி சென்று அங்கிருந்து வயாவிளான் செல்லும். (ற-5)



வவுனியாவில் நேற்று நடைபெற்ற தொழிற் சந்தையில் 2 ஆயிரம் இளைஞர்கள் வரையிலானோர் பங்கேற்றனர். வவுனியா மாவட்ட தொழிற் சந்தை, மாவட்டச் செயலக வளாகத்தில் நடைபெற்றது. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர, வவுனியா மாவட்ட மேலதிக செயலர் த.திரேஸ்குமார், இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனில் அபேவர்த்தன, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், ம.தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்தனர். தொழிற் சந்தையில் 36 நிறுவனங்களும் 5 தொழிற் பயிற்சி நிறுவனங்களும் கலந்துகொண்டன. (ற-5)

## போரில் அழிந்த வாகனங்களுக்கு காப்புறுதி இழப்பீடு பெற முயற்சி

### நடுவண் அரசுடன் பேச்சு நடத்தவுள்ளது யாழ். மாவட்ட முகாமைத்துவ சம்மேளனம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
போரால் அழிந்த வாகனங்களுக்குரிய காப்புறுதியை அரசுடன் பேச்சு நடத்தி, விசேட அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாகப் பெற முயற்சிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.
இவ்வாறு யாழ்.மாவட்ட முகாமைத்துவ சம்மேளனம் தெரிவித்தது.
போரின்போது கைவிடப்பட்ட வாகனங்கள் பல உரிமையாளர்களுக்கு மீளக் கிடைக்கவில்லை. பெருமளவான வாகனங்கள் அழிந்துள்ளன. அவற்றுக்குரிய காப்புறுதிப் பணம் காப்புறுதி நிறுவனங்களால் வழங்கப்படவில்லை. காப்புறுதிப் பணம் கிடைக்காத வாகன உரிமையாளர்கள் யாழ். மாவட்ட முகாமைத்துவ சம்மேளனத்தில் கூடி ஆராய்ந்தனர். நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை கலந்துரையாடல் நடந்தது.
போரால் வன்னியில் தமது வாகனங்கள் சிக்குண்டு அழிந்துவிட்டன என்று கலந்துரையாடலுக்கு வந்தவர்கள் தெரிவித்தனர். இந்த வாகனங்கள் காப்புறுதிகள் செய்யப்பட்டிருந்தபோதும் காப்புறுதி நிறுவனங்கள் இழப்பீடு தரவில்லை என்றும் அவர்கள் குறைப்பட்டனர்.
7 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தமக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுத் தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.
கலந்துரையாடலின் முடிவில் இது சம்பந்தமாக நடுவண் அரசுடன் பேச்சு நடத்தி சிறப்பு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அதனூடாக இழப்பீடுகளைப்பெற்றுக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. (ற-5-106)

## அரச வேலைவாய்ப்பில் காணப்படும் வெற்றிடங்களை அந்தந்த மாவட்டத்தவரைக் கொண்டே நிரப்ப வேண்டும்

### வடக்கு உறுப்பினர் ரவிகரன் மாகாண சபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், ஜூலை 15
வடக்கு மாகாணத்தில் அரச பணிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும்போது அல்லது புதிய வேலை வாய்ப்புக்களை வழங்கும்போது வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் ஆளணித் தேவைகளின் அடிப்படையில் அந்த மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பொருத்தமானவர்களுக்கு நியமனம் வழங்கப்படவேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிரகரன் வலியுறுத்தினார்.
"வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்போது மாகாண மட்டத் திறமைகள் பார்க்கப்படுகின்றன. இதனால் மாவட்ட ரீதியாக முல்லைத்தீவு மாவட்டம் பாதிக்கப்படுகின்றது. மாவட்டத்தின் வறுமை நிலைக்கு இதுவும் காரணம். போரில் பாதிக்கப்பட்டிருக்கும் எமது மாவட்டம் மட்டுமல்லாது ஏனைய மாவட்டங்களினதும் இளைஞர் - இளம் பெண்களின் வாழ்வைக் கருத்திற்கொண்டு மாகாண மட்டத் திறமை நிலையை மாற்றி, அந்தந்த மாவட்டத்தின் வெற்றிடங்கள் அந்தந்த மாவட்டத்தின் திறமைகளின் அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்" என்ற பிரேரணையை ரவிகரன் மாகாண சபையில் முன்வைத்தார்.
அதனை முன்மொழிந்து உரையாற்றும்போது அவர் தெரிவித்ததாவது:
இதை நான் வடக்கு மாகாணத்தில் புதிதாக அறிமுகம் செய்யவில்லை. கிழக்கு மாகாணத்தில் அரச பணிகளில் உள்ள வெற்றிடங்கள் அந்த மாகாணத்தின் மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் அந்த மாவட்டங்களை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பொருத்தமானவர்களைக் கொண்டே நிரப்பப்படுகின்றன.
அதற்கு ஆதாரமாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட, கிழக்கு மாகாண பொதுச் சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை, கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு திருகோணமலை மாவட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஆகியவற்றைக் குறிப்பிடமுடியும்.
மாகாண அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதால் முல்லைத்தீவு மாவட்டம் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் பின்தங்குகின்றது. இந்த மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு அலுவலகங்களிலும் முல்லைத்தீவைச் சொந்த இடமாகக் கொண்டவர்களைவிட அதிகமாக வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே கடமை புரிகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 41 ஆயிரத்து 865 குடும்பங்கள் உள்ளன. 21 ஆயிரத்து 702 பேர் வேலையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். வடக்கு மாகாணத்தின் பிற மாவட்டங்களின் சனத்தொகைக்கும் வேலையற்றவர்களுக்கும் இடையேயான விகிதாசாரத்தை ஒப்பிடும்போது வேலையற்றோர் விகிதாசாரம் முல்லைத்தீவில் அதிகமாக உள்ளது. உழைப்பாளர்களைச் சார்ந்து வாழ்வோர் தொகையை அதிகரிக்கச் செய்கின்றது. இதுவே வறுமைக்கும், பட்டினி போசாக்கின்மை போன்ற நிலைமைகளுக்கும் காரணமாக அமைகின்றது.
முல்லைத்தீவு கடந்த முப்பது வருட காலப் போரால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். இங்கு ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. அங்கங்களை இழந்தவர்கள், சொத்தை இழந்தவர்கள் என்று இழப்புக்களிடையே வாழ்பவர்களாகவே ஒவ்வொரு குடும்பத்தினரும் காணப்படுகின்றனர்.
மாகாண மட்டத்தில் ஒப்பீட்டளவில் இழப்புக்களுடனும் பாதிப்புக்களுடனும் போட்டியிட்டு வேலைவாய்ப்புக்களை வென்றெடுக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. கல்வி கற்றவர்கள் வேலை வாய்ப்பைப் பெறாத சந்தர்ப்பங்களில் அது எமது மாவட்டத்தில், போருக்குப் பின்னரான சூழலில் மேலும் வறுமையையும் விரக்தியையும் எம்மிடையே தோற்றுவிக்கும்.
போர் வடுக்களுடன் எமது சமூகம் மீண்டும் தனது சொந்தக் காலில் எழுந்து நிற்கவேண்டும் என்றால் எம்மை இவ்வாறான விடயங்களினூடாக கைதூக்கி விடவேண்டும் என்று மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுச் சீட்டு கண்டெடுப்பு

தென்மராட்சி, ஜூலை 15
சங்கானையில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வராசா தினேஸ் என்பவரின் கடவுச் சீட்டு கண்டெடுக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப் பட்டது
உரியவரை அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.
(ற-9)

## ஆங்கில கவிதை கூறல் போட்டியில் சிவானி முதலிடம்



யாழ்ப்பாணம், ஜூலை 15
சித்தங்கேணி பிளவத்தை அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளது என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.
47 மாணவர்கள் மட்டுமே கல்வி கற்கும் மேற்படி பாடசாலையிலிருந்து, கோட்ட மட்ட ஆங்கில தினக் கவிதை கூறல் போட்டியில் தரம் 3 மாணவி செல்வி சிவானி சிவனேசன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். தரம் 3, 4, 5 மாணவர்களுக்கான குழுப் பாடல் போட்டியில் 3 ஆம் இடம் கிடைத்தது என்றும் அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ற-5-ரி4)

# அரச வேலை என்ற மனோநிலை இளையோரிடம் மாறவேண்டும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் அறிவுரை



யாழ்ப்பாணம், ஜூலை 15
அரச வேலைதான்வேண்டும் என்ற மனநிலை எமது இளைஞர்களிடம் இருந்து மாற வேண்டும். எல்லோருக்கும் அரச வேலை கிடைப்பது இயலாத காரியம். தனியார் துறைகளிலும் வேலை செய்வதற்கு இளைஞர்கள் தயாராக இருக்க வேண்டும்.
இவ்வாறு வடக்கு அரசின் போக்குவரத்து, வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு கனடாவில் குடியேறி தற்போது மீண்டும் உடுப்பிட்டிக்கு வந்து சொர்ணலிங்கம் நிறுவியுள்ள ஆடை தொழிற்சாலையை பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
ஆடைத் தொழிற்சாலையில் பல பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. நல்ல தரமான ஆடைகளை உற்பத்தி செய்கின்றனர். உற்பத்திசெய்யப்படும் ஆடைகளுக்கான சந்தைவாய்ப்பு உரியமுறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு எம்மால் செய்யக்கூடிய நடவடிக்கைகளைச்செய்வோம்.
வெளிநாட்டிலிருந்து வந்து இங்கு இவ்வாறு முதலீடு மேற்கொள்ளும் முதலீட்டாளர்களை நாங்கள் ஊக்குவிக்க வேண்டும். அவர்களை ஊக்குவிப்பதன் ஊடாகவே எமது பகுதி இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்க முடியும். தென்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளுக்கு நிகராக இங்கே ஆடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எமது வர்த்தகர்கள் தென்பகுதியைச் சார்ந்திருக்காது இவ்வாறான உள்ளூர் உற்பத்திகளையும் ஊக்குவிக்கவேண்டும்.
இந்தஆடைத்தொழிற்சாலைக்கு முகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்கு பலவிளம்பரங்களை மேற்கொண்டும் எவரும் வருகின்றார்கள் இல்லை என்று முதலீட்டாளர் கவலை தெரிவித்தார். எமது இளைஞர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கின்றனர். அவர்கள் இவ்வாறான பதவிகளுக்கு விண்ணப்பித்து வேலைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
எல்லோரும் அரச வேலையை எதிர்பார்த்திருக்க முடியாது. அரச வேலை எல்லோருக்கும் கிடைக்காது. தனியார் துறையிலும் வேலையாற்றுவதற்கு எமது பகுதி இளைஞர்கள் தங்களின் மனநிலையை மாற்றிக் கொள்ளவேண்டும் - என்றார்.
(ற-5)

## விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜூலை 15
குருநகர் பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 18ஆம் திகதி முதல் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று யாழ். மாநகரச சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.
எதிர்வரும் 18 ஆம் திகதி, மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை புதிய பூங்கா வீதியிலும், மு.ப.11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணிவரை புதிய வீடமைப்புத் திட்ட வீதியிலும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணிவரை தொடர்மாடி குடியிருப்பிலும் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.
எதிர்வரும் 20ஆம் திகதி மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகிலும், மு.ப.11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணிவரை திருநகர் மாணவர் படிப்பகத்திலும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை பழைய பூங்காவீதி சிறுவர் நீதி மன்றப் பகுதியிலும் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.
எதிர்வரும் 21ஆம் திகதி மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை இராஜசிங்கம் வீதி மாதா சிலையடிப்பகுதியிலும், மு.ப.11 மணியிலிருந்து பி.ப. ஒரு மணி வரைமத்தியூஸ்வீதிசென்சாள்ஸ் ஆரம்ப பாடசாலைப் பகுதியிலும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை குருசோவீதி கிறின்பில்ட் வாசிகசாலைப் பகுதியிலும் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.
வளர்ப்பு நாய்களுக்கு உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தி தடுப்பு ஊசியை ஏற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
(ற-ரி4)

# அரச படை போர் நடத்திய அனைத்து இடங்களிலும் பேய்தான் உலாவுகின்றது

## அதில் அமைச்சர் ஹரிசனுக்கும் பங்குண்டு என்கின்றார் வடக்கு உறுப்பினர் சிவநேசன்

வவுனியா, ஜூலை 15
ஓமந்தையில் மட்டுமல்ல மேற்கே சிலாவத்துறையில் இருந்து கிழக்கே முள்ளிவாய்க்கால் வரை அரச படைகள் போர் நடத்திய அத்தனை இடங்களிலும் பேய்கள்தான் உலாவுகின்றன. அந்த இடங்கள் சுடுகாடாய்த்தான் இருக்கின்றன. வடக்கின் இந்த நிலைக்கு நடுவண் அரசின் அமைச்சர் ஹரிசனும் பங்காளிதான் என்பதை அவர் மறந்து விடக்கூடாது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் க.சிவநேசன்.
நடுவண் அரசின் அமைச்சர் ஹரிசன், பேய்கள் உலாவரும் இடத்தில் எவரும் கட்டடங்கள் அமைக்க மாட்டார்கள் என்று பொருளாதார வலய அமைவிடம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.
அதில் தெரிவித்துள்ளதாவது:
அமைச்சர் ஹரிசனின் கருத்து கண்டனத்துக்குரியது. அமைச்சரின் கூற்று அவரது பேரினவாத மனநிலையை தெளிவாகக் காட்டுகின்றது. பொருளாதார வலயத்தை ஏதேனும் காரணங்களைக் காட்டித் தனது பிரதேசமான மதவாச்சிக்கு மாற்றுவதிலேயே அமைச்சரின் கவனம் குவிந்திருப்பது வெளிப்படையானது. வன்னி மக்களின் வாக்குகளால் நடுவண் அரசில் அமைச்சர் பதவி பெற்றவர்கூடத் தனது உறவினர்களின் வியாபார மேம்பாட்டைக் கருதி இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றார்.
வியாபாரம் சார்ந்து, அரசியல் வளர்த்துச் செயல்படுவதற்கு வடக்கு மக்களின் நலன்கள் குழி தோண்டிப் புதைக்கப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது.
ஓமந்தை போர் தொடங்க முன்பு வளமான விவசாயப் பிரதேசமாகவும், கல்வியில் சிறந்ததாகவும், சிறந்த வியாபார தளமாகவும் சிறப்புற்று இருந்தது அமைச்சருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.
அமைச்சர் கூறிய பேய்கள் உலாவும் அந்தப் பிரதேசத்தில் சிதைக்கப்பட்ட கோவில் ஒன்றை தனி ஒரு நபரின் நிதியில் எட்டு மாத காலத்தில் 150க்கும் குறைவான தொழிலாளர்களின் உதவியுடன் 35 கோடி ரூபா பணத்தில் கட்டி அந்தப் பகுதியை வளம்படுத்தவும் ஆற்றுப்படுத்தவும் முடியுமானால், பொருளாதார வலயத்தை ஆறு மாத காலத்தில் அமைத்து மக்களின் பயன்பாட்டுக்கு அமைச்சரால் ஏன் வழங்கமுடியாது ?
திட்டமிட்டு சுடுகாடாக்கப்பட்ட பிரதேசங்களை வளப்படுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், எதிர்கால அபிவிருத்திக்கும் ஏற்ற இடங்களாக்குவதற்கு மாகாண அரசு கடுமையாகப் போராடி வருகின்றது.
அபிவிருத்தி என்ற பெயரில் ஏற்கனவே அமைக்கபட்ட பயனுள்ள விடயங்கள், கட்டமைப்புகள் அழிக்கப்படுவதை ஏற்க முடியாது. விவசாயக் கல்லூரி அதனுடன் இணைந்த பாரம்பரியமான விதை மற்றும் கன்றுகளை உற்பத்தி செய்யக்கூடிய தாய்த்தாவரப் பண்ணை, நாற்றுமேடைகள், நீண்ட காலமாகவே குடியிருந்துவரும் மக்கள் குடியிருப்புகள் போன்றவற்றைச் சிதைத்து அந்த இடத்தில் இன்னும் ஓர் அபிவிருத்தியைக் கொண்டுவரவேண்டும் என்று எண்ணும் நடுவண் அரசின் அமைச்சரின் பிடிவாதம் மிக கொடூரமான மனநிலை.
வடக்கின் பொருளாதார மத்திய நிலையமாக கிளிநொச்சி நகரின் பிரதான சந்தையே போருக்கு முன்னர் இயங்கியது. வடக்கின் பொருளாதார மையமாக மாங்குளம் பல சந்தர்பங்களில் பல தரப்பினராலும் இனம் காணப்பட்டது. பல வகைகளிலும் அதுவே பொருத்தமான இடம் என்பது எமது நிலைப்பாடு. இருந்தும்கூட ஓமந்தையா? தாண்டிக்குளமா? என்று வரையறுக்கப்பட்ட தெரிவில் இயலுமானளவுக்கு வடக்கை நோக்கியதாக ஓமந்தையைத் தெரிவு செய்ய நாம் ஒத்துழைப்பு வழங்கினோம்.
சாமி வரம் கொடுத்தாலும் பூசாரிகள் இடம் கொடுக்காத கதையாகவே வடக்குக்கான அபிவிருத்தித் திட்டங்களின் இன்றைய நிலை காணப்படுகின்றது. பேரினவாதப் பேய்களை விரட்டுவதன் மூலமும் பேரினவாத சிந்தனைகளை தோற்கடிப்பதன் மூலமுமே வடக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் பிரதேச மக்களிடம் பயனுள்ளதாக சென்றடையும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றுள்ளது. (ற-5-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு தொற்றுக்குள்ளாவோர் யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

தென்மராட்சி, ஜூலை 14

யாழ். மாவட்டத்தில் டெங்குத் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இவ்வாறு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது.

இலங்கையில் டெங்குத் தொற்று அதிகம் காணப்படும் மாவட்டங்களின் வரிசையில் யாழ். மாவட்டம் 5ஆவது இடத்தில் உள்ளது. யாழ். மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசம் (சாவகச்சேரி வைத்திய அதிகாரி பிரிவு) டெங்குத் தொற்றில் முதலிடத்தில் உள்ளது.

தென்மராட்சியில் கடந்த ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் 250க்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்குள்ளாகினர். அந்தக்காலப்பகுதியில்பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளமே டெங்குத் தொற்று அதிகரிக்கக் காரணமாக இருந்தது.

> தற்போது தென்பகுதிக்குச் சென்று வருபவர்களே தொற்றுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. தென்பகுதிக்குச் செல்வோர் டெங்கு தொற்று தொடர்பில் அவதானமாகவும், நுளம்பு வலைகள் போன்றவற்றவற்றைப் பாவிப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் டெங்குத் தொற்று குறைந்திருந்தது. ஏப்ரல், மே மாதங்களில் பெய்த மழையை அடுத்து டெங்குத்தொற்று, உண்ணிக் காய்ச்சல் என்பன தென்மராட்சியில் மீண்டும் தலைதூக்கின.

ஏப்ரல் மாதம் 14 பேரும், மே மாதம் 17 பேரும், ஜூன் மாதம் 22 பேரும், ஜூலை மாதம் கடந்த 10 ஆம் திகதி வரை 10 பேரும் டெங் குத் தொற்றுக்குள்ளாகி சாவகச் சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை சுகாதார அமைச்சின் நடுவண் செயலகம், ஜனாதிபதி செயலக விசேட பணியகம், மாகாண சுகாதார அமைச்சு என்பன விசேட டெங்குக் கட்டுப்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுத்தன. அதனால் மாவட்டத்தில் டெங்குத்தொற்று குறைந்திருந்தது.

தற்போது தென்பகுதிக்குச் சென்று வருபவர்களே தொற்றுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தென்பகுதிக்குச் செல்வோர் டெங்கு தொற்று தொடர்பில் அவதானமாக இருக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். நுளம்பு வலைகள் போன்றவற்றவற்றைப் பாவிப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

உசன், பெற்பெலி(கெற்பேலி), பாலாவி, விடத்தற்பளை ஆகிய பகுதிகளில் சிறிய பழுப்பு நிற நுளம்புகள் பெருமளவு காணப்படுகின்றன என்று பொதுமக்கள் கூறுகின்றனர். அவற்றை நுளம்பு வலைகளாலும் கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கும் அவர்கள், மாவட்ட பூச்சியியல் ஆய்வுத்துறையினர் அந்த நுளம்புகள் குறித்து ஆய்வு செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தனர். (ற-9)

---

## போத்தல் கள் விலையும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் போத்தல் கள்ளின் விலையை அதிகரித்துள்ளது.

தற்போது ஒரு போத்தலில் அடைக்கப்பட்ட கள் நூறு ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னர் போத்தலில் அடைக்கப்பட்ட கள் 80 ரூபாவாக விற்கப்பட்டது. போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளுக்கான அனுமதிப் பத்திர வரி அதிகரிக்கப்பட்டதால் கள்ளின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சமாசத்தின் தலைவர் என். கணேசன் தெரிவித்தார். (ற-17)

---

## 50 சதவீத வீட்டுத் திட்ட பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்படும் அரச வீட்டுத்திட்டப்பணிகளில் 50 சதவீதமானவை நிறைவு பெற்றுள்ளன.

இவ்வாறு வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

312 வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் நடைபெறுகின்றன. பயனாளிகளுக்கு இரண்டு கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு விட்டன. மூன்றாம் கட்டக் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும் – என்றார். (ற-17)

---

## மாறிப்போன தந்தியினால் கிண்டலுக்கு ஆளான அலுவலர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

“சுகவீனம் காரணமாக இன்று கடமைக்கு சமுகமளிக்க முடியவில்லை” என்று அடிக்கப்பட்ட தந்தி, “சுகவீனம் காரணமாக இன்று பாடசாலைக்கு சமுகமளிக்கமுடியவில்லை” என்று பெறுநர் கைக்குச் சென்று சேர்ந்திருக்கின்றது. தந்தி அனுப்பிய நபர், தனது அலுவலகத்தில் ஏனையோரின் கிண்டலுக்கு ஆளானார்.

கொக்குவிலைச் சேர்ந்த ஒருவர் கிளிநொச்சியில் அரச அலுவலகத்தில் பணியாற்றுகின்றார். சில தினங்களுக்கு முன்னர் சுகவீனம் காரணமாக விடுமுறையில் நின்றுள்ளார். அலுவலகத்துக்கு வேறு நபர் ஒருவர் ஊடாக தந்தி அனுப்பினார்.

மறுநாள் அலுவலகத்துக்குச் சென்றபோது, சக ஊழியர்கள் அவர் விடுமுறைக்காக அனுப்பிய தந்தியை வைத்து கிண்டல் செய்தனர். தந்தி, “சுகவீனம் காரணமாக இன்று பாடசாலைக்கு சமுகமளிக்க முடியவில்லை” என்று மாறி அனுப்பப்பட்டமை தெரியவந்தது.

தந்தியின் மூலப் பிரதியை வாங்கிப் பார்த்தபோது மூலப்பிரதியில், “சுகவீனம் காரணமாக இன்று கடமைக்குசமுகமளிக்கமுடியவில்லை” என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. தந்தி அனுப்பிய தபால் திணைக்களத்தினரே தந்தியை மாற்றியனுப்பியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ற-5-ரி4)

---

## சகாய நல நிதித் திட்டத்தில் புதிய நலத் திட்டம் இணைப்பு

### பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சகாய நல நிதித் திட்டத்தில் மற்றுமொரு நலத்திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர் ஒருவர் திடீரென இறந்தால் அவருக்கு இந்த நலத்திட்டம் ஊடாக உடனடியாக ஐம்பது ஆயிரம் ரூபா நிதி வழங்கும் புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்று சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சமாசத்தின் இந்த சகாய நலத்திட்டத்தில் கூட்டுறவுப் பணியாளர்கள், அங்கத்தவர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் இணைந்து வருகின்றனர்.

இந்த சகாய நல நிதித்திட்டத்தின் மூலம் பலர் நன்மை பெற்றும் வருகின்றனர். திட்டத்தை மேலும் விரிவாக்கி புதிய புதிய திட்டங்களை அதில் உள்ளடக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே விபத்து ஒன்றில் சிக்கி இறப்பு சம்பவிக்கும் ஒருவருக்கு உடனடியாக இரண்டு இலட்சம் ரூபா நிதியும் விபத்தால் காயப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

சமாசத்தின் இந்தச் சகாய நல நிதித் திட்டத்தில் இணைந்தவர்கள் நன்மை பெற்றும் வருகின்றனர்.

இந்தத் திட்டத்தில் சகல கூட்டுறவுப் பணியாளர்களும் அங்கத்தவர்களாக இணைந்து பயன்பெற முடியும் – என்றார். (ற-17)

---

## கடந்த 7 மாதத்தில் 95 பேருக்கு சமுதாய சீர்திருத்தக் கட்டளை

### பருத்தித்துறை நீதிவான் மன்ற சமுதாயம் சார் சீர்திருத்த அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் கட்டளைக்கு அமைய இந்த ஆண்டு 95 பேர் சமுதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு ஆன்மிக வழிகாட்டல், உளவள ஆலோசனை, மது வெறுப்புச் சிகிச்சை என்பன வழங்கப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை நீதிவான்மன்ற சமுதாயம்சார் சீர்திருத்த அதிகாரி சி. இதயதீபன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான 7 மாத காலப் பகுதிக்குள்ளேயே இவர்களுக்கு சமுதாய சீர்திருத்தக் கட்டளை நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளது.

55 பேர் மது போதையில் வாகனம் செலுத்தியமைக்காவும், 25 பேர் கசிப்பு உற்பத்தி மற்றும் சாராய விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலும், எஞ்சியோர் சிறுகுற்றங்களில் ஈடுபட்டமைக்காகவும் சமுதாயம் சார் சீர் திருத்தக் கட்டளைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பருத்தித்துறை நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸ் நிலைய பொலிஸாரால் அவர்களுக்கு எதிரான வழக்குகள் தொடுக்கப்பட்டன. நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுவதுடன், அபராதத்துடன் கூடிய சமுதாயசீர் திருத்தக் கட்டளையும் வழங்கப்படுகின்றது.

குடிபோதையில் வாகனம் செலுத்தியமை, கசிப்பு உற்பத்தி, திருட்டு, வீட்டு வன்முறை போன்ற குற்றச் செயல்களுக்கு சமூதாய சீர் திருத்தக் கட்டளை கட்டாயமாக வழங்கப்படுகிறது. நீதிமன்றால் அறவிடப்படும் தண்டப் பணத்தைச் செலுத்த தவறுபவர்களை சமுதாயசீர் திருத்தத் பிரிவு பொறுப்பேற்கின்றது.

சமுதாய சீர்திருத்தக் கட்டளை வழங்கப்பட்டவர்களுக்கு ஆன்மிக வழிகாட்டல், உளவள ஆலோசனை, மதுவெறுப்பு சிகிச்சை, போதைப்பொருள் – புகைத்தல் விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகின்றன – என்றார். (ற-5-107)

---

## மீனவர் காப்புறுதித் திட்டத்துக்கு உடன் பதிவுகளை மேற்கொள்க

### யாழ். நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

மீனவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டத்தில், யாழ். மாவட்டத்திலுள்ள சகல மீனவர்களும் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா அறிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மீன்பிடித்துறை மற்றும் நீரியல்வள அமைச்சின் ஊடாக மீனவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள 14 மீன்பிடிப் பரிசோதகர் பிரிவுகளிலும் உள்ள 21 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் தமது பதிவுகளை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


பதிவுகள் அனைத்தும் இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படவேண்டும். தவறும் பட்சத்தில் மீனவர்கள் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதியை இழக்க நேரிடும்.

திடீர் விபத்து, சொத்து அழிவு, கடற்கலம் காணாமற்போதல் போன்ற சம்பவங்களால் கடந்த காலங்களில் பல மீனவர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்திருந்தனர். தற்போதைய அரசின் ஊடாக மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 1 மில்லியன் ரூபா காப்புறுதி வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அந்தந்தப் பகுதிகளுக்குரிய மீன்பிடிச் சங்கங்கள் மற்றும் சமாசங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கங்கள் ஊடாகப் பதிவை மேற்கொள்ள முடியாதவர்கள் அந்தப் பகுதிக்குரிய மீன்பிடிபரிசோதகர் மூலம் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

இந்த இறுதிக் கட்டப் பதிவைக் கொண்டே இனிவரும் காலங்களில் படகுகள், வலைகள் போன்ற கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்கு மீன்பிடி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. – என்றார். (ற-5,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை சந்தித்துப் பேசினார். இருதரப்பு பொருளாதார, வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு ஊக்கமளிக்க அமெரிக்கா வலுவான ஆதரவு வழங்கும் என்று அவர் உறுதியளித்தார்.
அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக, முதலீடுகளை அதிகரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ற-5)

# கடத்தப்பட்டோர் உயிருடன் என பெற்றோருக்கு வைபரில் தகவல்

கொழும்பு, ஜூலை 15
2008ஆம் ஆண்டு தெகிவளை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கடத்தப்பட்ட 5 மாணவர்கள் உயிருடனேயே உள்ளனர் என்று கடத்தப்பட்ட மாணவன் ஒருவனின் தாயாருக்கு இவ்வாறு வைபர் ஊடாகத் தகவல் வழங்கப்பட்டது.
மாணவர் கடத்தல் வழக்கு கோட்டை நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. வழக்கு முடிந்து வெளியே வந்த பெற்றோர் இதனைத் தெரிவித்தனர்.
ராஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் இராமலிங்கம் ஆகியோருடன் மொஹமெட் சஜித், மொஹமட் டிலான் ஆகிய 5 மணவர்கள் உள்ளிட்ட 11 பேர் 2008ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தலை நகரின் பல பிரதேசங்களில் இருந்தும் கடத்தப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது
அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தகவல்களும் இதுவரை இல்லை. கடந்த 10 ஆம் திகதி இரவு வைபர் ஊடாக கடத்தப்பட்ட ராஜீவ் நாகநாதனின் தாய்க்கு அவரது மகன் உள்ளிட்ட ஐவரும் உயிருடன் இருக்கின்றனர் என்ற தகவல் கிடைத்தது என்று தெரிவித்தனர்.
ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட பலர் திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர் என்றும், அது இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்றும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். அவர்களை மீட்டுத் தருமாறும் அவர்கள் கோரிக்கையை முன்வைத்தனர். (ற-5)

# தூய்மையான சிங்களவர் இருக்கும்வரை சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை

## நல்லாட்சி அமைச்சர் சம்பிக்க ரணவக்க எகத்தாளம்

கொழும்பு, ஜூலை 15
இந்த நாட்டில் ஹெல உறுமய - தூய்மையான சிங்கள மக்கள் இருக்கும் வரையில் ஒரு போதும் கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழ் அரசியல் தரப்புக்கள் கூட்டாட்சியைக் கைவிட்டு ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.
இவ்வாறு நல்லாட்சி அரசின் அமைச்சரான சம்பிக்க ரணவக்க கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
நல்லிணக்கம், அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் எனில், தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் தமது பிரிவினை வாத, இனவாத கொள்கைகளையும், கூட்டாச்சிக் கொள்கைகளையும் கைவிட வேண்டும்.
ஆனால் தமிழர் தரப்பு கிடைக்காத சமஷ்டி முறையை எதிர்பார்த்து செயற் பட்டு வருகின்றது. இலங்கையில் சமஷ்டி என்ற பேச்சுக்கே இட மில்லை. சமஷ்டிக் கோரிக்கையை உடனடியாகக் கைவிட்டு ஒன்றிணைந்து ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

> நாம் இருக்கும் வரையில், தூய்மையான சிங்கள மக்கள் இருக்கும் வரையில் ஒரு போதும் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. சமஷ்டியைக் கைவிட்டு ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

தமிழ் இராச்சியம் இருக்கின்றது என்ற எண்ணத்தில்தான் தமிழ் அரசியல் தரப்புக்கள் செயற்பட்டு வந்தன. இதற்கு இறுதி வடிவம் கொடுக்க அரசியல் - ஆயுத ரீதியாகப் போராடினார்கள். ஆயுதப் போராட்டத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது. அரசியல் ரீதியில் சமஷ்டி - உச்சக்கட்ட அதிகாரப் பகிர்வு என்ற கதைகளையும் கூறி பிரிவினைகளைத் தூண்டுகின்றனர்.
நல்லிணக்கம் பலமாக வேண்டுமானால், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற கதைகளை இவர்கள் கைவிடவேண்டும். பிரிவினைவாதம் ஊடாக தனிநாடு அமைக்கலாம் என்ற கொள்கையையும் கைவிடவேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் - சிங்கள மக்கள் ஒன்றாக வாழ முடியும் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும்.
தமிழ் அரசியல் தரப்பினர் நாடாளுமன்றத்தில் ஒரு கருத்தைக் கூறுகின்றனர். தமிழ் மக்கள் மத்தியில் தமது கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கும் போது பிரிவினைவாதக் கருத்துக்களை முன்வைக்கின்றனர். தமிழ் மக்கள் மத்தியிலும் நாடு பிரியாது, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.
நாம் இருக்கும் வரையில், தூய்மையான சிங்கள மக்கள் இருக்கும் வரையில் ஒருபோதும் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. சமஷ்டியைக் கைவிட்டு ஐக்கிய இலங்கையைக் கட்டி யெழுப்ப முன்வரவேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் பொய்யான கதைகளைக்கூறி கிடைக்காத சில விடயங்களை பன்னாடுகளின் உதவியுடன் பெற்றுத் தருவோம் என்று கூறுகின்றனர். இந்தப் பொய் கதைகளை மக்கள் நம்பி ஏமாறக் கூடாது - என்றார். (ற-5)

# 6 மாத விசாரணையின் பின்பே நாமல் ராஜபக்ச கைது

## அரசியல் பழிவாங்கல் ஏதுமில்லை என்று பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா விளக்கம்

கொழும்பு, ஜூலை 15
ஆறு மாதங்கள் விசாரணை நடத்தப்பட்டது. உரிய நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. அதன் பின்னரே மகிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ச கைது செய்யப்பட்டார். இது அரசியல் பழிவாங்கல் அல்ல. இவ்வாறு பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அங்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாமலின் கைதால் அரசு சந்தோசமடைகிறதா என்று மகிந்த ராஜபக்ச கேட்கின்றார். கைதுக்கும், அரசுக்கும் எந்தத் தொடர்புமில்லை. சட்டம் தனது கடமையைச் சரிவரச் செய்துள்ளது. நாட்டில் தற்போது சட்டத்தின் ஆட்சி இடம்பெறுவதையிட்டே அரசு மகிழ்ச்சியடைகின்றது. நாமல் ராஜபக்ச ஏன் கைது செய்யப்பட்டார் என்று பலருக்கு உரிய விளக்கமில்லை. பல கோணங்களில் கதை கட்டப்படுகின்றது. அது பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டி யுள்ளது.
ஊழல் எதிர்ப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினருமான வசந்த சமரசிங்க, நாம லுக்கு எதிராக கடந்த டிசெம்பரில் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய் தார். அரசால் செய்யப்பட்ட முறைப்பாடு அல்ல.
கிரிஷ் நிறுவன கட்டடத்துக்காக 70 மில்லியன் ரூபா பணத்தை நிமல் பெரேரா என்ற நபரின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு நாமல் ராஜபக்ச தெரிவித்தார். வைப்பிலிடப்பட்ட பணத்தை அவர் நிமல் பெரேராவிடமிருந்து பெற்றுக்கொண்டார். அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது எனத்தெரியவில்லை.
2013 ஒக்ரோபரில் நடைபெற்ற சுப்பர் ரக்பி போட்டிக்காக அந்த நிதி பயன்படுத்தப்பட்டது என்று நாமல் கூறினார். அதற்கான ஆதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
சட்டமா அதிபர் அவருக்கு எதிரான குற்றப்பத்திரத்தை சமர்ப்பிப்பார். வழக்கு விசாரணைகள் நடக்கும். அரசு எந்த வகையிலும் அதில் தலையிடாது. நீதித்துறை சுயாதீனமாக இயங்குகின்றது. 'பி' அறிக்கையில் எல்லா விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.
நாமல் கைது செய்யப்படுவார் என்று அரச தரப்பிலிருந்த எவரும் பெயர் குறிப்பிட்டு முன்கூட்டியே சொல்லவில்லை. 6 மாதங்களின் விசாரணையின் பின்னரே கைது இடம்பெற்றது. இதை குறுகியகால நடவடிக்கை என்றும் குறிப்பிடமுடியாது - என்றார். (ற-5)

# தங்கக் கட்டி கடத்தியவர் சிக்கினார்

இந்தியாவுக்கு 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்கக்கட்டிகளைக் கொண்டு செல்ல முயற்சித்தவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த (வயது-48) நபரே கைது செய்யப்பட்டார்.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 11.30 மணிக்கு இந்தியாவின் மும்மை நகருக்குச் செல்லும் இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் அவர் தங்கக் கட்டிகளைக் கடத்திச் செல்ல முற்சித்தார்.
பாதணியின் அடிப்பாதத்தில் 6 தங்கக் கட்டிகளை மறைத்துச் செல்லமுற்பட்டார். அவை அரசுடமையாக்கப்பட்டுள்ளன. கடத்த முற்பட்டவருக்கு ரூபா 1 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-5)

# பாரத லக்ஷ்மன் கொலை தீர்ப்பு செப்ரெம்பர் 8 இல்

கொழும்பு, ஜூலை 15
பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட நால்வரின் கொலை வழக்கின் தீர்ப்பு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்றுடன் முடிவடைந்தது.
கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ராண் குணரட்ன, பத்மினி என் ரணவக்க, என்.சி.பி.சி. மொராயஸ் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணை இடம்பெற்றது. செப்ரெம்பர் 8 ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும் என்று நீதிமன்ற நீதிபதிகள் குழாம் அறிவித்தது.
பிரதிவாதியான துமிந்த சில்வா, சிகிச்சைகளுக்காக வெளிநாடு செல்வதற்கு நீதிபதிகளின் அனுமதியைக் கோரியிருந்தார். விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் அந்த வேண்டுகோளை நிராகரிக்கின்றோம் என்று நீதியரசர்கள் குழாம் தெரிவித்தது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் அவசியம்

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம வலியுறுத்துகின்றார்



கொழும்பு, ஜூலை 15
இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டியது அவசியம்.
இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் விசார ணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம வலியுறுத்தினார்.
கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய நேர் காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
போரின் இறுதித் தருணத்தில் பஸ்களில் ஏற்றப்பட்டுஅழைத்துச்செல்லப்பட்டு, காணாமற்போயுள்ளவர்கள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எமது விசாரணைக் குழுவின் விசேட கவனம் அதில் திரும்பியுள்ளது.
விசாரணைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. எமது விசாரணைக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் சம்பவ இடத்தில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய்களை அழைத்து, விசாரணை நடத்த உத்தேசித்திருந்தோம். இவை அனைத்தையும் செய்வதற்கு காலம் போதாமையே பெரும் பிரச்சினை.
எமது கடமையில் தவறமாட்டோம். எமது அறிக்கையில்உண்மையானவிடயங்களை உள்ளடக்கி நடுநிலையான நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றோம். தவறுகள் இரு பக்கத்திலும் இழைக்கப்பட்டிருக்கின்றன. விசாரணைகள் நடத்தப்படவேண்டும். ஆணைக்குழு அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபை மற்றும் எந்தவொரு அமைப்புகளுக்கும் வழங்குவதில் எவரும் பின்வாங்க வேண்டிய அவசியம் இல்லை - என்றார்.
மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவின் விசாரணைகளின் நம்பகத்தன்மை தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்த ஐக்கிய நாடுகளின்மனிதஉரிமைகள்ஆணையாளர்சயிட் அல்ஹுசைன்ஆணைக்குழுவைக்கலைத்து விடுமாறு அரசிடம் வலியுறுத்தியிருந்தார்.
இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பரணகம தெரிவித்ததாவது:
கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக நிலவரத்தை ஆராய்ந்து உண்மையான அறிக்கையிடலை செய்வதற்கே ஜனாதிபதியால் ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகளுக்கோ, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கோ அல்லது சிவில் அமைப்புக்களுக்கோ தெளிவுபடுத்துவதற்காக ஆணைக்குழு அமைக்கப்படுவதில்லை. இந்த விவகாரத்தில் சம்பவங்களை அறிந்து கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அவசியம் இருப்பதால் அவரால் அமைக்கப்படுகின்ற ஆணைக்குழுவுக்கும், ஜனாதிபதிக்குமே கொடுக்கல், வாங்கல் உள்ளது. மூன்றாம் நபருக்கு ஆணைக்குழுவை இடைநிறுத்துமாறு கூறமுடியாது. இது புதுமையான விடயம்.

> “விசாரணைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. எமது விசாரணைக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் சம்பவ இடத்தில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய்களை அழைத்து, விசாரணை நடத்த உத்தேசித்திருந்தோம்.”

காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்துமாறு கூறினால் அதிலும் தவறில்லை. ஜனாதிபதி தீர்மானித்தாலும் ஐக்கிய நாடுகள் சபைக்கோ? அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கோ? அல்லது சிவில் அமைப்புகளுக்கோ? எதிரானதாக அமையாது. அவர்களுக்கும் இதற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. எமது ஆணைக்குழுவை கலைக்குமாறு கூறுவதற்கு எந்தவொரு காரணமும் முன்வைக்கப்படவில்லை. நாங்கள் செய்த தவறுதான் என்ன? - என்றார்.
ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் இன்றுடன் முடிவடைகின்றது. அதை நீடிப்புச் செய்வதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கவில்லை. (ற-5)

## மின் தாக்கி ஜேர்மன் குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 15
வென்னப்புவ பிரதேசத்திலுள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த ஜேர்மன் நாட்டுக் குழந்தை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது என்று வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. லொயிட் ஹென்றிக் (ஒன்றரை வயது) என்ற குழந்தையே உயிரிழந்தது.
குழந்தையும், அவரது பெற்றோரும் கடந்த வாரம் இலங்கைக்கு சுற்றுலா வந்தனர். இவர்கள் வென்னப்புவ பிரதேசத்தின் சுற்றுலா விடுதியில் தங்கினர்.
பெற்றோர் இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது குழந்தை தரையில் விளையாடிக் கொண்டிருந்தது. பாதுகாப்பற்ற மின்சாரப் பொருளை குழந்தை தொட்டிருக்கலாம். மின் தாக்குதலுக்கு இலக்காகி குழந்தை உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ற-5)

## தரம் 1 மாணவர் சேர்ப்பு விவகாரம் ஜனாதிபதிக்கு பெற்றோர் கடிதம்

கொழும்பு, ஜூலை 15
களுத்துறைமீகதென்னஆரம்பப் பாடசாலையில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்து கொள்வதில் பாதிக்கப்பட்ட பெற்றோர், ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணிலுக்கு கடிதம்ஒன்றைஅனுப்பிவைத்தனர்.
பாதிக்கப்பட்ட 10 மாணவர்களுக்கும் மீகதென்ன ஆரம்பப் பாடசாலையில் இணைந்து சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கு வழியேற்படுத்தித் தரவேண்டும் என்று கடிதத்தில் கோரப்பட்டது.
பாதிக்கப்பட்ட மாணவர்களை மீகதென்ன ஆரம்பப் பாடசாலையை விடுத்து, வேறு பாடசாலையில் இணைப்பதற்கு நாம் சம்மதிக்கவில்லை எனவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.
கடந்த தினங்களில் இடம்பெற்ற சம்பவத்துக்கு மீகதென்ன ஆரம்பப் பாடசாலையின் அதிபர் அல்லது ஆசிரியர்களுக்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை . அவர்களுடன்எந்தவிதமனவருத்தங்களும் இல்லை என்று-அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டது.
மீகதென்ன ஆரம்பப் பாடசாலையில் இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் பெற்றோர் 10 பேர் அருகில் உள்ள பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டனர். பிரதி அமைச்சர் பாலித தெவரப் பெருமவால் மீகதென்ன ஆரம்பப் பாடசாலையில் அனுமதியின்றி இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் தாய்மாரே கைதுசெய்யப்பட்டனர். (ற-5)

## விசேட பூசைகளில் பிஸ்வால், ரொம்

கொழும்பு, ஜூலை 15
அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வால் மற்றும் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி இருவரும் நேற்று வியாழக்கிழமை காலை 9.45 மணிக்கு திருக்கோணேஸ்வரம் கோயிலில் இடம்பெற்ற விசேடச வழிபாடுகளில்கலந்துகொண்டனர். (ற-5)

## தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

### இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 15
தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இவ்வாறு இராணுவப் பேச்சாளர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.
ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவர் இந்தியாவின் கேரளாவில் இருந்து இலங்கைக்குள் ஊடுருவியுள்ளனர் என்று இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. கேரளாவில் பலர் ஐ.எஸ். அமைப்பில் கடந்த நாள்களில் இணைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. தெற்காசிய நாடானபங்களாதேஷில் ஐ.எஸ். அமைப்பு அண்மையில் தாக்குதல் நடத்தியது.
“இலங்கை புலனாய்வுத்துறை விழிப்பாக இருக்கின்றது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது” - என்றார். (ற-5)

## அரசமைப்பின் பலவீனத்தால் போதைப் பாவனை அதிகரிப்பு

### சாடுகின்றார் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை

கொழும்பு, ஜூலை 15
அரசமைப்பு மற்றும் நீதிக் கட்டமைப்பின்பலவீனத்தால்போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இதற்கு அரசே காரணம்.
இவ்வாறுகர்தினால்மல்கம்ரஞ்ஜித் ஆண்டகை குற்றஞ்சுமத்தினார்.
மதுபோதை என்ற காலனிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 30ஆம் திகதி கம்பகா, ராகம பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வூட்டும் எதிர்ப்பு பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.
இது தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை கொழும்பு பொறளையிலுள்ள கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகையின் இல்லத்தில் நடைபெற்றது.
அங்கு அவர் தெரிவித்ததாவது:
நாட்டின் அரசுகள் அடிக்கடி மாறுகின்ற சந்தர்ப்பத்தில் சட்டதிட்டங்களிலும், அரசமைப்புக்களிலும் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்களால் ஜனநாயகமும், நீதிக் கட்டமைப்பும் பலவீனமடைந்து போகின்றன.
இதன் பிரதிபலனாக இலங்கைக்குள் கொண்டு வரப்படுகின்ற போதைப் பொருள்களின் அளவு அதகரித்து இருக்கின்றது.
நாட்டின் இளைய சமுதாயம் அழிவைநோக்கிநகர்ந்துகொண்டிருக்கின்றது - என்றார். (ற-5)

## “கைது செய்வார்கள் என்ற அச்சம் இப்போது எனக்கும்”

### மகிந்த இளைய புதல்வர் ரோகித கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 15
என்னையும் அதிகாரிகள் கைது செய்து சிறையிலிடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இளைய புதல்வரான ரோகித ராஜபக்ச தெரிவித்தார்.
கொழும்பு புதிய மகசின் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை சந்திப்பதற்காக அவரது உறவினர்களும், ஆதரவாளர்களும் சிறைக்குச் சென்றனர்.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை புதிய மகசின் சிறைக்குச் சென்ற ரோகித ராஜபக்ச தனது சகோதரர் நாமலைச் சந்தித்தார். பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:
இந்தச் சிறையில் மகிந்த ராஜபக்ச, யோசித்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோர் அடைக்கப்பட்டனர். எதிர்வரும் சில தினங்களில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் செல்லவுள்ளார் என்று அறியக் கிடைத்தது.
சிறையிலும் நாமல் ராஜபக்ச மகிழ்ச்சியாகவே காலத்தை கழித்து வருகின்றார் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களுக்கு நேர்ந்த கதியோ...?

இலங்கையில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து விசாரணையில், பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டியது மிகவும் கட்டாயமானது; எந்த வகை சார்ந்தும் தவிர்க்கக் கூடாதது.

விசாரணைகள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பாக, இலங்கை அரசு, பன்னாட்டுச் சமூகத்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடுகளை நிறைவேற்றுவதில் மிக உறுதியாக இருக்க வேண்டும்.

மேற்கண்ட நிலைப்பாடுகள் குறித்து ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ-மூன் அழுத்திக் கூறியுள்ளதாக அவரது பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக் கூறுதலை உறுதிப்படுத்துவது தொடர்பாக, இலங்கை அரசு தனக்கு உரிய கடப்பாடுகளை முழுமையாக நிறைவேற்றி வைப்பதற்குத் தூண்டும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை ஒருபோதும் கைவிட மாட்டாது என்றும் அவர் கருத்து வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று இலங்கை அரசு அழுத்திக் கூறிவருகிறது என்பது குறித்து இப்பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தமை தெரிந்ததே. அதனை மீண்டும் மீண்டும் அரச பிரதானிகள் அழுத்திக் கூறிவருகிறார்கள்.

இதேவேளை -

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசைன் சபையின் 32 ஆவது அமர்வில் வெளியிட்ட வாய்மூல அறிக்கையில்:

இதற்கு முன்னர் வளியுறுத்தப்பட்டது போன்று, முன்னைய நிலையில் இருந்து வேறு ஒரு நிலைக்கு செல்வதற்கான பொறிமுறை தவிர்க்க இயலாது என்றும்--

இதுவரை இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து, நடுநிலை தழுவி, விவரமாக ஆராயப்பட வேண்டும் என்றும்--

அதன் ஊடாக, மனித உரிமை மீறல்களை தடுக்க இயலும் என்றும்-- விஸ்தாரமாக விவரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உடன்படிக்கைகளில் இருந்து விலகிக் கொள்வது இலங்கை அரசுகளுக்கு ஒன்றும் புதிதல்லவே. நல்லாட்சி அதிபதிகளும் அந்த வழியே செய்வார்கள் என்பதிலும் ஐயம் கொள்ள வேண்டியதில்லை.

பண்டா-செல்வா ஒப்பந்தம் (1957இலும்), டட்லி-செல்வா (ஒப்பந்தம் 1965 இலும்) கிழித்து எறியப்பட்ட சரித்திரம் மீண்டும், இப்போதைய மனித உரிமைகள் சபையின் முயற்சிக்கும் கிடைத்து விடலாம்! யார் அறிவார்?

# போர்க்குற்ற விசாரணைகளில் நீதி கிடைக்குமா?

சேரலாதன்

போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேச நீதிபதிகள் வேண்டுமா? வேண்டாமா? என்ற தொனிப்பொருளில் பட்டிமன்றம் ஒன்று நாட்டில் இடம் பெறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நாட்டின் குடிமக்களாகிய தமிழர்கள்தான். சிறுபான்மையினர் என முத்திரை குத்தப்பட்ட இந்த மக்கள், அந்நியர்கள் இங்கிருந்து வெளியேறிய நாளில் இருந்து அனுபவித்து வருகின்ற துன்பங்கள் சாமானியமானவையல்ல. பெரும்பான்மையின ஆட்சியாளர்களின் மனங்களில் இனவாதம் நிறைந்து காணப்படுகின்றமையே இதற்கான பிரதான காரணமாகும். கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக் கட்டப் போர் இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் சீரழித்து விட்டது. தமிழர்களின் உயிர்கள் மட்டுமல்லாது, அவர்களது அனைத்து வளங்களும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டன. போர் இடம் பெற்றபோது போர்க்குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் தாராளமாகவே மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இவற்றையெல்லம் அரசு கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. போர்க்குற்றங்கள் தொடர்பான செய்திகள் உலகளாவியரீதியில் அவ்வப்போது வெளிவரவே செய்தன. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இவை தொடர்பான விவாதங்கள் இடம்பெற்று இலங்கைக்குப் பாதகமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இதில் போர்க் குற்றங்கள் சர்வதேசத்தின் கண்காணிப்பில் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்துடன் இடம்பெறவேண்டுமென்பது முக்கியத்துவம் வாய்ந்தது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் இதையே வலியுறுத்திக் கூறியுள்ளார். அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இதை ஆதரித்துக் கருத்து வெளியிட்டுள்ளன. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போர்க் குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளும் இடம் பெற வேண்டும் என வலியுறுத்தி நிற்கின்றது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பிரதிநிதிகளும் இதையே வலியுறுத்தி நிற்கின்றனர். இதன் மூலமாகவே போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பது இவர்களின் கணிப்பாகும். ஆனால், பெருபான்மை இனத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்தை எதிர்த்து நிற்கின்றனர். இது இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் என்பதோடு அளப்பரியதியாகங்களைச்செய்து போரை வெற்றி கொண்ட படையினரை காட்டிக் கொடுப்பதாக அமையும். இவர்களது வாதம் ஆகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதே கருத்தைக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகின்றது. போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளுக்கு ஒரு போதுமே இடமளிக்கப்படமாட்டாது என அவர் பகிரங்கமாகவே அறிவித்து விட்டார். ஜனாதிபதி ஐநாவுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்கப் போகிறார் என்பது தெளிவாகத் தெரிய வருவதால் நாடு சில பாதகமான விளைவுகளை எதிர்கொள்ளப் போவது, எதிர்பார்த்த ஒன்றுதான்.



இதேவேளை - இறுதிப் போரின் போது பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லபட்டதாகக் கூறப்படுவதை ஏற்க முடியாதென அமைச்சரொருவர் கூறியுள்ளார். தமிழர்கள் திட்டமிட்ட வகையில் கொல்லப்படவில்லை எனவும், படையினரில் சிலர் தனிப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கலாமெனவும் அவர் தெரிவித்தார். அவ்வாறாயின் நீதியான விசாரணைகள் இடம்பெறுவதை இவர்கள் எதற்காக எதிர்க்கின்றனர் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது. தமிழர்கள் பாதிக்கப்படும்போதெல்லாம் ஆணைக்குழுக்கள் அவசரம் அவசரமாக நியமிக்கப்படுவதும், பின்னர் அவற்றின் விசாரணைகளால் பயனொன்றும் கிடைப்பதில்லை என்பதுவும், தமிழர்களின் தலைவிதியாகவே மாறி விட்டது. இந்த நிலையில் இறுதிப் போர் தொடர்பாக இடம்பெறுகின்ற உள்ளூர்விசாரணைகளும் உண்மைகளை வெளிக்கொணரப் போவதில்லை. இதனால்தான் தமிழர் அமைப்புக்கள் வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னத்தைக்கோரி நிற்கின்றனர்.

நல்லாட்சி அரசெனக் கூறிக்கொள்ளும் தற்போதைய அரசு, நல்லாட்சித் தத்துவத்துக்கு ஏற்ற வகையில் சகல இனமக்களுக்கும் நீதியையும் நியாயத்தையும் வழங்க வேண்டும். மாறாக பெரும்பான்மையின மக்களையும் படையினரையும் திருப்திப்படுத்தும் வகையில் அரசு நடந்து கொள்ளுமாயின், உலக அரங்கில்தான் சம்பாதித்து வைத்துள்ள நற்பெயரை இழக்க வேண்டிய தொருநிலை உருவாகிவிடும். குற்றங்களை எவர் புரிந்தாலும் அவர்கள் தண்டனை பெற்றுத் தானாக வேண்டும். இதைத் தடுப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை. மேலும், ஐ.நாவுடன் மோதுவதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளையும் ஜனாதிபதி உள்ளிட்ட அரச உயர்மட்டத் தலைவர்கள் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீதியை ஒரு புறம் குழி தோண்டிப் புதைத்து விட்டு நல்ல வேடம் புனைபவர் களின்போலித் தனங்கள் என்றோ ஒருநாள் அம்பலமாவதை ஒரு போதுமே தடுத்து நிறுத்திவிட முடியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் ராஜதந்திர நகர்வுகள்

## இனவாதத்தின் முன்னால் வெற்றி பெறுமா?

சிங்களமூலம் மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரீ





இலங்கையின் வடபகுதியில் சுதந்திரக் கட்சியைப் பிரபல்யப்படுத்தியவர் அல்பிரட் துரையப்பா ஆவார். யாழ் மாநகர பிதாவாக இருந்தவர். 1976 ஆம் ஆண்டில் பிரதமராகவிருந்த சிறிமாவோவை வடபகுதிக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொள்ள வைப்பித்து, தமிழ் மக்கள் சிறிமாவோ அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு மதிப்பளித்ததை நேரில் உணர வைப்பித்தவர் இந்த அல்பிரட் துரையப்பாவே. சிறிமாவோ அரசு கைக்கொண்ட தேசிய பொருளாதாரக் கொள்கை காரணமாக, வடபகுதி விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளால் பெரும் இலாபம் ஈட்ட வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. அந்த வேளையில் இடதுசாரி அரசியல்வாதிகளும் வடபகுதி மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தனர். இடதுசாரிக் கட்சிகளும் அரசில் இணைந்து செயற்பட்டதால் அந்த வேளையில் சுதந்திரக்கட்சி அரசுக்கு வடபகுதித் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு நிலவி வந்தது.

அந்தக் கால கட்டத்திலேயே பிரபாகரன் தமிழீழம் பெறுவதற்கான ஆயுதப் போராட்டமொன்றுக்கு இளைஞர்களை ஒன்று திரட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்து முன்னெடுத்து வந்தார். சுதந்திரக் கட்சியை வடபகுதித் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறாது தடுக்கும் நோக்கிலேயே அல்பிரட் துரையப்பாவைப் பிரபாகரன் படுகொலை செய்தார். அல்பிரட் துரையப்பாவின் சாவுடன் சுதந்திரக் கட்சிக்கு வடபகுதியில் இருந்த மதிப்பும் மரியாதையும் நலிவு கண்டன. ஆனால், 1982 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் வடபகுதி மக்கள் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு பெருமளவில் வாக்களித்து சிறிமாவோ அரசின் தேசிய பொருளாதாரக் கொள்கைக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறிமாவோவும், அவரது சுதந்திரக் கட்சியும் தமிழர்களுக்கு எதிரான கொள்கை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்ததன் காரணமாக வடபகுதி மக்களுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையேயான நல்லிணக்கம் விரிசல் கண்டது. ஆயினும், 1994 இல் பதவிக்கு வந்த சந்திரிகா, தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாக உறுதியளித்த தன் பேரில் வடபகுதித் தமிழ் மக்கள் மத்தியில் சந்திரிகா, அலை உயர்ச்சி கண்டது. ஆயினும் பின்னர் பதவிக்கு வந்த மகிந்த மற்றும் அவரது நாட்டுப்பற்றாளர் தரப்பினரது தமிழ்மக்கள் மீதான குரோதப் போக்கால் தமிழ் மக்களுக்கு சுதந்திரக்கட்சி வேண்டாப் பொருளாகிற்று. இதனாலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த புறக்கணிக்கப்பட்டு மைத்திரிபால ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றும் நிலை தோற்றம் கண்டது.

ஐ.தே.கட்சியின் தலைமையிலான நல்லாட்சி அரசில் ஜனாதிபதி மைத்திரிபால, தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக உறுதியளித்திருந்தார். இதனாலேயே தமிழ் மக்கள் நல்லாட்சி அரசுக்குத் தமது ஆதரவை வழங்க முன் வந்தனர். பொதுசன ஐக்கிய முன் னணியூடாக ஜனாதிபதியாகி சுதந்திரக்கட்சியின் தலைவர் பதவியையும் கைப்பற்றிய மைத்திரிபால 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடபகுதி மக்களுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையே நிலவிய அன்னியோன்னிய உறவை மீண்டும் ஏற்படுத்தும் நோக்குடன் செயற்பட்டார். அல்பிரட் துரையப்பாவின் சாவுடன் விரிசல் கண்ட வடபகுதித் தமிழ் மக்களுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையேயான உறவை மீண்டும் நெருக்கமடையச் செய்யும் விதத்திலேயே துரையப்பா விளையாட்டரங்கைப் புனர்நிர்மாணம் செய்வித்து, அண்மையில் வடபகுதி மக்களிடம் அவர் கையளித்திருந்தார்.

அதேபோன்றுதான், அண்மையில் பிரதமர் ரணிலின் ஒப்புதலுடன் மத்திய வங்கி ஆளுநராக இந்திரஜித் குமாரசுவாமியை ஜனாதிபதி நியமித்ததும் கூட, சுதந்திரக்கட்சி முன்னைய போக்கில் இருந்து மாறியுள்ளது என்பதைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதற்காகும்.

இதேபோன்றுதான் 1994 ஆம் ஆண்டில் தமிழரான லக்ஷ்மன் கதிர்காமரைத் தமது அரசின் வெளியுறவு அமைச்சராக நியமித்ததன் மூலம் சந்திரிகா தென்பகுதி அரசியலரங்கில் புரட்சியொன்றை ஏற்படுத்தினார். மத்திய வங்கியின் புதிய ஆளுநர் குமாரசுவாமியும் சிறந்த கல்விமானாவார். அவரது பரம்பரையினர் நாட்டுக்குப் பெரும் சேவைஆற்றியுள்ளனர். அவரது பாட்டனார், தந்தையார் ஆகியோரும் அரச நிர்வாகத்தில் பெரும் பதவிகளை வகித்தோரே.

ஆங்கிலேயரது ஆட்சியில் ஆட்சியாளர்கள்கைக்கொண்ட சிறப்பான சிவில் நிர்வாகம் காரணமாகவே நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆயினும் பின்னர் அரசியல் ரீதியில் முன்னாள்பிரதமர்எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, சிங்களம் மட்டுமே அரச கரும மொழியெனக் கொண்டு வந்த சட்டம் காரணமாக உயர் பதவிகளில் சிறப்பாகச் சேவையாற்றி வந்த பல தமிழ் அதிகாரிகள் தமது சேவையினின்றும் இளைப்பாறிச் செல்ல நேர்ந்தது. அந்த விதம் சிங்களம் மட்டும் அரச மொழிச் சட்டத்தால் வெறுப்புற்று வெளியேறிய தமிழ்க் கல்விமான்களையும் நிர்வாகிகளையும் உள்வாங்கியே சிங்கப்பூரை அதன் பிரதமர் லீகுவான் யூவால் கட்டிஎழுப்ப முடிந்தது. சிங்கப்பூரின் சிற்பி எனப் போற்றப்பட்ட காலஞ்சென்ற பிரதமர் லீ குவான் யூ தாம் எழுதிய "மூன்றாம் உலக நாடாக இருந்த சிங்கப்பூரை அபிவிருத்தி அடைந்த நாடாக்கும் முயற்சியில் எனது பயணம்" என்ற நூலில் இலங்கையர்கள் குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள், பெரும்பான்மையினரான சிங்களவர்களை விட அதிகம் கற்றவர்கள்; கெட்டித்தனம் மிக்கவர்கள், சோம்பேறித்தனம் அற்றவர்கள்; இதைக் கண்டு சிங்களவர்கள் பொறாமைப்படுகின்றனர். தமிழர்கள் வகித்த உயர் பதவிகள் அவர்களுக்குத் தேவைப்பட்டன. இலங்கையின் அபிவிருத்திப் பயணத்துக்கு அந்த இடத்தில்தான் தவறு இழைக்கப்பட்டது.

அந்த வகையில் தவறாகிப்போன அந்தச் செயற்பாட்டை நேர்சீர் செய்து நாட்டை உலகஅரங்கில்முன்னிலைபெற வைப்பதற்காகத்தான் ஜனாதிபதி மைத்திரிபாலவும் பிரதமர் ரணிலும் தற்போது குமாரசுவாமியை மத்திய வங்கி ஆளுநராக நியமித்தனர் எனக் கருதமுடிகிறது.

## பொருளாதார மத்திய நிலையம்

ஐயா, அண்மைய நாள்களாக பத்திரிகையை எடுத்தால் பொருளாதார மத்திய நிலையம் தொடர்பான கருத்துரைகளும் செய்திகளும் தான் உள்ளன தாண்டிக்குளமா? ஓமந்தையா? மாங்குளமா? இது விடயமாக பல அரசியல் பிரமுகர்கள் விவசாய அமைப்புக்கள், மாகாணசபை உறுப்பி னர்கள் மூலம் கருத்துக் கணிப்பீடு நடைபெறுகின்றது. இந்தக் கருத்துக் கணிப்பீடு முடிவதற்குள் இதற்காக ஒதுக்கிய பணம் வேறு ஒரு திட்டத்திற்கு மீள ஒதுக்கப்பட்டுவிடும். ஒரு விதத்தில் தென் பகுதியில் பொருளாதார மத்திய நிலையம் உருவாக எமது தமிழ் அரசியல் பிரமுகர்கள் மறைமுகமான ஆதரவுவழங்குவதாக புரிகின்றது. இப்போதைய தமிழர் கட்சிகள், மாகாண சபை உறுப்பினர்கள் தங்கள் மத்தியில் ஒருமைப்பாடு, ஒற்றுமை அற்றவர்களாக இருப்பது மிகவும் கவலைக்குரியது. முன்பு காங்கேசன்துறை சிமெந்து ஆலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் இது போன்றவைகள் உரிய இடத்தில் ஒரு மனதான எண்ணக் கருவுடன் தீர்மானிக்கப்பட்டு அமைக்கப்பட்டன.

ஆனால், ஒரு பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசு கூட்டமைப்பு எதிரணி விவசாய அமைப்புக்கள் என பல தரப்பினரது மாறுபட்ட கருத்துக்கள் மூலம் தடைப்படுகிறது. இந்த விடயமாக இவ்வளவு அமைப்புக்களும் சேர்ந்து முன்கூட்டியே எந்த விடயத்தில் நிர்மாணிப்பது என்று தீர்மானத்தை ஒரு மனதாக மேற்கொண்டு செயற்பட்டிருந்தால், இன்று ஒதுக்கப்பட்ட பணத்தில் கட்டட வேலைகள் முழுமையாகும் நிலைக்கு வந்திருக்கும். அது மட்டுமா, ஏற்கனவே கிளிநொச்சி கனகபுர விளையாட்டுத் திடலில் ஒரு பொருளாதார மத்திய நிலையமொன்று பெரிய செலவில் கட்டப்பட்டு இருப்பது எவராவது கண்ணுக்கும் புலப்படவில்லை போலும்.

அரசால் ஒதுக்கப்படும் நிதிகளை மாகாண சபையாகட்டும், அரச திணைக்களங்கள் ஆகட்டும் உரிய காலத்தில் பயன்படுத்தாது. வருட முடிவில் மழை காலத்தில் கட்டடங்கள், வீதிகள் என்பவற்றை அவசர அவசரமாக முழுமை செய்ய உத்தரவிடுவார்கள். அதிலும் குறிப்பிட்ட சில நிதிகள் திருப்பப்படும் நிலைக்கு உட்பட்டு விடும். எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் எவரும் மக்கள் நலன் கருதி தொழிற்சாலைகள் பலவற்றை நிறுவுவதற்கும், வீதிகள் (சில பிரதான வீதிகள்), குளங்களைபுனரமைப்புசெய்யவும்ஏற்றஒழுங்குசெய்யநடவடிக்கை எடுத்து வட பகுதியை சிறப்புற வளர்ச்சி பெற வைக்க வேண்டும் என மக்கள் நலன் விரும்பி என்ற வகையில் வேண்டுகின்றேன்.

அச்சுநகர். தவச்சந்திரன்.

## தொடரும் மாவடி வீதியின் அவல நிலை

வைத்தீஸ்வராச் சந்திக்கு அண்மையதாக சிவன்பண்ணை வீதியையும், மானிப்பாய் வீதியையும் இணைக்கும் மாவடி வீதியின் ஒரு பகுதி மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. யாழ்.ஐந்து சந்தியில் இருந்து ஆரம்பமாகி, அபூபக்கர் வீதி, சிவன் பண்ணை வீதிகளைக் குறுக்கறுத்துச் செல்லும் இந்த வீதி ஏற்கனவே திருத்தம் செய்யப்பட்டு இருப்பினும் குறிப்பிட்ட வீதியின் முடிவிடப்பகுதி முறையான திருத்தத்துக்குள்ளாகவில்லை எனக் கருதமுடிகிறது. மூன்று இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இந்த வீதிப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 10 வீடுகளின் கழிவு நீர் வெளியேறிச் செல்லும் வடிகாலும் உடைந்து காணப்படுகின்றது. ஆலயத்துக்கு முன்பாக வீதி ஏற்கனவே சேதமடைந்து, கற்கள் வெளிக்கிளம்பிக் காணப்படும் நிலையில், சேதமடைந்த வடிகாலிலிருந்து வெளியேறும் கழிவு நீரும் வீதியில் சேர்ந்து பெரும் துன்பத்தைத் தருவதாகவும், சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. இந்த நிலை தொடரின் இதேபகுதியில் கால்நடையாகச் செல்வோரும், கோயில் பைப்பில் தினமும் நல்ல தண்ணீர் எடுக்கவென வருபவர்களும் கழிவு நீரில் கால்வைத்து நீர்ச்சிரங்கு போன்ற தோல்வியாதிகளுக்கும் ஆளாகக் கூடும்.

ஏற்கனவே இந்த வீதி குப்பை கூளங்களால் நிறைந்து காணப்பட்டதும் அவற்றுக்காகக் காத்திருக்கும் நாய்களின் தொல்லையினாலும் – போவோரும், வருவோரும் பாதிக்கப்பட்டனர். கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டதான அறிவிப்பின் பின்னர் குப்பைகள் போடுவது தவிர்க்கப்பட்டு வருகிறது. நாய்களின் தொல்லைகளும் குறைவடைந்துள்ளன. கண்காணிப்புக் கமரா பொருத்தி வைத்திருப்பவருக்கும் அதை மதித்தோ அல்லது பயந்தோ குப்பைகளைப் போடாது விட்டவர்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டிய நிலையில், இந்த வீதியின் அவலம் மேலும் தொடர்வது தான் வேதனைக்குரியதாகிறது. தற்போதைய இந்த வீதியின் குறிப்பிட்ட பகுதி தொடர்பில் இங்கு தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லதண்ணீர் கிணற்றடி ஞான வைரவ சுவாமியை வேண்டிநிற்பதைத் தவிர வேறு என்ன தான் செய்வது?

வ. கிருஷ்ணானந்தன். சிவன்பண்ணை வீதி.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒலிம்பிக் பாதுகாப்புக்கு 24 மில்லியன் டொலர் நிதி


## பிரேஸில் அரசு ஒதுக்கீடு

பிரேஸிலியா, ஜூலை 15
பிரேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காக றியோ-டி ஜெனிரோவின் பாதுகாப்பை மேலதிக நிதி ஒதுக்கீடு மூலம் பலப்படுத்த அந்த நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.
அந்த நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சர் லியோனார்டோ இது குறித்து தெரிவிக்கையில்;
24 மில்லியன் டொலர் பாதுகாப்புப் படையினருக்கான ஊதியமாகவும், பாதுகாப்புத் தேவைகளுக்கான மேலதிகப் பணமாகவும் அறவிடப் பட்டுள்ளது-என்றார்.
இந்த மாதம் 24 ஆம் திகதியில் இருந்து, இராணுவத்தினர் ஒலிம்பிக் விளையாட்டுக் களத்தில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள ஆரம்பிப்பர். 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் நகர வீதிகளில் ரோந்துப் பணிகளில் ஈடுபடவுள்ளனர் என அதிகாரி கள் தெரிவித்தனர்.
இதற்கிடையே கடந்த வாரம் பிரேஸில் பொலிஸார், அந்த நாட்டு அரசு ஊதியம் வழங்காமையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். பிரேஸிலில் நிலவும் அரசியல், பொருளாதாரச் சூழல் அந்த நாட்டு அரசைத் தளம் பலடையச் செய்துள்ளது என ஒலிம்பிக் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
(த-ரி4)

# வியாழனை முதல் படம் பிடித்துள்ள

## நாஸா விஞ்ஞானிகள் பெரும் ம

நாஸா, ஜூலை 15
நாஸாவின் ஜூனோ விண்கலம், வியாழன் கிரகத்தின் 3 நிலவுகளை முதல்முறையாகப் படம் பிடித்து, பூமிக்கு அனுப்பியுள்ளது. இதனால் நாஸா விஞ்ஞானிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.



வியாழன் கிரகத்தை ஆராய்வதற்காக அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் கடந்த 2011 ஓகஸ்டில் கேப்கனாவெரலில் இருந்து ஜூனோ விண்கலத்தைச் செலுத்தியது. இந்த விண்கலம் தொடர்ந்து 5 ஆண்டுகளாகப் பயணித்து, கடந்த 4ஆம் திகதி வியாழனை அடைந்தது. அதில் இணைக்கப்பட்டிருந்த உ
கொண்ட கமரா மூலம் 4
கிலோ மீற்றர் தொலைவில்
வியாழனை ஜூனோ படம்பி
ளது.
அந்த படத்தில் வியாழன்
தைச் சுற்றும் நான்கு நிலவ
லோ, ஐரோப்பா மற்றும் க
ஆகிய 3 நிலவுகளின்
வியாழனின் மையத்தில்
சிவப்புப் புள்ளியும் தெளிவா
வாகியுள்ளன.
வியாழனின் சுற்றுவட்டப்
யின் தூரம் குறையக் கு
தொடர்ந்து படங்களை எ
என்று ஜூனோ திட்ட ஆய்
ஹண்டி ஹன்சென் தெரிவி
எதிர்வரும் ஓகஸ்ட் 27ஆம் திகதி வியாழ
அருகில் நெருங்கியதும், அதன் முதல் உ
படத்தை ஜூனோ எடுக்கும் என்றும் அவர்
தார்.
ஜூனோ பூமிக்கு அனுப்பி வைத்த படங்களை

# முக்கிய தலைவர் சாவை உ

வொஷிங்ரன், ஜூலை 15
ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவர், அமெரிக்க விமானத் தாக்குதலில் உயிரிழந்தார் என அந்த அமைப்பு நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தியது.
ஒமர் ஷிஷானி எனப் பெயர் கொண்ட குறித்த தலைவர், தெற்கு மோசூலில் இடம் பெற்ற போரின்போது, கடந்த மார்ச் மாதம் உயிரிழந்தார் என அந்த அமைப்பு கூறியது.



கடந்த மார்ச் 4 ஆம் திகதி நடத்தப்



# அமேசன் காட்டில் உள்ள மரங்களை இனம்காண 300 ஆண்டுகள் எடுக்கும்

## ஆய்வின் மூலம் வெளியாகியது தகவல்

வொஷிங்ரன், ஜூலை 15
அமெரிக்காவின் அமேசன் மழைக் காடுகளில் உள்ள மரங்களை இனம்காணவும், பட்டியல் படுத்தவும் கிட்டத்தட்ட 300 வருடங்கள் ஆகும் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.
விஞ்ஞானச் சஞ்சிகை ஒன்றில் வெளிவந்த ஆய்வில், ஏற்கனவே இனம் காணப்பட்ட 5 லட்சம் உயிரி மாதிரிகள் 300 ஆண்டுகளுக்கு முன்னர் இனம் காணப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமேசன் காட்டில் இன்னமும் 12 ஆயிரம் வகையான மரங்கள் இனம்காணப்படாமல் உள்ளன. அத்துடன் 4 ஆயிரம் அரிய வகை உயிரிகள் இன்னமும் அங்கு இனம் காணப்படாமல் உள்ளன என அந்த [illegible] கூறப்பட்டுள்ளது.
விஞ்ஞானிகளின் கருத்துப்படி உலகின் அதிக எண்ணிக்கையான உயிரி பல்வகைமை கொண்ட காடாக அமேசன் திகழ்கின்றது. ஏற்கனவே அமேசனில் இனம் காணப்பட்டவற்றையும் இணைத்துச் செயற்படுவதன் மூலம், இனம்காணும் பணியை இலகுபடுத்தலாம் என இந்த ஆய்வை மேற்கொண்டவரும், [illegible] நிலையத் தலைவருமான ஹான்ஸ் ரெர் ஸ்ரேஜி தெரிவித்தார்.
(த-ரி4)

# மதம் மாறுவதற்கு மறுத்ததால் இளைஞனின் கைகள் துண்டிப்பு

## பாகிஸ்தானில் செவ்வாயன்று சம்பவம்

லாகூர், ஜூலை 15
பாகிஸ்தானில், இஸ்லாமுக்கு மதம் மாற மறுத்த கிறிஸ்தவர் ஒருவரின் இரு கைகளும் வெட்டப்பட்டன என உள்ளூர் ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டன.
கடந்த செவ்வாய்க்கிழமை அகீல் மாஷுக் எனும் 25 வயதுடைய இளைஞனின் கைகள் இனம் தெரியாத இஸ்லாமியர்களால் கோடாரியால் வெட்டப்பட்டன எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கையை வெட்டியவர்கள் தொடர்பில் எந்த விவரமும் எனக்குத் தெரியாது, ஆனால் அவர்களை மீண்டும் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என அந்த இளைஞன் தனது முறைப்பாட்டில் கூறினார்.
இதற்கிடையே, அவரது மருத்துவச் சான்றிதழில் ரயில் மோதியதால் கைகள் துண்டிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
கைகள் துண்டாடப்பட்டு, நினைவிழந்த நிலையில், ரயில் தண்டவாளத்தில் குறித்த இளைஞன் கிடந்ததை நேரில் பார்த்ததாக ஒருவர் கூறினார்.
எனினும் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலமும், மருத்துவமனைச் சான்றிதழும் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதால், பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர். (த-ரி4)



பிரா
களி
புரட்
விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ல்முறையாக ...ளது ஜூனோ

## ... மகிழ்ச்சி

...ந்த உயர் திறன் ...மூலம் 43 லட்சம் ...லைவில் இருந்தபடி ...ா படம்பிடித்துள்

...யாழன் கிரகத் ...கு நிலவுகளில், ...ற்றும் கனிமெட் ...ளின் படமும், ...யத்தில் உள்ள ...தெளிவாகப் பதி

...வட்டப் பாதை ...றயக் குறைய ...ளை எடுக்கும் ...ட்ட ஆய்வாளர் ...ன் தெரிவித்தார். ...வியாழனை மிக ...தல் உயர் திறன் ... அவர் தெரிவித்

...டங்களை இணை யத்தளம் மூலம் பொதுமக்களின் பார்வைக்குவிட நாஸா குழு திட்டமிட்டுள்ளது. வியாழனின் மேக உச்சியை நெருங்குவதற்காக ஜூனோ விண்கலம் தொடர்ந்து 37

> வியாழன் கிரகத்தை ஆராய்வதற்காக அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் கடந்த 2011 ஓகஸ்டில் கேப்கனாவெரலில் இருந்து ஜூனோ விண்கலத்தைச் செலுத்தியது. இந்த விண்கலம் தொடர்ந்து 5 ஆண்டுகளாகப் பயணித்து, கடந்த 4 ஆம் திகதி வியாழனை அடைந்தது.

முறை அதன் சுற்றுவட்டப் பாதையை வட்ட மடித்து தூரத்தைக் குறைக்கும் என்றும், அப்போது வியாழனில் இருந்து 4,100 கிலோமீற்றர் தொலைவில் ஜூனோ நிலை கொண்டிருக்கும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (த)

## ...வ உறுதிப்படுத்தியது ஐ.எஸ்.



...ந்தப் பட்ட வான் வழித் தாக்குதலில் கடும்காயங்களுக்கு உள்ளான ஷிஷானி உயிரிழந்தார் என அமெரிக்க இராணுவத் தலைமையகம் அறிவித்திருந்தது. இதனையடுத்து ஐ.எஸ். அமைப்பின் அமாக் எனும் இணையத்தளத்தில் தற்போது இதனை உறுதிப்படுத்தித் தகவல் வெளிவந்துள்ளது. உயிரிழந்த ஷிஷானி, ஐ.எஸ். அமைப்பின்தலைவரான அபு-பக்கர்-அல்-பக்தாதிக்கு மிக நெருக்கமானவர். முன்னதாக அமெரிக்க இராணுவத் தலைமையகத்தால் இடம்பெற்ற தாக்குதல்களை மறைத்துவந்தகுறிப்பிட்ட இணையத்தளம், தற்போது ஷிஷானியின் சாவை உறுதிப்படுத்தியது.

அமெரிக்க இராணுவத் தலைமையகம் கடந்த வருடம் ஷிஷானியின் தலைக்கு 5 மில்லியன் டொலர் பணப் பரிசு அறிவித்திருந்தது. (த-ரி4)

## பிரான்ஸ் ஜனாதிபதியின் சிகையலங்கார ஊழியரின் மாதச் சம்பளம் 10,000 யூரோ



பாரிஸ், ஜூலை 15

பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹொலண்டே தனது சிகை அலங்காரப் பணியாளருக்கு மாதம் 10 ஆயிரம் யூரோக்கள் சம்பளமாக வழங்குகிறார் என ஊடகங்களில் செய்தி வெளியிட்டன.

ஒலிவர் பி என அழைக்கப்படும் குறித்த சிகையலங்காரப் பணியாளர், வீட்டு வசதிகள், ஏனைய வசதிகளுடன் மாதாந்தம் 9 ஆயிரத்து 895 யூரோக்களைச் சம்பளமாகப் பெறுகிறார் எனச் செய்தியில் குறிப்பிடப்பட்டது.

பிரான்ஸ் ஜனாதிபதியின் வருடாந்த வருமானம் 4 லட்சத்து 74 ஆயிரத்து 960 யூரோ ஆகும். இந்த வருமானத்தில் 30 சதவீதத்தைச் சிகையலங்காரப் பணியாளர் சம்பளமாகப் பெற்றுக்கொள்கிறார் என ஊடகங்கள் தெரிவித்தன.

5 ஆயிரம் யூரோக்கள் சிகையலங்காரத்தைத் தவிர, மேலதிக தொகையாக மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஒலிவர், ஹொலண்டேயுடன் எப்போதும் இருந்து பணி புரிகிறார் எனக் கூறப்படுகின்றது.

பல காலமாக ஒலிவரது சம்பளம் இரகசியமாக பாதுகாக்கப்பட்டு வந்தது.

ஹொலண்டெயின் வதிவிட உத்தியோகத்தர் தெரிவிக்கையில், காலையில் இருந்து ஜனாதிபதிக்கான சேவையில் ஒலிவர் ஈடுபடுவார். பல பொதுக் கூட்டங்களில் பங்கெடுக்கும் ஜனாதிபதி, தனது தோற்றத்தில் அதிக அக்கறையுடன் செயற்படுகிறார்–என்றார்.

எனினும் இந்தத் தகவல் பிரான்சில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டிய தலைவர் இவ்வாறு செலவு செய்வதா எனப் பலரும் விமர்சித்துள்ளதுடன், சமூக வலைத் தளங்களில் ஹொலண்டேயைக் கேலி செய்து வருகின்றனர். (த-ரி4)

## பிரிட்டன் வெளியுறவு அமைச்சராக போறிஸ்

லண்டன், ஜூலை.15

பிட்டன் புதிய பிரதமர் தெரிவுக்குப் பின்னர், தெரேசா மேயின் அரசில் வெளிவிவகார அமைச்சராகப் போறிஸ் ஜோன்சன் பதவியேற்றார். நேற்று முன்தினம் இந்தப் பதவியேற்பு நடந்தது. பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறவேண்டும் என்பதற்கு ஆதரவாகச் செயற்பட்ட அணியின் தலைவாராகப் போறிஸ் இருந்தார். அத்துடன் அவர் முன்னாள் லண்டன் முதல்வர் ஆவார். இவர் பிரிட்டனின் பிரதான அரசியல்வாதிகளுள் ஒருவர். கடந்த 8 ஆண்டுகளாக லண்டன் மேயராக இருந்து, பிரிட்டன் அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வந்தார்.

வாக்கெடுப்பில் பிரிட்டன் வெளியேறும் அணி வெற்றி பெற்றதால், பிரதமராகப் பதவி வகித்த டேவிட் கமரூன், பதவி விலகவேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டார். இதனால் போறிஸ் பிரதமராவார் என்னும் கருத்துக்கள் நிலவின. ஆனால், அவர்களது கூட்டணியில் ஏற்பட்ட விரிசல்கள், எதிரான விமர்சனங்கள் காரணமாகப் பிரதமர் போட்டியில் இருந்து விலகினார் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற போறிஸ் அடாவடித்தனத்தால் அங்கு பிரபல்யமானார். படிப்பை முடித்தவிட்டு ரைம்ஸ் பத்திரிகையில் ஊடகவியலாளராகப் பணிபுரிந்து வந்தார். பின்னர் 2001 ஆம் ஆண்டில், எதிர்க்கட்சியின் சட்டவல்லுநராகப் பதவிவகித்தார். இதனை அடுத்து லண்டன் மேயராக அவர் பதவி வகித்தார். பிரிட்டன் அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியான உயர்வுகளையும், எதிர்பாராத திருப்பங்களையும் ஏற்படுத்தியவராக போறிஸ் திகழ்கிறார். (த-ரி4)







பிரான்ஸில் நேற்று பிரெஞ்சு தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு பிரெஞ்சு இராணுவத்தின் அணிவகுப்புகள் இடம்பெற்றன. அவற்றைப் பார்வையிட உலகின் பல பாகங்களில் இருந்தும் பிரெஞ்சு பேசும் மக்கள் ஒன்று திரண்டனர். அத்துடன் வாணவேடிக்கைகளும் இடம்பெற்றன. 1789 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் இடம்பெற்ற பிரெஞ்சுப் புரட்சியை நினைவு கூரும் தினமே இதுவாகும். 200 வருடங்களின் பின்னரும் பல மில்லியன் மக்கள் ஒன்றிணைந்து தமது தேசியத்தை நினைவு கூருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத ராசி பலன்கள்




## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்

அடக்கமான சுபாவம் உடைய தனுசு ராசியினரே நீங்கள் தன்மையாக எல்லோரிடமும் பழகக் கூடியவர்கள். இந்த மாதம் தைரிய ஸ்தானத்தில் கேது, சப்தம ஸ்தானத்தில் சூரியன் - புதன் - சுக்கிரன், பாக்கிய ஸ்தானத்தில் ராசிநாதன் குரு - ராகு, அயன - சயன போக ஸ்தானத்தில் வக்கிரக நிவர்த்தி பெற்ற செவ்வாய் - சனி என கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது. ராசிக்கு 12இல் செவ்வாய் சஞ்சாரம் செய்வதால் செலவு கூடும். வாகனங்களால் செலவு உண்டாகும். மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். ராசிக்கு 7இல் சூரியன் சஞ்சாரம் செய்வதால் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்தக் காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது.

தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். வீண் அலைச்சல் எதிர்பாராத செலவும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகள் கூறிய வேலையைச் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சக ஊழியர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

குடும்பத்தில் ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்கள் உறவினர்களுடன் மனஸ்தாபம் உண்டாகலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

பெண்கள் மனத்டுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது. தேவையான உதவிகள் கிடைப்பது தாமதப்படும். வீண் அலைச்சல் உண்டாகலாம்.

மாணவர்கள் படிப்பதில் தடுமாற்றம் இல்லாமல் பாடங்களைப் படிப்பது நன்மை தரும். சக மாணவர்களிடம் எச்சரிக்கையாக பழகுவது நல்லது.

**பரிகாரம்:** நவக்கிரகத்தில் குருவை; நெய் தீபம் ஏற்றி வணங்கி வருவது மன அமைதியை தருவதுடன் எல்லா நன்மைகளையும் தரும்.

**மூலம்:**
தகராறு, வழக்குகளில் சாதகமான போக்குக் காணப்படும். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். கௌரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் ஏற்படலாம் கவனம் தேவை.

**பூராடம்:**
தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணப் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாகப் பலன் கொடுக்கும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவீர்கள்.

**உத்தராடம் 1ம் பாதம்:**
குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். திருமணக் காரியங்கள் கைகூடும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளிகுறையும்.
பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்ப்புகள் விலகும். தடைப்பட்ட காரியம் நடந்து முடியும். பணவரத்து திருப்தியைத் தரும்.

# இணுவில் ஞானலிங்கேச்சுரத்தின் புகழ்பாடும் அருட்திருப் பாடல்கள்

■ அரியாலையூர் செல்வா

செந்தமிழில் குடமுழுக்குச் செய்யப்பட்டு ஞானலிங்கேஸ்வரருக்கு இணுவிலில் கடந்த 10ஆம் திகதி புதிய ஆலயம் தோன்றியுள்ளது. இது ஒரு தமிழ் ஓதும் திருக்கோவில் ஆகும். ஞானலிங்கேச்சுரம் திருக்குடமுழுக்குத் தொடர்பாக 10 பாடல்களைக்கொண்ட இறுவட்டு ஒன்றும் வெளியிடப்பட்டது.

இதன் பாடல்களை சிவமகிழி, மூரோ, ச.வே. பஞ்சாட்சரம், அனாதி, ஆகியோர் இயற்றியிருந்தனர்.

தென்னிந்தியப் பாடகர்களான பாலசுப்பிரமணியம்,மதுபாலகிருஷ்ணன் உன்னி கிருஷ்ணன், நித்தியஸ்ரீ உன்னிமேனன் ஆகியோரின் குரலில் இந்தப் பாடல்கள் பதியப்பட்டன.

டி.வி.ரமணியின் இசையில் பாடப்பட்ட இந்தப்பாடல்களைக் கேட்கக் கிடைத்தமையும் ஒரு பெரும் பேறே பாடல்களை யாத்தவர்களில் ஒருவரான மூரோவைத் தரிசிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

மூரோ வித்தியாசமான பெயராக இருக்கிறதே எனக் கேட்டபோது, தனது தந்தையாரினதும், தாயாரதும் முதற் பெயர்களைக் கொண்டு இந்தப் பெயரைத் தெரிவு செய்ததாக மூத்ததம்பி தவரத்தினம் என்ற இயற்பெயரைக் கொண்ட அவர் தெரிவித்தார். இவரின் பூர்வீகம் உரும்பிராய். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சுவிஸில் வசித்துவரும் இவர், இறைபணி நிமித்தம் சைவமும், தமிழும் வாழும் உலக நாடுகள் அனைத்துக்கும் பயணம் செய்து இறைபணியாற்றி வருகின்றார். இன்ன சமயம்தான் மெய்ச் சமயம் என்பதற்கு அப்பால் ஆன்மிக ஈடேற்றத்துக்கும் மனச் சாந்திக்கும், உலக ஒற்றுமைக்கும் உதவும் அனைத்துமே வரவேற்கப்பட வேண்டியவையே என்ற கொள்கையோடு செயற்பட்டுவருவதை அவருடனான கலந்துரையாடலின் போது அறிய முடிந்தது. அதனை அவர் யாத்த ஈழத்திருமணி நாட்டில், சிவதலம் மற்றும் ஆதியாய் வந்தாய் என்கின்ற ஞானலிங்கேச்சுரம் திருக்குடமுழுக்கு இறை அருட்திருப் பாடல்களின் இறுவட்டிலும் கேட்கக் கூடியதாக இருந் தது.



ஆதியாக நின்றாய்
அருள் சோதியாக வந்தாய்
உள்ளும் புறமும் ஆனாய்
உள்ளதெல்லாம் நீயே ஆனாய்

என்கிற அருட்திருப் பாடல் உன்னி மேனன் குரலில் கேட்கும் தோறும் இனிக்கின்றது.

அல்லாமலும் இறை என்பது என்ன என்கின்ற ஆன்மிகத் தேடல்களுக்கும் விடை தருவதாக அதன் வரிகள் அமைந்துள்ளன.

அணுவுக்குள் அணுவானாய்
அகன்று விரிந்து எங்கும் நிறைந்தாய்
மலருக்குள் வாசம் செய்கின்றாய்
மறைவாக மனதுக்குள் பேசுகின்றாய்
வித்துக்குள் விருட்சமாய் ஒளிந்துள்ளாய்
பழத்துக்குள் உருசியானாய்
உடலுக்குள் ஓடி உணர்த்துகிறாய்
மெய்ப்பொருளாக இருக்கின்றாய்

என வரும் அடிகள் தேடலை விரிவாகக் துணை நிற்கும் அடிகளாகும்.

சிவதலம் எழும் எனும் தரிசனம்
சித்தர்கள் அருளிய அருள் வாக்கு
கடும் புயல் ஓயுமெனும் திருவாக்கு
கருணைக் கடல் பெருகும் எனும் அருள்வாக்குப் பாடலும் பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் குரலில் கேட்க ஒரு சுகம் பரவுவதை உணரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னாலும் வெட்கமடா சொல்லாவிட்டால் துக்கமடா

இளமதி

நன்மை செய்யப் பிறந்த நீ! நன்மை செய்யாவிடிலும் தீமையாவது செய்யாது இருப்பாயாக; என்பது உயர்ந்த உபதேசம். இந்தக் கலியுகத்தில் ஒருசிலரைத் தவிர அனேகமானோர் இதை மதிப்பதாக இல்லை. நான் கண்ட சிலகாட்சிகளைச் சொல்வது எனது நோக்கம். எமது நாட்டை சிங்கப்பூர் மாதிரி ஆக்க வேண்டுமெனக் கூறும் சில அரசியல்வாதிகள் இருக்கும் நாட்டில்தான் ஐயா இவர்களும் வாழ்கிறார்கள். சிங்கப்பூர் மாதிரி நாட்டைக் கொண்டு வரமுன்பு இப்படியானவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட வேண்டும்.

சிலர், பரம்பரை தோசமோ என்னவோ தெரியாது. பொது நன்மையைக் கருதாது சுயநலவாதிகளாகவே வாழ்கின்றனர். பிராணிகளை (நாய்) வளர்ப்பது நன்று. வளர்க்கலாம். ஆனால், அதன் மலத்தை வீட்டு வளவுக்குள் புதைக்க விரும்பாமல் ஊராருக்கு தொல்லைகளாக வெளியில் போடுவதும், நாய்களைக் காலை, மாலையில் மட்டும் அதற்காகப் படலையைத் திறந்து வெளியே விட்டு அயலவரின் வீடுகளிலும், பொது இடங்களிலும் அதை கழிக்கவிடுவதும் முறையா? நீதியா? மனிதாபிமானமா? உனக்குப் பிடிக்காததைப் பிறருக்குச் செய்யாதே என்பது கொன்பியுசியசின் போதனை. எவ்வாறு பார்ப்பினும். இது முறையற்ற, சமூக இசைவாக்கமற்ற, சுயநலமான ஒரு கூடாத செயல். நான் சொன்னது நாயைக் கட்டி வளர்த்து அது கழிக்க மட்டும் வெளியே அனுப்பும் பேர் வழிகள் சிலர் தொடர்பானது. கள்ளப் பூனை பால் குடிக்கும் போதுதான் கண்ணை மூடிக்கொண்டு மற்றவர்களுக்குத் தெரியாது எனச் சிந்திக்கும் அது மாதிரி சிந்தித்துக் கொண்டு, அதை அள்ளி வீதி ஓரங்களில் போடுவர். மேல் நாட்டவர் நாயுடன் நடந்துபோகும்போது கூட அதற்கான கடதாசியைக் கொண்டு போவார்கள் அது கழித்தால் அதை அள்ளிக் குப்பைக்கூடையில் போடுவார்கள். சிலர் எப்போதும் நாய்களைக் கட்டாமல் தெருநாயாக வளர்ப்பார்கள். இதுதான் நடை பெறும் விபத்துக்கள் பலவற்றுக்குக் காரணம். சும்மா போவோர் வருவோரைத் துரத்திக், கடித்துத் தொந்தரவும் செய்வன. இதுவரை மூன்று விதமான மனிதரைப் பற்றிச் சொன்னேன்.

அடுத்து சிலரின் வேலிகளில் உள்ள முட்செடி, கொடிகள், தடிகள் தெருவால் போவோரைக் காயப்படுத்தும் விதத்தில் காணப்படுகின்றன. பெரிய வாகனங்கள் வந்தால் அவற்றுக்கு வழிவிட கரையாகப் போகும் சைக்கிளில் செல்வோரும், நடந்து போவோரும் இதனால் துன்பத்துக்கு உள்ளாவர். இப்போ மிகப்பெரிய வாகனங்கள் சிறிய ஒழுங்கைகள் வழியாகவும் செல்கின்றன. பலர் காயமடைந்தும் உள்ளனர். பிறருக்கு செய்யாதவர்கள் என்றே இவர்களைக் கருதவேண்டும்.

பருகிய ஜூஸ் பைக்கட், வெற்றுப் போத்தல்கள் என்பவற்றை வீதிகளிலும், மற்றவர்களின் வளவுகளுக்குள்ளும் வீசுகின்றனர். இதில் பாடசாலை மாணவரின் பங்கு அதிகம். பெரும் குடிமக்கள் மதுவை குடித்துவிட்டு போத்தல்கள், கோப்பைகள், வெறும் பைக்கட்டுக்கள் என்பவற்றை வீதிக்கரைகளிலும், பிறரின் வீட்டு வளவுக்குள்ளும் வீசுகின்றனர். இவர்களைச் சிங்கப்பூர் வாசிகள் ஆக்க இடிஅமீன் தான் வரவேண்டும். விசேடங்களுக்கு வீதியை அலங்காரம் செய்வது நல்லது. சுகம் இல்லாதவருக்கு எப்போவாயினும் நீராட்டுவதுபோல இந்தத் தெருக்களுக்கும் எப்போதாவது ஒருநாள்தான் சோடிப்பு நடக்கும். நல்லது. சோடிக்கட்டும். ஆனால், அவை அலங்கோலமாகும் முன்பு அவற்றை அகற்ற வேண்டும். நான் குறைமட்டுமல்ல ஒரு நிறைவையும் கூறவேண்டும், நான் வெளி மாவட்டத்தில் உத்தியோகம் பார்த்தனான், அங்கு வேலிக்கு மேலாக பிழிந்த தேங்காய்ப்பூ, மரக்கறிக்கழிவுகள், மீன், முட்டைக்கோது ஆகியவற்றின் கழிவுகளைப் பாதசாரிகள் போகும்போது வீசுவார்கள். இங்கு அப்படி அல்ல. இருப்பினும் முன்னேற வேண்டுமென்பதே எனது அவா.

வேறு ஒரு மாவட்டத்தில் குளிக்கும் நீரைக்கூட தெருவில்தான் ஓடவிடுவார்கள். அதுவும் ஒரு மாநகர சபைதான். எங்கள் ஊரிலும் இப்ப அப்படியான ஆள்கள் சமையல் பாத்திரங்கள் கழுவும் நீரைக்கூட பாதையில் ஓடவிட்டு ஊரை அசிங்கப்படுத்தும் விதமாக வாழுகின்றார்கள். ஐயா! ஊரை ஊத்தையாக்கி நீங்கள் மட்டும் சுத்தமாக வாழ முடியுமா? இதை ஒரு மரத்துக்குப் போகவிட்டால் புண்ணியமல்லவோ!

> ஒரு வயோதிப அம்மா வந்தா குப்பையைப் பார்த்தா. என்னையும் பார்த்தா, நீயுமோ போட்டனீ என்ற மாதிரி, நானும் அப்பதான் வந்தனான் என்றேன். தம்பி இதுதான் கர்ப்பூரம் கொளுத்துவதை விடப் புண்ணியம், வா பொறுக்குவோம், நீ பார்வதியின்ரை பேரனல்லோ? அந்த மனுசிதான் எங்களுக்கு இப்படியான புத்தி சொல்லித்தானும் செய்கிறது என்று என்னவோ வாய்க்குள் முணுமுணுத்தா.

ஒரு மாதரசி தனது படலையடியைக் கூட்டி மற்றவர்களின் வேலிக்கரையில் தள்ளி விட்டு விடுவார். ஒரு நாள் காலை ஒரு நண்பரின் வீட்டுக்குச் சென்றேன் அங்கு நண்பரும் மகனும் சிறிது படபடப்புடன் முற்றத்தில் நின்றனர். அந்த இடத்துக்குச் சென்ற பின்பு தான் நான் விடயத்தை உணரமுடிந்தது. ஒரே சிறுநீர் வாடை! நண்பர் என்னைப் பார்த்துச் சொன்னார்! அயல் வீட்டுக்காரன் இரவிலை வேலிக் கரையிலை தான் சிறுநீர் கழித்து விடுகின்றவர். விடிய எங்களுக்கு ஒரே வெடுக்கு இருக்கவேமுடியாது– என்று. இந்தக் காலத்திலும் இவ்வளவு மோசமான ஆள்களா? எனக்குள் நினைத்துக் கொண்டேன் அண்ணை, இதை அந்தாளுக்கு எவ்வாறு விளங்கப் படுத்துவது? என்று அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

வெள்ளிக்கிழமை கோயிலுக்குப்போக அங்கே கர்ப்பூரம் கொளுத்திய இடத்தில் கடதாசி, கர்ப்பூரப் பைக்கட் கடதாசி, நெருப்புக்குச்சி என ஒரே குப்பை. கோயில் தலைவர் சொன்னார் கொளுத்தின கர்ப்பூரம் புண்ணியம். போட்ட குப்பை பாவம் –என்றார். ஒரு வயோதிப அம்மா வந்தா குப்பையைப் பார்த்தா என்னையும் பார்த்தா, நீயுமோ போட்டனீ என்ற மாதிரி, நானும் அப்பதான் வந்தனான் என்றேன். தம்பி இதுதான் கர்ப்பூரம் கொளுத்துவதைவிடப் புண்ணியம், வா பொறுக்குவோம், நீ பார்வயின்ரை பேரனல்லோ? அந்த மனுசிதான் எங்களுக்கு இப்படியான புத்தி சொல்லித்தானும் செய்கிறது என்று என்னவோ வாய்க்குள் முணுமுணுத்தா. பின்பு கோயிலுக்கு உள்ளேபோக ஓரளவு உயர ஒலிபெருக்கி உச்ச ஒலியிலை குத்து பாட்டு மாதிரி ஏதோ பாட, கிழவி உந்தக் குளறியை ஏன் இப்படிக் கத்தவிட்டிருக்கு? மனிதர் அமைதியாய்த் தேவாரம் பாடுறதில்லையோ? தியானம் செய்யிற தில்லையோ? திருவிழா என்றால் மனிதர் ஊரிலையே இருக்கமுடியாது. ஒரே சத்தம்; பேரப்பிள்ளைகள் சொல்லும் ஏதோ சுற்றாடலை மாசுபடுத்திற வேலையென்றும், படிக்கமுடியாது இருக்கு என்றும் என்று குறைபட்டார். இது கலியின் தோசம். எங்கும் தேவையற்ற வீண் ஆடம்பரங்கள். என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன்.


இப்படியான நடவடிக்கைகளால் பாதிக்கப்படுபவர்கள் எப்படி இதைச் சொல்லாமல் இருக்க முடியும்? அதுதான் ஐயா! இதற்குச் சொன்னாலும் வெட்கமடா? சொல்லாவிட்டால் துக்கமடா? எனத் தலையங்கம் வைத்தனான். இவை சுற்றாடலை மிகவும் மோசமாக மாசுபடுத்தும் இரகசியச் செயற்பாடுகள் அன்றோ? அருவருப்புத்தான் வேறு என்ன செய்வது? என்னை வாசகர்கள் மன்னிக்கவும் இப்படியானவர்கள் திருந்தவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





வி.ஹரிப்பிரியா
தரம் – 4
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்தி ரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.

## காரியம் எல்லாம் சூரியனாலே!

ஆதவன் என்கிற ஒளிக்கோலம்
அகிலத்தை நடத்தும் விழிக்கோலம்!
பூதலம் விழிக்க ஒளிகொடுத்துப்
பூமழை பிறக்க முகில் தருமே!

பகலவன் என்கிற அக்கோலம்
பாருக்கு வெப்பம் தந்திடுமே!
சுகமது மானிடர் பெற்றிடவே
தூய்மையாய்த் தரணியை வைத்திடுமே!

இரவினை விரட்டும் ஒளிகொடுத்து
எங்கினும் வைட்டமின் கதிர் கொடுக்கும்!
வரவினைப் பெருக்கி மகிழ்வளித்து
வாழ்வில் உயிர்க்கு வரமளிக்கும்!

சூரியன் எனுமந்தப் பேரொளியைச்
சுற்றியே உலகம் சூழல்கிறது!
காரியம் யாவும் சூரியனால்
காலத்துக்கு ஏற்ப நடக்கிறது



# சிறுவன் கண்ட அனுபவம்



ஓர் ஊரில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளம்நிறையத் தவளைகள்.அவை எல்லாம் பாதி உடலைத் தண்ணீருக்குள் வைத்துக் கொண்டு மீதியை வெளியே காட்டி "திருதிரு" என்று விழித்துக் கொண்டிருந்தன.

அவ்வழியாகப் பள்ளிக்குச் சென்ற சிறுவன் ஒரு கல்லை எடுத்து அந்தக் குளத்தில் எறிந்தான். அவ்வளவுதான். எல்லாத் தவளைகளும் 'டப் டப்' என்று தண்ணீருக்குள் மறைந்து விட்டன. சிறிது நேரம் அந்தச் சிறுவன் அங்கேயே நின்று பார்த்தான். மறுபடியும் தவளைகள் எழும்பிப் பார்க்கின்றன. கல்லை எறிந்தால் மீண்டும் தண்ணீருக்குள் மறைந்து விடுகின்றன. அந்தக் காட்சியைக் கண்டு களித்து விட்டுச் சிறுவன் வீட்டுக்குத் திரும்பினான். அவன் தினமும் பள்ளிக்குச் செல்லும் போது அதைக்கண்டு மகிழ்வான்.

சிறுவனின் தந்தை ஒரு வியாபாரி. அவன் இரவு நேரத்தில் கோயிலில் நடைபெறும் கதைப் பிரசங்கத்துக்குப் போய்வருவது உண்டு. தன் மனைவியிடம் "புராணக் கதைகளைக் கேட்கும்போது எனக்குப் பக்தி மேலோங்குகிறது. மெய் சிலிர்க்கிறது" என்று தனக்கு ஏற்படும் பக்தியின் பெருமையை தானே புகழ்ந்து கூறிக்கொண்டான் வியாபாரி.

அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவன் அம்மா! அப்பாவின் பக்தி எப்படி இருக்கிறது என்றால், "குளத்தில் தவளைகள் எட்டிப் பார்க்கின்றன. கல்லை விட்டு எறிந்தால் உள்ளே மறைந்து விடும். மறுபடியும் வெளியே தலையைக் காட்டும். மீண்டும் கல்லை எறிந்தால் உடனே மறைந்து விடும். அதை போல கதை கேட்கும் போது பக்தி ஏற்படும். பிறகு கடைக்குப் போனதும் அது மறைந்து விடும்" என்றுகூறி தான் நேரில் கண்ட காட்சியை விவரித்தான்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1381 - குடியானவர் புரட்சித் தலைவர் ஜோன்போல் இங்கிலாந்து அரசர் இரண்டாம் றிச்சார்ட் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டு, நான்கு துண்டுகளாக்கப்பட்டார்.

1888 - ஜப்பான் புகுஷிமாவில், பண்டாய் எரிமலை வெடித்து, 500பேர் வரை உயிரிழந்தனர்.

1910 - தனது கிளினிக்கல் சைக்கியாற்றி நூலில், எதில் கறீப்லின், தனது நண்பர் அலொயிஸ் அல்ஸீமெர் நினைவாக மூளை சம்பந்தப்பட்ட நோயொன்றுக்கு அல்ஸீமெர்ஸ் எனப் பெயரிட்டார்.

1927 - 89 ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒஸ்ரியன் பொலிஸாரால் வியன்னாவில் கொல்லப்பட்டனர்.

1966 - வியட்னாம் போர்: அமெரிக்காவும், தென் வியட்னாமும், வியட்னாம் இராணுவ சூனியப் பிரதேசத்திலிருந்து வட வியட்னாமியரை வெளியேற்றும், நடவடிக்கையைத் தொடங்கின.

1971 - ஜப்பானில் ஐக்கிய செம்படை உருவாக்கப்பட்டது.

1986 - மாகாண சபை யோசனையை 7 அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொண்டதாக ஜே.ஆர் தெரிவிப்பு. தமிழ்க் காங்கிரஸ் நிராகரித்ததாகவும் தெரிவிப்பு.
- பிரபாகரன் - விஜேகுமாரணதுங்க புதுடில்லியில் சந்திப்பு.
- மட்டக்களப்பில் ஏழு முகாம்களில் 9819 அகதிகள்.

1995 - செஞ்சிலுவைச் சங்க ஜெனிவா அறிக்கைக்கு இலங்கை அரசு கடும் ஆட்சேபம் இது நவாலி தேவாலயப் படுகொலை தொடர்பானது.
- யாழில் தமிழ் மக்கள் மீதான தாக்குதல் தொடர்பாக பாப்பரசர் கவலை.

1998 - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சண்முகநாதன் கிளைமோர் வெடிப்பில் கொல்லப்பட்டார்.

2002 - அனைத்துக் கட்சி மாநாட்டை கூட்டக் கோருகிறார் ஜனாதிபதி.
- ஒலியைவிட இரண்டு மடங்கு வேகம்கொண்ட அடுத்த தலைமுறை சுப்பர் சொனிக் சோதனைப் பறப்பு முயற்சி தோல்வி.
- படையினர் தொடர்ந்து பனைகளைத் தறிக்கின்றனர் எனப் பொது மக்கள் முறைப்பாடு.
- பனை அழிப்பைக் கண்டித்து தென்மராட்சி மக்கள் ஒன்று திரண்டு கண்டனப் பேரணி.

2005 - பொதுக் கட்டமைப்பின் பிரிவுகளுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை. அரசு–புலிகள் உடன்பாடு அதனால் தவிடுபொடி.
- அக்கரைப்பற்றில் 3 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொலை: அவர்கள் பயணித்த ஓட்டோ தீக்கிரை.
- மூன்று ஆண்டுகளில் 114 பேருக்கு சாவுத் தண்டனை: பங்களாதேஷ் நீதிபதி சாதனை.
- தென்கொரியாவில் அடுத்தடுத்து இரண்டு பயிற்சி விமானங்கள் கடலில் வீழ்ந்தன: விமானிகள் சாவு.

2006 - ருவிட்டர் தொடங்கப்பட்டு உலகின் மாபெரும் சமூக வலைத் தளமாக ஆகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகிலமே இயங்கிக் கொண்டிருப்பது நடல் வல்லானின் தரிசனத்தினால்

காரை.எம்.பி. அருளானந்தன்

பிரபஞ்சத்திலே ஆடல் அரசனின் திருவிளையாடலே ஒரு தனித்தன்மை வாய்ந்தது. பல விஞ்ஞான இரகசியம் கொண்ட அந்த ஆடலுக்கு நிகர் எதுவுமே கிடையாது. பிரபஞ்ச சிருஷ்டி, ஸ்திதி, சம்வாரத் தத்துவங்களைக் குறிக்கும் மூர்த்தமாகக் கொண்ட உருவம், பஞ்சபூத தத்துவங்களைக் காட்டும் வடிவம். அசைவின் அதிர்வுகளை அற்புதமாகக் காட்டும் நடனம் எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்ட மூர்த்தியாகத் தில்லையில் காணப்படுபவர்தான் தில்லை அம்பலவாணன்.

சிதாகாசத்தின் அமைப்பை வெற்றிடமான நிலையில் பரந்த ஆதாரத்தத்துவமாகக் குடிகொண்டவன். வலப்பாதத்தைப் பதித்து இடது காலைத் தூக்கி ஆடுபவன். வலது, இடது என ஆடும்போது இடகலை, பின் கலை, சுள்முனை நாடியை பதப்படுத்தி எழும்பச் செய்யும் யோக வடிவினன். தாளம் தப்பாதுதான் ஆடி உலகை ஆட்டும் சிற்சபேசன் .

தனது அங்க அசைவுகளால் பல கரணமுத்திரைகள் மூலம் நான்கு திசைகளிலும் ஒலி அதிர்வுகளை ஒலிப்பவன். நாத சப்தத்தை உடுக்கை ஒலிமூலமும் வேதசப்தத்தை ஓம் என்னும் ஒலி மூலமாகவும் எழுப்பி பரவெளிரகசியத்தை மேல் நோக்குப் பார்வையால் காட்டி அண்ட சராசரம் எல்லாம் தனக்குக் கீழ்தான் எனக் காட்டவே காலைத்தூக்கி ஆடியும், அசுர தீயசக்தியை அழிக்கும் விதமாக முயலகன் என்ற அசுரனின் முதுகில் நடனமாடியும் அக்கினி என்னும் காமத் தீயை கையில் ஏந்தி, அடக்கி இருளாக்கிய அலை மோதும் மனம் எனும் பாம்பை கழுத்தில் அணிந்தும் தத்தித்தத்தரிகிட என்ற ஓசை மூலம் அது, அது, அது அதுவே பிரம்மம் என்றும், தாம், தோம், தீம், தீம் என மாறும்போது பிரமத்தில் ஒலி பேரொளியாக மாறி பிரபஞ்சத்தில் உயிர்களின் சக்தியாக மாறி இந்த வையகம் வாழ வழிவகுக்கின்றது.

விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும்போது எந்த ஒரு பொருளும் ஒன்றுடன் ஒன்று கலந்து மோதும்போது மோதும் திறமைக்கு ஏற்ப புதியதோர் வடிவமாக மாறும் என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இப்பேற்பட்ட ஒலி அலைகள் ஒன்றோடு ஒன்று பஞ்ச பூதங்களில் கலந்து சேரும்போது உயிர்களுக்கு வேண்டிய பயிர்கள், மற்றும் கனி வளங்கள் தோன்றுகின்றன.

இத்தகு தத்துவார்த்த சிந்தனைகளை சிவ வாழ்வியலுடன் பெருக்கி நிற்கின்ற இறைவனது இந்தத் திருநடனம் அனவரத தாண்டவம் என்று கூறப்படுகின்றது.

அணுமுதல் அண்டம் வரை இடைவிடாது அசைந்து கொண்டிருக்க முதற் காரணம் இவரது ஆனந்த தாண்டவமே ஆகும். இந்த ஆனந்தக் கூத்தைக் கண்டுகளிக்க மனிதப் பிறவி வேண்டும் என்கிறார் அப்பர்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

இவ்வாறாக எம் பெருமானின் ஆனந்தக் கூத்தினால் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. நடராஜரது உடுக்கேந்திய திருக்கரம் படைத்தலையும், அஞ்சேல் என்னும் அபய கரம் காத்தலையும், கையில் ஏந்திய தீ அழித்தல் தொழிலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் உணர்த்தி நிற்கின்றன.

இத்தகு ஆடல் வல்லானாக விளங்குகின்ற சிவனை நாமும் வழிபட்டு நல்வாழ்வு பெறுவோமாக.

# பகுத்தறிவை ஆறறிவு படைத்தவர்கள் பயன்படுத்தாமல் விடுவது நீதியா?

இறைவன் சகல உயிரினங்களுக்கும் அறிவைப் படைத்திருக்கிறான். மரங்களுக்குக்கூட ஓரறிவு உண்டு. உயிரினங்களில் உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற மனிதர்களுக்கு ஆறறிவு உண்டென்பதை அனைவரும் அறிவோம். பகுத்து அறியும் அறிவே இறுதியான ஆறாவது அறிவு எனக்கூறுவார்கள். இந்த பகுத்தறிவு காரணமாகவே மனிதர்கள் ஏனைய உயிரினங்களில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றனர்.

ஆனால், ஆறறிவு படைத்த மனிதர்கள் அனைவரும் ஒத்த குணவியல்புகளைக் கொண்டிருப்பதில்லை. சிலர் எந்த நேரமும் சிடுசிடுவென்ற முகத்தோற்றத்துடன் காணப்படுவார்கள். இவர்கள் எடுத்ததற்கெல்லாம் கோபப்படுகின்ற இயல்பைக் கொண்டிருப்பார்கள். இவர்களை அணுகுவதை மற்றவர்கள் விரும்புவதில்லை. மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்கூட இவர்களிடமிருந்து ஒதுங்கியே நிற்பார்கள். சிலர் எதற்கும் கோபப்படமாட்டார்கள். எவரையும் பகைத்துக் கொள்ளவும் இவர்கள் விரும்பமாட்டார்கள். இந்த இயல்பைக் கொண்டே தமது காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். சிலரிடம் கோபம் இருக்காது. ஆனால், மற்றவர்களால் ஏமாற்றப்படுகின்ற வெகுளித்தனம் நிறைந்திருக்கும். இதேவேளை- சாந்த சொரூபிகளாக இருந்து மற்றவர்களுக்கு உதவுகின்ற மனப்பக்குவம் உடையவர்களையும் காணமுடிகின்றது. மனிதப் படைப்புக்களில் இவர்களே உயர்ந்தவர்கள். இவர்களைத் தெய்வங்களுக்குச் சமனாகவும் கருதமுடியும்.

ஆணவம், செருக்கு, மற்றவர்களை மதிக்காத தன்மை, எதற்கெடுத்தாலும் பொறுமையை இழக்கும் தன்மை ஆகியன தற்போது பெரும்பாலான மனிதர்களிடம் குடிகொண்டிருப்பதைக் காண்கின்றோம். இத்தகையவர்கள் மற்றவர்களை மதித்து நடப்பதில்லை. ஒரு சிறிய தவறுகூட இவர்களது கண்களுக்குப் பெரிதாகத் தென்படும். மற்றவர்களை வறுத்து எடுப்பதில் இவர்கள் வல்லவர்கள்.

தவறு செய்பவர்களை மன்னித்து விடுகின்ற குணமே பெரிதெனக் கூறுவார்கள் பெரியவர்கள். இத்தகைய குணத்தைக் கொண்டிருப்பவர்கள் தெய்வத்துக்கு ஒப்பாக வைத்துக் கருதப்படுவார்கள். அனைவரும் இவர்களை விரும்புவதற்கும் தவறுவதில்லை.

இன்று பெண்கள் மட்டுமே பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு ஆண்களிடம் காணப்படுகின்றது. கோபம் கொள்ளாதவன் ஆணேயல்ல என்பதும் இவர்களது வாதமாக உள்ளது. இதை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆணாதிக்கத்தின் வெளிப்படாகவும் இதைக் கொள்ளமுடியும். இறைவனின் படைப்பில் ஆணுக்கும், பெண்ணுக்கும் பேதம் கிடையாது. எல்லாமே மனிதர்களால் உருவாக்கப்பட்டவைதான். பெண்ணிடம் கற்பு எனும் ஒழுக்கத்தை எதிர்பார்க்கின்ற ஆண்கள் தாம் ஒழுக்க சீலர்களாக வாழ வேண்டும் என்பதை ஏனோ மறந்து விடுகின்றார்கள். கம்பராமாயணத்திலே கூடத் தனது கற்பை நிரூபிக்கவேண்டிய கட்டாயம் சீதைக்கு உருவாகியது. இதற்காக எரிகின்ற தீயில் அவள் இறங்கியதாகவும் கூறப்படுகின்றது. ஆனால், தனது ஒழுக்கத்தை நிரூபிக்கவேண்டிய தேவை இராமனிடம் எழவில்லை. இதை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆறறிவு கொண்ட மனிதர்கள் தமது பகுத்தறிவைப் பயன்படுத்தாமல் வாழுகின்ற வாழ்க்கை மிருக வாழ்க்கைக்கு ஒப்பானது. ஏனென்றால் மனி தர்களையும், மிருகங்களையும் வேறுபடுத்திக் காட்டுவது இந்த ஆறாவது அறிவான பகுத்தறிவுதான். ஆகவே இதைப் பயன்படுத்துவதற்கு மனிதர்களாகிய நாம் முனைப்புடன் ஈடுபடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம் :** உதவும் மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். நற்செயல் புரிந்து, சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**இடபம் :** இஷ்ட தெய்வ அருளால், நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும். சராசரிப் பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். மனைவி விரும்பிக்கேட்ட பொருளைவாங்கிக்கொடுப்பீர்கள்.

**மிதுனம் :** நல்லவரையும் நீங்கள் தவறாகக் கருத வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவது நல்லது. இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**கடகம் :** முன்யோசனையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**சிங்கம் :** திறமையை வெளிப்படுத்தி, புகழ்பெறுவீர்கள். கடந்த கால உழைப்பு, ஆதாயமாக மாறும். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி :** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற, தாமதம் ஆகலாம். சிறிய பணிகூட அதிக சுமைபோல தோன்றும். தொழில், வியாபாரம் சிறக்க, கூடுதல் பணி புரிவது அவசியம். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம்.

**துலாம் :** செயல்களில் நேர்மை நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வீட்டு விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம் :** நண்பர்களின் பேச்சால், சங்கடம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. வீட்டுச் செலவுக்கான பணத் தேவை அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

**தனுசு :** அதிர்ஷ்ட வாய்ப்பு உங்களைத் தேடி வரும். நீண்ட நாள்களாக இருந்த கவலை மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருளை வாங்குவர்.

**மகரம் :** வேண்டாத நபரை சந்திக்க நேரிடலாம். பேச்சில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில், சுமாரான அளவில் இலாபம் இருக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம் :** சேவை மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச்செய்தி வீடு தேடிவரும்.

**மீனம் :** பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். சுயதேவை ஓரளவு பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் வரும் தடையை, தாமதமின்றி சரி செய்வது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | | | 7 | |
| | | 3 | | | | | 1 | 2 |
| | | | | | | | 6 | 5 |
| | | | 9 | 7 | | | | |
| | | | 6 | | 1 | 2 | | |
| | | | 1 | 5 | | 8 | | |
| 7 | 4 | | 3 | | | | | |
| | 9 | 8 | | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 6 | 8 | 7 | 2 | 5 | 4 | 3 |
| 4 | 7 | 3 | 5 | 1 | 9 | 8 | 2 | 6 |
| 8 | 5 | 2 | 6 | 3 | 4 | 1 | 7 | 9 |
| 1 | 6 | 5 | 4 | 9 | 7 | 2 | 3 | 8 |
| 2 | 8 | 4 | 1 | 6 | 3 | 9 | 5 | 7 |
| 3 | 9 | 7 | 2 | 5 | 8 | 4 | 6 | 1 |
| 7 | 2 | 8 | 9 | 4 | 6 | 3 | 1 | 5 |
| 5 | 3 | 9 | 7 | 2 | 1 | 6 | 8 | 4 |
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 7 | 9 | 2 |



சம்பளம் வாங்கின
உடனே கடனெல்லாம்
அடைச்சிட்டு நம்மகிட்ட
இருக்கிற மிச்சத்தைப்
பார்த்தா அடுத்து யார்
கிட்ட கடன் வாங்கலாம்
என்று யோசிக்க
வேண்டியதா இருக்கு!
என்ன வாழ்க்கையடா..?
ச்சே..



இராத்திரி புரண்டு புரண்டு படுத்தாலும்
தூக்கம் வாறது இல்லை...
காலை எந்தக் கோணத்தில் படுத்தாலும்
தூக்கமாவே வருது.

♥Meera♥ @meera_twits

நெருக்கமானவர்களிடம் நாம் நம்பிச் சொன்ன வார்த்தை மூன்றாம் மனிதர் வாயால் கேட்கையில், அவமானப்படுகிறது நம் நம்பிக்கை.

55 41



வயசாக...! வயசாக...!
சூடு, சொறணை,
கோபம்,
திமிர் எல்லாம்
காணாமற்
போவதைத்தான்
“மெச்சூரிட்டி” எண்டு
சொல்றாங்களோ...!




## சென்னையில் கபாலி படத்துக்கு முதன்முறையாக முதற் காட்சி திரையிடப்படவுள்ளது

சூப்பர் ஸ்டார் ரஜினியின் கபாலி படம் ரசிகர்களிடம் உச்சக்கட்ட எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் இந்தப் படத்தின் முதற்காட்சிகள் திரையிடப்படுவதற்கு ஜூலை 21ஆம் திகதி முடிவு செய்யப்பட்டு அதற்கான ரிக்கெற்றுகள் விற்கப்பட்டன. தமிழகத்தின் முக்கிய நகரங்களில் இதுவரை முந்தைய நாள் இரவு 12 மணிக்கு மேல் அல்லது அதிகாலையில் ரசிகர்களுக்காக சிறப்புக் காட்சிகள் மட்டுமே திரையிடப்பட்டு வந்தன. ஆனால் முதல்முறையாக சென்னையிலும் முதற் காட்சிகளை ஜூலை 21ஆம் திகதி மாலையில் திரையிட கலைப்புலி எஸ். தாணு திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

மனைவி:
இந்தாங்க லட்டு
கணவன்: எதுக்கு
மனைவி: நான் கர்ப்பமா
இருக்கேன்
கணவன்: அட...! ரொம்ப
சந்தோசமான விசயம். உன் அப்பா
அம்மாட்ட சொல்லிட்டியா?
மனைவி: சொல்லலை
கணவன்: ஏன்?
மனைவி: அடிப்பாங்க
கணவன்: அடிப்பாங்களா? ஏன்?
மனைவி: ஆமாங்க! இப்படித்
தான் நான் கல்லூரியில படிக்கும்
போது ஒரு தடவை சொன்
னேன். பின்னி எடுத்
திட்டாங்க?

படித்ததில் பிடித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு



லெதர் பேஸ்கள் அறிமுகமாகி யுள்ளன. இவை வைபவங்களுக்கு பயன்படுத்த உகந்தவை. 900 ரூபாவில் இருந்து 1200 ரூபா வரை விற்பனை செய் யப்படுகின்றன.

## லெதர் பேஸ்கள்

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 100 | 80 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 120 | 160 | 120 | 100 | 100 | – | 70 |
| கரட் | 200 | 200 | 240 | 180 | 220 | 200 | – | 140 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 70 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 200 | 120 | 200 | 120 | 120 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 240 | 180 | 240 | 220 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 180 | – | 120 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 140 | 120 | – | 100 |
| பூசணி | 150 | 140 | 120 | 160 | 140 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 180 | 170 | 200 | 180 | 250 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 140 | 120 | 80 | – | 50 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 700 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 | 60 | 60 | – | 60 |
| கோவா | 150 | 140 | 180 | 200 | 160 | 180 | – | 120 |
| வெண்டி | 100 | 100 | 100 | 120 | 160 | 80 | – | 60 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 180 | 160 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 180 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 25–30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 150 | 150 | 160 | 120 | 140 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 240 | 300 | – | 300 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 200 | – | 200 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 400 | 350 | 180 | 600 | – | 300 |

## ஆடிக்கூழ்



ஆடிப்பிறப்பும் இந்துக்களின் வாழ்க்கையில் மிக முக்கியமான திருநாளாகும். ஆடி மாதப் பிறப்பன்று காலையில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் கூழ் காய்ச்சுவது வழக்கமாகும்.

### தேவையான பொருள்கள்

அரிசி மா - மூன்று சுண்டு
தேங்காய் - ஒன்று
பனங்கட்டிக் குட்டான் - பெரிது ஒன்று
பயறு - 1/4 கிலோ
உளுந்து - 1/4 கிலோ
சீனி - 1/4 கிலோ
நற்சீரகம், மிளகு - சிறிதளவு
நீர் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

### செய்முறை

வாய் அகன்ற பாத்திரம் ஒன்றினுள் தண்ணீரை ஊற்றி வறுத்த பயறு, உளுந்து என்பவற்றை இட்டு கொதிக்க வைக்கவேண்டும். பின்னர் கொதித்த நீரினுள் இடித்த அரிசிமாக் கலவையை ஊற்றி அடிப்பிடிக்காமல் துலாவ வேண்டும். மாக் கலவை அவிந்து வந்ததன் பின்னர், சிறுசிறுதுண்டுகளாக்கப்பட்ட தேங்காய்த் துண்டுகளை அதனுள் இட்டு பனங்கட்டி மற்றும் சீனி என்பவற்றைக் கலந்து கொதிக்கவிட வேண்டும். நற்சீரகம் மற்றும் மிளகு என்பவற்றை அரைத்து அந்தக் கலவைக்குள் இட்டு கொதிக்க வைத்ததன் பின்னர் இறக்கிப் பரிமாறலாம்.

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 1000 | 700 | 800 |
| நண்டு | 250 | 500 | 300 | 400 | 500 | 500 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 500 | 500 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 600 | 600 | – |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 500 | 600 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 400 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 500 | 300 | 450 | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 500 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 150 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | – | 350 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 200 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 400 | – |
| வாளை | 100 | 200 | [illegible] | [illegible] | 400 | 200 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

ஆடி-01
சனிக்கிழமை - 16.07.2016
திதி: துவாதசி பி.இ 03.46 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப.12.39
ராகுகாலம் : 09.00-10.30 வரை
சுபநேரம் : 03.00-04.30 வரை
ஆடிப்பிறப்பு

## தெரிந்து கொள்ளுங்கள்

ஜாம் பொதுவாகக் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் ஒரு பொருளாகும். ரொட்டிக்கு மட்டும் அல்லாமல் தோசைக்கு, சப்பாத்திக்கு என எல்லாவற்றுக்கும் ஜாம் இணை உணவாக அமையும்.

அப்படிப்பட்ட ஜாமை வீட்டில் தயாரிக்க விரும்பினால் சில முக்கிய குறிப்புகளைப் பின்பற்ற வேண்டும்.

ஜாம் தயாரிக்கும்போது அதில் சில துண்டு ஆப்பிள் பழத்தைச் சேர்த்தால் சுவை அலாதியாக இருக்கும். உடலுக்கும் நல்லது.

ஸ்ரோபெரி ஜாம் தயாரிக்கும்போது அதில் சில சொட்டு எலுமிச்சைச் சாறு சேர்ப்பதால், ஜாம் கெட்டியாக இல்லாமல் தளர்த்தியாக இருக்கும்.

சரியாகப் பழுக்காத பழங்களையே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் ஜாம் நீண்ட நாள்களுக்குக் கெடாமல் இருக்கும்.

பழங்களைப் பதப்படுத்தித் தயாரிக்கப்படும் ஜாம்களை சாப்பிடுவதால் முதுமையில் கண்களின் திரையில் வரும் பிரச்சினைகளைத் தடுக்கலாம் என்கிறது மருத்துவம்.

முட்டையைப் பயன்படுத்தி எந்த உணவு செய்தாலும் அதில் நிச்சயமாக மஞ்சள் தூளும், சிறிது மிளகுத் தூளும் சேர்த்துச் செய்வது நல்லது.

பொரியல் அல்லது நூடில்ஸ் வகைகளில் முட்டையைச் சேர்ப்பதாக இருந்தால் தனியாக அதனைப் பொரித்து பின்னர் சேர்ப்பது சுவையாக இருக்கும். நேரடியாக பச்சை முட்டையைச் சேர்த்துக் கிளறுவதால் நாம் செய்யும் உணவுப் பொருள் குழகுழப்பாக மாறுவதுடன் ஆறியதும் முட்டை நாற்றம் அதிகமாக இருக்கும்.

## நுட்பம்




## விரைவில் கலக்சி ஜே

சம்சுங் நிறுவனம் விரைவில் தனது புத்தம் புதிய தொடுதிரைக் கைப்பேசியான கலக்சி ஜே என்றும் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தக் கைப்பேசி 7 அங்குல அளவு, 1280 X 800 பிக்சல் தீர்மானம் உடைய தொடு திரையைக் கொண்டுள்ளது. பிரதான நினைவகமாக 1.5 ஜி.பி. ரம், 16 ஜி.பி. சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது. சேமிப்பு நினைவகத்தை மைக்ரோ எஸ்டி காா்ட் உதவியுடன் 200 ஜி.பி. வரை அதிகரிக்கும் வசதி தரப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

அன்ரொய்ட் லொலிபொக் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் இந்தக் கைப்பேசியானது இரட்டை சிம் வசதியையும் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் கொண்டுள்ளது.



## வாட்ஸ்அப்பில் மட்டுமல்ல இனி பேஸ்புக்கிலும்

ஒருவர் அனுப்பிய தகவல்களை பெறுபவர் மட்டுமே பாதுகாப்பாகப் படிக்கும் வசதியான என்கிறிப்டட் சற் வாட்ஸ்அப்பில் மட்டுமே தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வாட்ஸ்அப் நிறுவனம் பயனர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காக என்கிறிப்டட் சற் என்னும் வசதியை அறிமுகப்படுத்தியது. இந்த வசதியால் தகவல்களை அனுப்பியவர், அதனைப் பெறுபவர் மட்டுமே அதனைப் படிக்க முடியும்.

இந்த என்கிறிப்டட் வசதி சமூகவிரோத செயல்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று கூறி வாட்ஸ்அப்புக்கு தடைவிதிக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் வாட்ஸ்அப்பில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த என்கிறிப்டட் சற் வசதியை பேஸ்புக் நிறுவனம் தனது மெசெஞ்சர் செயலியிலும் அறிமுகப்படுத்த உள்ளது.

இதற்கான சோதனையை தொடங்கியுள்ள பேஸ்புக் நிறுவனம் விரைவில் இந்த வசதியை அறிமுகப்படுத்தவுள்ளது.

# புதிய வாடிக்கையாளர் சேவை நிலையத்தை யாழ்ப்பாணத்தில் திறந்தது டயலொக்

**வணிகம்**

என்றும் தமது வாடிக்கையாளர்களுக்கு அதி சிறந்த சேவையை வழங்குவதற்காக முனைப்புடன் செயற்படும் டயலொக், யாழ். மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வசதியானதொரு இடத்திலிருந்து பெற்றுத்தரும் நோக்கில் தனது புதிய வாடிக்கையாளர் சேவை நிலையத்தை கடந்த 11ஆம் திகதி திறந்து வைத்தது.

இப் புதிய வாடிக்கையாளர் சேவை நிலையம் இல.105, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்திருப்பதுடன் இங்கு வாடிக்கையாளர்கள் பில் கொடுப்பனவுகள், புதிய இணைப்புகள், பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள், சிம் புதுப்பித்தல்கள் போன்ற பல தரப்பட்ட சேவைகளோடு, டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இயங்கும் புதிய சாதனங்களின் நேரடி அனுபவத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் வாடிக்கையாளர் சேவை நிலையம் அதிக கவுன்டர்கள், மேலதிக வாகனத் தரிப்பிட வசதி போன்ற பல வசதிகளைக் கொண்டிருப்பதோடு புதிய தொழில்நுட்பங்களின் உதவியுடன் மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவைகளையும் வழங்குவதனால் யாழ். டயலொக் வாடிக்கையாளர்களுக்கு புதியதோர் அனுபவத்தை வழங்கி மகிழ்ச்சியளிக்கும் என்பது உறுதி என நிர்வாகிகள் தெரிவித்தனர்.




அது மட்டுமல்லாது வங்கிகள் மற்றும் ஏனைய வணிக நிறுவனங்களுக்கு மத்தியில் நகரின் வசதியானதொரு இடத்தில் அமைந்திருப்பது இச் சேவை நிலையத்தின் விசேட அம்சமாகும். (கு)

## எஸ்.டி.பி. லக்தரு புலமைப் பரீட்சைக் கருத்தரங்குகள்

சணச அபிவிருத்தி வங்கியின் லக்தரு கணக்கின் அனுசரணையுடன், இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளுக்காக, புலமைப் பரிசில் பரீட்சைத் தொடர் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. இத்தொடரைத் தமிழ் மொழியில் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தொடரின் 3 கருத்தரங்குகள் அண்மையில் யாழ்ப்பாணம், அநுராதபுரம், மற்றும் ஹொரண ஆகிய இடங்களில் நடைபெற்றது.

அதேவேளை, பிள்ளைகளின் எண்ணங்கள் மற்றும் திறன்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதனை நோக்கி பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்வும் அவ்விடத்திலேயே நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கருத்தரங்கின்போது லக்தரு கணக்கு ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. விடே நலன்களைக் கொண்டுதரும் லக்தரு கணக்கானது, கணக்கு மீதிக்கேற்ப பெறுமதியான பரிசில்களை வழங்கும் அதே வேளை, இலவச மருத்துவமனைக் காப்புறுதியையும் கொண்டுள்ளது.

லக்தரு பரிசில்கள் சிறார்கள் மத்தியில் பிரபலமானது. முக்கியமாக உலகத் தகவல்களை கொண்ட உலக வரைபடம் மிக கவர்ச்சிகரமான லக்தரு பரிசொன்றாகும். அதேவேளை, சாதாரண சேமிப்புக் கணக்கை விட லக்தரு கணக்கிற்கு 1வீத கூடுதலான வட்டியும் வழங்கப்படுகிறது.

பிள்ளையின் ஆரோக்கியத்தை நோக்காகக் கொண்டு வழங்கப்படும் ரூ. 50,000 பெறு மதியான இலவச வைத்தியசாலைக் காப்புறுதி பெற்றோர்கள் மத்தியில் மிகப் பிரபலமானதாகும். (தி)

## செலிங்கோ லைப் இளம் மாணவர்களுக்கு உந்துசக்தி அளிக்க ஆரம்பிக்கும் திட்டம்

ஆற்றல் மிக்கவீரர்கள் பல தோற்றங்களிலும் பரிமாணங்களிலும் வருகிறார்கள். இவர்களுள் செலிங்கோ லைப் ஒரு சாராரான ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புதியதொரு செயற்திட்டத்தின் கீழ் விசேட அங்கீகாரத்தை வழங்கவுள்ளது.

ஆயுட் காப்புறுதி முதல்வர் களின் பிரணாம திட்டமானது வழமையாக ஓகஸ்ட் மாதத்தில் நடத்தப்படும் பரீட்சையில் முன்பதிவு செய்து சித்தியடைந்த ஒவ்வொரு மாண வருக்கும் அவரவர் உள்ளார்ந்த ஆற்றலை அங்கீகரிக்கும் விசேட ஆவணமாகத் தனிப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

இவற்றைத் தவிர, முன்பதிவு செய்துகொண்ட மாணவர்கள் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதல் 10 இடங்களுக்குள் வருவோருக்கு தலா 25,000 ரூபா பணப்பரிசு வழங்கப்படும் என்று கம்பனி அறிவித்துள்ளது.

இலங்கையில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையே ஒரு மாணவன் எதிர்கொள் ளும் முதலாவது தேசிய போட் டிப் பரீட்சையாகும். ஆகவே, மாணவனை ஓர் ஆற்றல் மிக்க என்று உறு திப்படுத்தும் ஒரு விசேட சான்றிதமுடன் இப் பரிட்சையில் சித்தி அடைவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது மாணவன் தொடர்ந்தும் கல்வி சார் சாதனைகளை புரிவதற்கு அவனைத் துண்டும் என்பது எமது நம்பிக்கையாகும் என்று செலிங்கோ லைப்பின் பணிப்பாளர் / பிரதிநிறை வேற்று அதிகாரி தெரிவித்தார்.

பிரணாம சான்றிதழ் ஒன் றைப் பெறுவதற்கும் பரிசுகளை வென்றெடுப்பதற்குமான தகுதியை பெறுவதற்கும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெற்றார் செலிங்கோ லைப் கிளை ஒன்றுக்குப் பயணம் செய்து அல்லது கம்பனியின் விற் பனை அதிகாரியை நேரில்சந்தித்து அல்லது செலிங்கோ லைப் அழைப்பு நிலையத் துடன் 2461461 என்ற தொலை பேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டுபதிவு செய்து கொள்ள வேண்டும். (தி)

## பிரதேச அபிவிருத்தி வங்கியின் வவுனியாக் கிளையில் ஏ.ரி.எம்.

பிரதேச அபிவிருத்தி வங்கி வவுனியாக் கிளையில் இன்று வெள்ளிக்கிழமை காலை ஏ.ரி.எம். சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வவுனியாக் கிளை முகாமையாளர் செல்வி காந்தி விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்திரனாக பிரதேசஅபிவிருத்தி வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளார் (தகவல் தொழில்நுட்பம்) வஜிர ஜெயசிங்க கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மத்திய பிராந்திய பொதுமுகாமையாளர் யு.பி.சேமசிங்க, மாவட்ட முகாமையாளர் வி.அருளாணந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பிரதேசஅபிவிருத்தி வங்கி வடக்கு மாகாணத்தில் முதலாவது ஏ.ரி.எம். சேவையை இன்று ஆரம்பிக்கவுள்ளதாகவும், எதிர்வரும் நாள்களில் நாடு முழுவதும் 3200 ஏ.ரி.எம். சேவை நிலையங்களை அமைக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-402)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

14/7/2016

www.cse.lk

| | | | |
|---|---|---|---|
| ASPI | -0.88 | 6,401.90 | 6,402.78 |
| S&P SL20 | -3.48 | 3,404.52 | 3,408.00 |
| வியாபாரப்புரள்வு | | 1,063,352,768 | 1,275,229,696 |
| உள்நாடு- கொள்வனவு | | 951,445,568 | 993,535,424 |
| விற்பனை | | 948,265,728 | 1,205,434,240 |
| வெளிநாடு- கொள்வனவு | | 111,907,168 | 281,694,336 |
| விற்பனை | | 115,087,024 | 69,795,576 |



| | | | | |
|---|---|---|---|---|
| அகலவத்தை பிளான் ஷன் | AGAL.N | 20.1 | 15,202,105 | 304,042,395 |
| ஷெல்றோன் லூப்ரிக்கன் | LLUB.N | 168.3 | 761,909 | 123,963,311 |
| புளு டைமண்ட் | BLUE.N | 2.50 | 18,721,601 | 45,826,152 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 129.1 | 332,420 | 43,212,050 |
| பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் | PINS.N | 16.8 | 2,294,716 | 38,666,172 |
| லங்கா ஒரிக்ஸ் லீசிங் | LOLC.N | 85 | 400,310 | 33,225,560 |
| பிரமல் கிளாஸ் | GLAS.N | 5.2 | 5,469,620 | 27,969,764 |
| கொழும்பு போர்ட் லேண்ட் | CFLB.N | 23 | 1,100,000 | 25,300,000 |
| திரி ஏக்கர் பார்ம் | TAFL.N | 135.3 | 161,212 | 21,628,541 |
| ஹய்லீஸ் பைபர் | HEXP.N | 91.60 | 237,356 | 21,069,671 |

அறிவித்தல்கள் -

பங்குலாபம்
கொமர்சியல் கிரெடிட் ( COCR ) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 206 |
| விலை உழைப்பு | 13.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**பின்னணி**

காணாமற்போனோரின் உறவினர்களால் 2012 ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனு, தாக்கல் செய்யப்பட்டது. 2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் கையளித்த – சரணடைந்த தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு அந்த மனு கோரியது. வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது வவுனியா மேல் நீதிமன்றம். அதனை விசாரிக்கும் பொறுப்பை சம்பவம் இடம்பெற்ற பகுதி நீதிமன்றமாகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு வழங்கியது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. பிரதிவாதிகளின் சாட்சியத்தைப் பதிவு செய்யும் நடவடிக்கை கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகியது. பிரதிவாதியான 58ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாணக்ய குணவர்தன, ஆள்கொணர்வு மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எவரும் 58ஆம் படையணியிடம் சரணடைந்ததற்கான பதிவுகள் தங்களிடம் இல்லை என்று சாட்சியமளித்தார்.

**குறுக்கு விசாரணை**

சாட்சி மீதான குறுக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில், நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெற்றது. மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த மூத்த சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல் குறுக்கு விசாரணை நடத்தினார்.

ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்தவர்களின் பெயர்கள் உங்களிடம் இல்லை என்பதை எதை வைத்துத் தெரிவித்திருக்கின்றீர்கள் என்று சட்டத்தரணி கேட்டார்.

“சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் எம்மிடம் உள்ளன. அதில் ஆராய்ந்து பார்த்தபோது, மேற்படி பெயர்கள் இல்லை. அதனடிப்படையிலேயே தெரிவித்தேன்'' என்று பதிலளித்தார் கட்டளைத் தளபதி.

“சரணடைந்தவர்கள் தொடர்பான பட்டியல் இராணுவத்தினரிடம் இருந்தால், அதனை மன்றில் முன்வைக்குமாறு” சட்டத்தரணி கேட்டார். நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன், இராணுவத்தினரிடம் உள்ள சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப்பட்டியலை ஏப்ரல் 19ஆம் திகதி மன்றில் முன்வைக்குமாறு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி நடந்த வழக்கில் உத்தரவிட்டார்.

**அரச தரப்பு சட்டத் தரணிகள் வரவில்லை.**

ஏப்ரல் 19ஆம் திகதி வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது. அரச தரப்புச் சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி இருக்கவில்லை. வழக்கு மே 19ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது. மே 19ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்தபோதும் அரச தரப்பு சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகவில்லை. நீதிபதி வழக்கை ஜூலை மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

**சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்**

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 58ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மன்றில் நேர்த்தியான ஆவணத்தை முன்வைத்தார்.

“இதில் பெயர், முகவரிகள் இருக்கின்றன. சரணடைந்த திகதி இல்லை. இந்த ஆவணத்தை நாம் கோரவில்லை. இது புனர்வாழ்வு ஆணையாளரினால் வெளியிடப்பட்ட ஆவணம். இதனை எவரும் பெற்றுக்கொள்ளமுடியும். இதில் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று வெளியேறியவர்களின் பெயர்கள்தான் இருக்கின்றன.

நாம் 2009ஆம் ஆண்டு மே 17, 18, 19 ஆம் திகதிகளில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர்களைத்தான் கோரினோம். இராணுவத்தினரிடம் இருப்பதாக பெப்ரவரி 17ஆம் திகதி நீதிமன்றத்தில் படையணியின் கட்டளைத் தளபதி தெரிவித்த ஆவணத்தையே வெளிப்படுத்தக் கேட்டிருந்தோம். இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் மனுதாரர்கள் தெரிவிக்கும் பெயர்கள் இல்லை. நாம் கோரிய ஆவணத்தை முன்வைக்கவேண்டும்” என்று சட்டத்தரணி ரட்டணவேல் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

58ஆவது படையணியின் கட்டளைத் தளபதி அவ்வாறான ஆவணம் இல்லை என்று தெரிவித்தார். பெப்ரவரி 17ஆம் திகதி வழக்கு விசாரணையின் போது ஆவணம் இருப்பதாகத் தெரிவித்ததை மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி சுட்டிக் காட்டினார்.

**உரிய ஆவணங்களுடன் வரவும்**

இதை அடுத்த வழக்குத் தவணையின்போது, நீதிமன்றம் கோரிய ஆவணங்களை முன்வைக்குமாறு இராணுவ அதிகாரிக்கு கட்டளையிட்டார் நீதிபதி. வழக்கு செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(வ-5-ரி7)

## இன முறுகலைத்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடைக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை பிக்குகளால் குறித்த இடத்தில் மீண்டும் புத்தர் சிலை வைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றன. இதனை இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் திட்டமிட்ட சதியாகவே கருதுகின்றோம். விகாரைகள் புதிதாக அமைக்கப்படும் விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாகத் தலையிட்டு, சாம்பல்தீவு சந்தியில் பிள்ளையார் சிலையை நிறுவி இந்துக்கள் வழிபடும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்” – என்றார்.

(வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லக்கண்மணி மத்தியாஸ்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்மணி மத்தியாஸ் 12.07.2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மத்தியாஸின் அன்பு மனைவியும், மரியநாயகம், அருள்நாயகம், மரியராணி, தேவநாயகம், காலஞ்சென்றவர்களான சகாயராணி, றஞ்சினி மற்றும் சகாயதாஸ்(பொறியியலாளர் -கட்டார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குயின்சி, லோயலா, அன்ரன், கொண்சலா (ஆசிரியை - யா/பாஷையூர் சென் அன்ரனீஸ் றோ.க.ம.வித்தியாலயம்), இந்து ஆகியோரின் அன்பு மாமியாரும், மில்லர், மிதிலா, மைக்கல்ராஜ், டிவ்னா, டிசாறா, மதுமிதா, அபினாஸ், சிரோன் -தர்சினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற டென்சில் மற்றும் பிரபானந், றெஜினோல்ட் - சிறோமி சாளினி, டயானா, ஸ்ரெபி, ஸ்ரெலானி, ஸ்ரெபானி, சன்றோ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சியானி, டென்சியா, டென்சில் (பிரான்ஸ்), லித்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (15.07.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (J/2916) (11,18)

தகவல்:
64/4,புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
ம.கிங்சிலி றொபேட்
(மகன் - தேவநாயகம்)

## மரண அறிவித்தல்

### Lion சரவணமுத்து ஸ்ரீநிவாசன்

(முகாமையாளரும் உரிமையாளரும்-காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில், வண்ணார்பண்ணை)

Rtd.Manager - Bank of Ceylon
Rtd. Regional Central Manager -Lanka Clear
Rtd.Manager - Pan Asia Bank (Jaffna)

மலர்வு
18 . 10 . 1944



உதிர்வு
12 . 07 . 2016

சுதுமலை மத்தியைப் (ஸ்ரீமதி வாசா) பிறப்பிடமாகவும், நவாலி வடக்கு (ஈஸ்வரி வாசா), பதுளை,கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து ஸ்ரீநிவாசன் 12.07.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர்) - ஸ்ரீமதி அம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிவராஜா (முன்னாள் முகாமையாளர் N. வைத்தியலிங்கம் கம்பனி) - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தவனேஸ்வரியின் (தவனா) ஆருயிர்க்கணவரும், சுதர்ஷன் (அருண்மொழிவர்மன்), பிரஷாந்த், பிரதீபன், தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனிகா, காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அத்தன், மயூரா ஆகியோரின் அன்புப் பேரனும், ஸ்ரீரஞ்சன் (காந்தன்), ஸ்ரீரதன் (ஸ்ரீ), சாரதாதேவி (சாரதா),ஸ்ரீதாசன் (தாசன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவதாசன், சிவதேவி மற்றும் விக்னராஜா (விக்னா), முருகானந் தன் (ஆனந்தன்), சசிதரன்(சசி), சசிகலா (கலா), சசீந்திரன் (இந்திரன்), சசிகுமார் (குமார்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், காலஞ் சென்ற வேதநாயகி, சிவதேவி,வைஜந்தி, கணேசராஜா, சிவகௌரி, சத்தியநாதன், ஜெகதீஸ்வரி - பஞ்சலிங்கம், காலஞ்சென்ற Dr. பாலச்சந்திரன் - வசந்தவதி, சரோஜினிதேவி -காலஞ்சென்ற குணசிங்கம், ஜெகதீஸ்வரன் - மகேஸ்வரி, மங்களேஸ்வரி - சிவலிங்கம், சாவித்திரிதேவி - காலஞ்சென்ற சுபாஸ்காந்தன், ஜெஸ்மின், கலைச்செல்வி (செல்வி), கலையரசி (ஜீவா) ஆகியோரின் மைத்துனரும் - சகலரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சிவனேஸ்வரி (கனடா), சத்தியகாந்தம் - பத்மதேவி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் நாளை (16.07.2016) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 17.07.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி மற்றும் குடும்பத்தினர்.
011 236 2805, 077 749 4843
சுதர்ஷன் (கனடா) 001 416 854 6768 (C/24402) (11,18)

## மரண அறிவித்தல்

### கந்தவனம் துரைரத்தினம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், பதிவாளர் திணைக்களம், மாளிகாவத்தை, ஸ்தாபகர்ராஜ் றவல்ஸ் & றுவல்ஸ் பிறைவேற் லிமிற்டட் கொழும்பு -கனடா)

பிறப்பு
01 . 12 . 1940



இறப்பு
09 . 07 . 2016

மதுரை இல்லம், கரவெட்டி கிழக்கு, கட்டைவேலி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் 54/6, சித்தார்த்த றோட், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் துரைரத்தினம் 09.07.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - தங்கம்மா தம்பதிகளின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான கே. என் நவரத்தினம் - லக்ஷ்மிபிள்ளை தம்பதியரின் மருமகனும் நவமலரின் அன்புக் கணவரும் நவநீதன் (Uk), நவரூபன் (raj travels கனடா), நவராஜன்(Uk) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பிரபா(Uk), திருச்செல்வி(கனடா), சிந்துஜா (Uk) ஆகியோரின் மாமனாரும் நிதுஷாநிதேஷ், தீப்தி, தீப்திகா, லக்ஷிகா, ரதின், அனுஸ்கா ஆகியோரின் அப்பப்பாவும் துரைராசா (RMP) சந்திரலீலா, சமாதானலீலா, சத்தியலீலா, சத்தியபாமா, சாந்தா, காலஞ்சென்ற இரத்தினராசா (தயா) ஆகியோரின் சகோதரனும்,இந்திராகாந்தி, வீரசிங்கம், சுந்தரலிங்கம், ஜெகதீஸ்வரநாதன், காலஞ்சென்ற நடராசா மற்றும் பரஞ்சோதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12.07.2016 கிருலப்பனை சிறிசித்தார்த்த வீதி, 54/6 இல் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் 14.07.2016 அன்று அவரது கரவெட்டி இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (15.07.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 .00 மணிக்கு வேலுண்டை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

“ மதுரை இல்லம்”
கரவெட்டி கிழக்கு, கட்டைவேலி,
கரவெட்டி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

077 738 0846 மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
19 . 03 . 1936



இறப்பு
15 . 07 . 1991

**அமரர் கணபதி செல்வராசா**
(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர் - காங்கேசன்துறை)

ஆண்டுகள் இருபத்தைந்து மறைந்துவிட்டன அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம் எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதைவிட்டு நீங்காது
என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

51, ராஜஸ்தான், காளிகோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கோண்டாவில்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஹெரோயின் கடத்த முற்பட்டதாக நால்வர் கைது

கொழும்பு, ஜூலை15
ஹெரோயின்போதைப்பொருளைக் கடத்துவதற்கு முற்பட்ட குற்றச்சாட்டில் இலங்கையர்கள் 3 பேர் உட்பட 4 பேர் தமிழகத்தின் இராமநாதபுரம் ரயில் நிலையம் அருகில் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து தமிழக கியூ பிரிவு பொலிஸார் 2 கிலோகிராம் ஹெரோயினைக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம், இராமநாதபுரம் ரயில் நிலையத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்குக் கடத்துவதற்காகத் தயார்நிலையில் வைத்திருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகக் கியூபிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## போர்க்குற்ற

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையில்லை என்று இரா.சம்பந்தன் தெரிவித்ததாக சிங்கள ஊடகமான 'ரிவிர' செய்தி வெளியிட்டது. அந்தச் செய்தியை தமிழ் ஊடகங்கள் சிலவும் பிரசுரித்திருந்தன.
இது தொடர்பில் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது:
பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்று நான் தெரிவித்ததாக வெளியான கருத்து பிழையானது. நான் 'ரிவிர' பத்திரிகையுடன் பேசியது உண்மை. இந்த விடயம் சம்பந்தமாக என்னிடம் வினவினர்.
எனது பதிலில்,
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியது. ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தத் தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதுதான் எமது கருத்து. தீர்மாணம் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது தொடக்கம் இதனை நாம் வலியுறுத்தி வருகின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு அதுதான். அதில் எந்த மாறுதலோ - மாற்றமோ இல்லை..
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பன்னாட்டு நீதிபதிகளை நியமிக்க முடியாது என்று கூறியிருக்கின்றார். ஜனாதிபதி அவ்விதமாகத் தெரிவிப்பதற்கு, அவர் ஜனாதிபதியாக வந்த பின்னர் நீதிமன்றங்களில் தலையிடுவதில்லை, நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றன என்ற பொதுவான அபிப்பிராயம் இருப்பது காரணமாக இருக்கலாம். நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படும் என்ற அடிப்படையில், அரசின் சம்மதத்துடன் - இணக்கத்துடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்திலிருந்து மாறி இவ்வாறான கருத்தைச் சொல்கின்றாரோ எனக்குத் தெரியவில்லை.
இந்த வேறுபாட்டின் நிமித்தம் சிக்கல்கள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. எல்லாக் கருமங்களும் முன்னெடுக்கப்படுவதாக இருந்தால், இந்த விதமான சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியது எமது கடமை. எனவே இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி உரியவர்களுடன் பேச்சு நடத்திதெளிவானநிலமையைஏற்படுத்தவேண்டும். அது நடைபெறவேண்டும்.
இவ்வாறுதான் நான் தெரிவித்தேன். நான் பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்று கூறவில்லை. அதை என்னால் கூற முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மாறாக நான் கூறமுடியாது. நாங்கள் இன்று வரையில் ஏற்றுக்கொண்டு வந்த நிலைக்கு மாறான நிலைப்பாடு அது - என்றார். (உ-வ-5-10)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி தேவராசா



நவாலியைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி தேவராசா நேற்று (14.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


பிறப்பு 15.02.1942
இறப்பு 14.07.2016

தாவடி வடக்கு,
077 8448558

தகவல்:தேவராசா
(கணவர்-முன்னாள் CTB நடத்துனர்)

## மரண அறிவித்தல்

### நல்லசேகரம்பிள்ளை பரமசாமி



சரசாலை வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லசேகரம்பிள்ளை பரமசாமி நேற்று(14.07.2016) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லசேகரம்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-செங்கமலம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஞானேஸ்வரிமற்றும் மங்களேஸ்வரி, நாகேஸ்வரி , உதயகுமாரி (ஆசிரியை), விஜயகுமாரி (அதிபர்), நாகபுலேந்திரன், சாந்தகுமாரி, புவனகுமாரி (கனடா), நவனகுமாரி (அபி விருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மார்க்கண்டு , திருஞான சம்பந்தர் (இளைப்பாறிய ப.நோ.கூ.ச முகாமையாளர்), சதானந்தம், பாலசுந்தரம் (ஓய்வு பெற்ற அதிபர்), ஸ்ரீபாஸ்கரன், கமலவதனா, சிவகுமாரன், தேவமனோகரன் (கனடா), உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் உதயசூரியன், காயத் திரி(லண்டன்), றஜிதா, ஜெயந்தன் (லண்டன்), காலஞ்சென்ற விபிசன் மற்றும் ஆரணி, வைஸ் ணவி, தனுஜன், தேனுகா (கனடா), அபிசனா, பூமிகா (கனடா), மதுரா, அஸ்வினி ஆகி யோரின் பாசமிகு பேரனும் அபிலாஷ் (லண்டன்), அகசரா, அபிசரன், அக்சயா, அபூர் வன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.07.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

தகவல்: குடும்பத்தினர்.
077 7286053

## மரண அறிவித்தல்

### மகாதேவன் சுமன்



வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சேத்துக்கண்டி, முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவன் சுமன் 13.07.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் இராசமலர் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவரூபன், சுகிர்தன், தீபா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜனகன், ஜெயசுதன்,சோபனா, ஜெயதாஸ் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், சிவகணேசன், சுகந்தன், நித்தியகல்யாணி, காலஞ்சென்ற சுதர்சினி மற்றும் தர்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குயிலினியன், தரணியா, தனுசியா, தட்ஷயன், அகிசன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சயந், சுஜிந், டன்ஷிகா, கவின் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் முரசுமோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஐயன் கோயிலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.102/1, சேத்துக்கண்டி,
முரசுமோட்டை.

(K/103)
(11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியை வன்புணர்ந்த இளைஞனை விசாரணை இன்றி விடுவித்தது பொலிஸ்

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 15

அப்புத்தளையைச் சேர்ந்த 14 வயது மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 29 வயது நபரை பொலிஸார் உரிய விசாரணைகளின்றி விடுவித்துள்ளதாக ஆசிய மனித உரிமை ஆணையகம் குற்றஞ்சாட்டுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமி சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர் என்பதனாலேயே, பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொள்ளாமல், நீதிவானிடமும் முற்படுத்தாமல் சந்தேகநபரை விடுதலை செய்துவிட்டனர் என்று பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் குற்றஞ்சாட்டி முறைப்பாடு செய்தார்.

மாணவியைப் பாடசாலைக்கு ஏற்றிச் செல்லும் வாகனத்தின் சாரதியான பணவசதி படைத்த குடும்பமொன்றைச் சேர்ந்த நபரே, சிறுமியை வன்புணர்ந்தார் என்று ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்தது.

இது தொடர்பில் ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்ததாவது:

கடந்த மாதம் பல கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாடசாலைக்குப் பஸ்ஸில் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த 14 வயதுத் தமிழ் மாணவி ஓட்டோவொன்றில் பயணித்துக்கொண்டிருந்த சிலரால் வன்புணரப்பட்டார். சாரதியே மாணவியை வன்புணர்ந்தார். ஏனைய 2 பேர் அதற்குத்துணைபோயுள்ளனர். சாரதியின் பெயர் துசார (வயது - 29)

> “பாதிக்கப்பட்ட சிறுமி சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர் என்பதனாலேயே, பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொள்ளாமல், நீதிவானிடமும் முற்படுத்தாமல் சந்தேகநபரை விடுதலை செய்தனர்.”

என பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர். சம்பவத்தை வெளியே தெரிவித்தால், குடும்பத்தவர்களைக் கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தினார். அதனால் வன்புணர்வை மறைத்து வைத்திருந்த மாணவி கடந்த 7ஆம் திகதி தனது தாயாருக்குத் தெரிவித்தார். அவர் உடனடியாக இது குறித்து அப்புத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அதனால் சந்தேகநபரையும், வேறொரு நபரையும் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்களை மாணவி கண்டுள்ளார். தமக்கு முன்பாகவே சந்தேகநபர்கள் பொலிஸ் சிறையில் வைக்கப்பட்டனர். ஆனால் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அதனை அறிந்த பாதிக்கப்பட்ட தரப்பினர் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினர். பதில் நீதிவானிடம் அவர்களை முற்படுத்தியதாகவும், பின்னர் பிணையில் விடுதலை செய்தாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், தாயார் பதில் நீதிவானின் பெயரைக் கோரிய வேளை, பொலிஸார் பதில் நீதிவான் ஒருவரின் பெயரைத் தெரிவித்தனர். எனினும், பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்தினர் குறிப்பிட்ட பதில் நீதிவானை தொடர்பு கொண்டவேளை, அவர் தான் எவரையும் பிணையில்விடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதனால் சந்தேகநபரை பொலிஸார் நீதிவானிடம் முற்படுத்தாமல் விடுதலை செய்துள்ளனரா என்ற சந்தேகம் எழுந்தது.

அப்புத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜூலை 12ஆம் திகதி சந்தேகநபர்களைப் பிணையில் விடுதலைசெய்ததாகத் தெரிவித்தார். ஆனால், ஏன் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்பதற்கான காரணங்களை அவர் தெரிவிக்கவில்லை.

இதே காலப்பகுதியில் அப்புத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய மருத்துவர்கள், மாணவி வன்புணரப்பட்டதனை உறுதிப்படுத்தினர் - என்று ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்தது. (வ-4)

# 8 மாதங்களாக இலங்கையர்களுக்கு சம்பளம் வழங்காத சவுதி நிறுவனம்

கொழும்பு, ஜூலை 15

கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் தமக்கான சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து சவுதி அரேபியாவில் உள்ள இலங்கையைச் சேர்ந்த பணியாளர்களில் 12 பேர் எதிர்ப்பு நடவடிக்கையில் குதித்துள்ளனர்.

கடந்த மே மாதம் 3ஆம் திகதி முதல் உணவுக்கான கொடுப்பனவும் நிறுத்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். தமது விடயம் தொடர்பில் சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்குத் தெரிவித்தும் இது வரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இலங்கையைச் சேர்ந்த பணியாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

இலங்கையர்களுடன் சேர்ந்து இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட 8 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 200 பேர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் உபுல் தேப்பிரிய தெரிவித்தார். (வ-4)

# அங்கவீனமான படைச்சிப்பாய்கள் குடாநாட்டில் சுற்றுலா

இராணுவத்தினரினால் நிர்வகிக்கப்படும் ஆரோக்கிய பராமரிப்பு விடுதியில் தங்கியுள்ள அங்கவீனமுற்ற படைச்சிப்பாய்கள் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலா ஒன்றினை அண்மையில் மேற்கொண்டனர். 46 இருக்கைகள் கொண்ட விமானத்தில் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து 3 நாள்கள் தங்கிநின்று சென்றுள்ளனர்.

ஓய்வு விடுதியில் பராமரிப்பு பெற்று வரும் 30 அங்கத்தவர்களும், அவர்களோடு இணைந்து மருத்துவர்கள், தாதி, உடற்பயிற்சி மருத்துவர் மற்றும் பராமரிப்பாளர்கள் உள்ளிட்ட 16 பேர்களைக் கொண்ட மருத்துவகுழுவொன்றும்வந்துசென்றுள்ளது. அந்தக்குழு நல்லூர் கோவில், யாழ்ப்பாணக் கோட்டை, நாக்தீப விகாரை, ஆனையிறவில் அமைந்துள்ள படைவீரர் நினைவுத்தூபி உள்ளிட்ட பல இடங்களை சுற்றிப் பார்த்தனர். (வ-4)

# சிறைகளிலிருந்து தப்பியோடுகிறார்கள் கைதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இந்த வருடம் 6 மாதங்களில் சிறைச்சாலைகளில் இருந்து 50 கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

பெரியளவிலான குற்றங்களுடன் தொடர்புள்ள குற்றவாளிகளும் தப்பிச் சென்ற கைதிகளுள் அடங்குவதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தூர உபுல்தெனிய தெரிவித்தார். தப்பிச் சென்ற கைதிகளுள் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்களும் அடங்குகின்றனர். அவர்களைக் கைது செய்வதற்கு பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்தார். (வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி தனுஷ்கா ஜெயரஞ்சன்

(ஆசிரியை-ஏஞ்சல் சர்வதேச பாடசாலை)



கலைமகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனுஷ்கா ஜெயரஞ்சன் நேற்று (14.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுரேந்திரன்-வசந்தகுமாரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தேவபாலச்சந்திரன் மற்றும் தவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயரஞ்சனின் (கியூமெமடிக்கா மானிப்பாய்) பாசமிகு மனைவியும் ஜெனுஷாவின் (ஏஞ்சல் சர்வதேசப்பாடசாலை) அன்புத் தாயும் கவிநயாவின் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33/08, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.


தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற Draftmen)

பிறப்பு 13 . 05 . 1929



இறப்பு 13 . 07 . 2016

யாழ்ப்பாணம் அல்வாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-15 இக்பாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தர்மலிங்கம் 13.07.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற பவளராணியின் அன்புக் கணவரும் நந்தினி, சிவரூபி, சிவசுதன்,ஆத்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பவளராஜா, ஸ்ரீதரன், சுஜித்தா, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும் கங்கா, கேசவன், ஜீவாந், கஜிந்தன், வைஷ்னவி, சைந்தவி, ஆதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 15.07. 2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வத்தளை மஹிந்த மலர்சாலையில் நடைபெற்று (Mahinda Funerals No.286, Negombo Road Wattala) பூதவுடல் பேலியகொட பொது மயானத்தில் பி.ப2.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அழுத்மாவத்தை வீதி,
கொழும்பு-15

தகவல்:பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 3535399

### திருமதி சாந்தினி குகதாசன்



கரணவாய் குருக்கள் பகுதியைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு குமுழமுனையிலும் தற்போது கொழும்பிலும் வசித்தவருமான திருமதி சாந்தினி குகதாசன் நேற்று (14.07.2016) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை (ஆசிரியர்)-கமலாம்பாள் தம்பதியரின் மூத்த புதல்வியும் இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தசாமிஐயர்-சோதியம்மா தம்பதிகளின் மருமகளும் ஓய்வு பெற்ற விற்பனைத் திணைக்கள முகாமையாளரும் தற்போதைய ANNA International (Pvt) Ltd. முகாமையாளருமாகிய குகதாசனின் அன்பு மனைவியும் ஆர்த்திகா (HSBC Bank HDPL) சஜீவ் (Commercial Bank-Jaffna 2nd Branch) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றஞ்சன், சுகுமார் (பிரதேச செயலகம்-வவுனியா), நரேந்திரம் (அதிபர்- உடுப்புக்குளம் மகா வித்தி யாலயம்), உமாபிரபா (ஆசிரியை குமுழமுனை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரவல்லி, பத்மாசனிதேவி, காலஞ்சென்ற முத்துக் குமாரசாமி மற்றும் அமிர்தாம்பிகை, சரவணபவன், கெயாவல்லி, குகநேசன், இராஜேஸ்வரி, நிதர்ஜனா, கமலேஸ்வரி, விமலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

180/49,
பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு-12

தகவல்:
குடும்பத்தினர்
011 2478954
077 7702353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளை மத்திக்கு தங்கப்பதக்கம்

மாகாணமட்ட தடகளத்தில் 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் பளை மத்திய கல்லூரிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

பளை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ. பவித்திரா 1.34 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி. தமிழினி 1.31 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மத்திய கல்லூரியின் சார்பாக களமிறங்கிய ரி. தீபிகா, மகாஜனக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய எஸ். தீபிகா யூனியன் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய பி. ரேனுகா ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் கைப்பற்றினர். (ம-23)

## சண்டிலிப்பாய் இந்து வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதலில் சண்டிப்பாய் இந்துக் கல்லூரிக்கு தங்கத்தைப் பெற்றுக் கொடுத்தார் ஆகாஸ்.

ஏ.ஆகாஸ் 12.1 மீற்றர் தூரத்துக்கு எறிந்தே தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியிருந்தார். ஹாட்லிக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய பி.அனாத் 10.9 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ஐ. இசைவாணன் 10.7 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலம் வென்றார். (ம)

## சென். ஆன்ஸுக்கு தங்கம் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 15

மாகாணமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தலில் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு தங்கம் கிடைத்தது.

மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய எஸ்.வி. மார்க் 6.60 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து தங்கத்தை வென்றுகொடுத்தார். யாழ். மத்தியின் சார்பாக களமிறங்கிய டி.ஜோய்ஆகாஸ் 6.56 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், காரைநகர் இந்துக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய எஸ். கோகுலன் 6.48 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

## நானாட்டானுக்கு தங்கப் பதக்கம்

மாகாணமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் நானாட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.தீபா தங்கப்பதக்கம் வென்றார்.

பாரதி வித்தியாலயத்தின் வீராங்கனைகளான பி.மகிழ்நிலா, என். யாழிசை இருவரும் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றினர். (ம-23)



## தட்சணாமருதமடு அ.த.க. இருநூறு மீற்றரில் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

மாகாணமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் தட்சணாமருதமடு அ.த.க. பாடசாலை தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

தட்சணாமருதமடு அ.த.க. பாடசாலையின் சார்பாக களமிறங்கிய எம். குகயாழினி 31 செக்கன்களில் இலக்கை அடைந்து தனது பாடசாலைக்கு தங்கத்தை வென்று கொடுத்தார். அத்தியார் இந்துக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய எஸ். பிருந்தா 32 செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், பாரதி வித்தியாலயத்தின் சார்பாக களமிறங்கிய பி. யாழினி 32.9 செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-23)


## குண்டெறிதல் போட்டியில் கனகரத்தினம் ம.வி. தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

மாகாணமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டெறிதலில் கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு தங்கம் கிடைத்தது.

கனகரத்தினம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய என். நிசாந்தினி 9.06 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றார். உடையார்கட்டு மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சயந்தினி 8 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். யாழ்.இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சர்மிலா 7.51 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார். (ம-23)





பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட தடகளத் தொடர் நேற்று ஆரம்பமானது. அணிவகுப்பு மரியாதையின் போது சில வீரர்கள் செருப்புடனும் கலந்துகொண்டனர். (ம-23)

## யாழ். இந்துவுக்கு தங்கம் கிடைத்தது

மாகாணமட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட நீளம் பாய்தலில் யாழ். இந்துக் கல்லூரிக்கு தங்கத்தைப் பெற்றுக் கொடுத்தார் பி. கஜலக்ஸ்மன். அதே கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஏனோக்ராஜ் வெள்ளிப் பதக்கத்தையும், ஞானசாரியார் கல்லூரியின் கே.ஜசீந்தன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம)

## வர்ணச் சான்றிதழுடன் ஹாட்லி பதக்க வேட்டை



யாழ்ப்பாணம், ஜூலை 15

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட தடகளத் தொடரில் 15 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் ஹாட்லிக் கல்லூரி வர்ணச் சான்றிதழுடன் தங்கத்தையும், வெண்கலத்தையும் வென்றது. ஹாட்லியின் சார்பாக களமிறங்கிய என். பிரவீனன் 38.1 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றார். இமையாணன் அ.த.க. பாடசாலையின் சார்பாக களமிறங்கிய எம். திவன்சயன் 37.6 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஹாட்லியின் பிறிதொரு வீரரான இ. மகீபன் 34.4. மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-23)



மாகாணமட்டப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலின் போது..

## ஒட்டுசுட்டான் ம.வித்தி. சாதனையுடன் தங்கம்

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தலில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் தங்கம் வென்றது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தின் சார்பாக களமிறங்கிய விக்ரோறியா ஜெனித்தா 5.01 மீற்றர் தூரம் என்ற சாதனையை முறியடித்து 5.22 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தை தனதாக்கினார். பாரதி வித்தியாலயத் தின் சார்பாக களமிறங்கிய மேரி தமயந்தி 4.89 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் ராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை யைச் சேர்ந்த பி.பவித்திரா 4.82 மீற்றர் தூரத்துக்கு பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலின் போது..


# பன்னாட்டுத் தரத்தில் உள்ளன வடக்கின் கல்வி அடைவுகள்

## விளையாட்டிலும் அந்த நிலை வேண்டும் என்கிறார் இந்தியத் துணைத் தூதர் ஏ.நடராஜன்

யாழ்ப்பாணம், ஜூலை 15

பன்னாட்டளவில் கல்வித் துறையில் சிறந்து விளங்கும் இடங்களில் ஒன்றாக இலங்கையின் வடபகுதி இன்றும் விளங்குகிறது எனத் தெரிவித்தார் யாழ். இந்திய துணைத் தூதுவர் ஏ.நட ராஜன்.

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. முதல் நாள் நிகழ்வில் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இலங்கையின் வடபகுதியைப் பற்றி எண்ணியவுடன் முதலில் நினைவுக்கு வருவது கல்விதான். அளப்பெரிய சாதனைகள் இங்கு கல்வியால் படைக்கப்பட்டுள்ளன. இன்றும் இந்த நிலைதான். இது பெருமை தருகிறது. இதே அடைவு மட்டம் விளையாட்டிலும்வேண்டும். இதற் குரிய ஓர் வாய்ப்பாகத்தான் இந்தியாவின் நிதி உதவியுடன் துரையப்பா மைதானம் புதுப்பித்து தரப்பட்டது. இவ்வா றான வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வடபகுதிவீரர் வீராங்கனைகள் அதிகம் சாதிக்க வேண்டும். தேசியமட்டப் போட்டிகள், ஆசியப் போட்டிகள், ஒலிம்பிக் என சாதனை கள் விரிவுபட்டுச் செல்ல வேண்டும்.

இங்கிருந்து புலமைப் பரிசில் மூலம் இந்தியாவுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை சிறிது குறைவாக உள்ளது. வறுமையான பிரதேசங்களில் இந்தப் புலமைப் பரிசில் திட்டம் கொண்டு செல்லப்படாமையும், அறியப்படாமையும் இதற்குரிய ஓர் காரணமாக இருக்கலாம். இந்தியா வாய்ப்புக்களைத்தரத் தயாராக உள்ளது.

இந்த வாய்ப்புக்களை நோக்கி மாணவர்களைச் சரியாக வழிநடத்த வேண்டியது உரிய அதிகாரிகளின் கடமை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-23)

# தடகளத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 15

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர் நேற்று ஆரம்பமானது. இரண்டாம் நாளாகிய இன்று 13 வயதுப் பிரிவில் 100 மீற்றர் தெரிவு, அரையிறுதி, இறுதிப் போட்டி, 13 வயது இருபாலாருக்குமான 200 மீற்றர் இறுதிப் போட்டி, 13 வயது ஆண்களுக்கான உயரம் பாய்தல், 13 வயது பெண்களுக்கான நீளம் பாய்தல் என்பன நடைபெறவுள்ளன.

15 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான உயரம் பாய்தல், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம் ஆகியனவும் பெண்களுக்கான தட்டெறிதல், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.

17 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலித் தெரிவு, முப்பாய்ச்சல், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம், தட்டெறிதல், 800 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம் என்பனவும் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி, 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், கோலூன்றிப் பாய்தல், 400 மீற்றர் சட்டவேலி, 800 மீற்றர் ஓட்டம், குண்டு எறிதல் ஆகியனவும் நடைபெறவுள்ளன.

19 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் சட்டவேலி, 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், 800 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தல், 200 மீற்றர் ஓட்டம், ஈட்டி எறிதல் என்பனவும் பெண்களுக்கான போட்டிகளில் 5000 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் ஓட்டம், 800 மீற்றர் ஓட்டம், சட்டவேலி, குண்டு எறிதல், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், நீளம் பாய்தல், 400 மீற்றர் சட்டவேலி என்பவும் நடைபெறவுள்ளன.

21 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான போட்டிகளில் 5000 மீற்றர் ஓட்டம், கோலூன்றிப் பாய்தல், 400 மீற்றர் சட்டவேலி, 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், 800 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம், முப்பாய்ச்சல் என்பனவும், பெண்களுக்கான போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டம், 800 மீற்றர் ஓட்டம், 5000 மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல், 400 மீற்றர் ஓட்டம், சட்டவேலி, ஈட்டி எறிதல், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.

(ம-422)

# தட்டெறிதலில் தங்கம் வென்றது சாவகச்சேரி இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூலை 15

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்டத் தடகளத் தொடரில் தட்டெறிதலில் 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குத் தங்கம் கிடைத்தது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சங்கவி, 25.7 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கத்தை தனதாக்கினார். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர். தர்சி 24.9 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், யாழ். இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த என். சிவானுஜா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-23)





பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர் நேற்று ஆரம்பமானது. கடந்த வருடம் தேசியமட்டத்தில் தங்கம் வென்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவியான ஜெ. அனித்தா ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார். (ம-23)

# பளை மத்திக்கு உயரம் பாய்தலில் தங்கம்



மாகாணமட்ட தடகளத் தொடரில் உயரம் பாய்தலில் 19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் பளை மத்திய கல்லூரி தங்கத்தை சொந்தமாக்கியது.

பளை மத்திய கல்லூரியின் சார்பாக களமிறங்கிய வை. வனிசா 1.39 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார். யாழ். இந்து மகளிர் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய ஏ. நர்மதா 1.37 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், [illegible] சாலையின் சார்பாக களமிறங்கிய பி. விஜிந்தினியும், யாழ். இந்து மகளிர் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய என். டிலுக்சாவும் 1.36 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கங்களை வென்றனர். (ம-23)

# கபடித் தொடர் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மாவட்ட கபடிச் சங்கம் மாவட்ட ரீதியில் கபடித் தொடரொன்றை விரைவில் முன்னெடுக்கவுள்ளது. ஆண்களுக்கான திறந்த வயதுப் பிரிவில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் பங்கு பற்றவிரும்பும் அணிகள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DMI** - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2016 - கருத்தரங்கு
பாடம் புவியியல்
காலம் - ஜுலை 16,17,19
ஆரம்பம் - 16.07.2016 - 12Pm
N.BABU
தொடர்பு: 077 936 5087

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் சவாலானது என்கிறார் கோல்டர்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் கடும் சவாலானது எனத் தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் தலைவரான கோல்டர். இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடர் தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோல்டர் இவ்வாறு தெரிவித்தார்.

இது ஒரு கடினமான தொடராக இருக்கப்போகிறது. இந்தியா தற்போது டெஸ்ட் தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அவர்கள் தரமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ளனர். அதேபோல் தரமான பந்து வீச்சாளர்களும் அந்த அணியில் உள்ளனர். அவர்கள் எதிர்ப்பது எங்களுக்குக் கடினமான சவாலாக இருக்கும். எங்களது அணி அனுபவமற்ற அணி. நாங்கள் அணியாக ஒன்றிணைந்து சிறப்பாகச் செயற்பட்டால் கொஞ்சம் முன்னேற்றம் அடைவோம். நாங்கள் இடைப்பட்ட காலத்தில் இருக்கிறோம். சிறந்த அணியாக உருவெடுக்க முயற்சி செய்கிறோம். அதற்கு கொஞ்சம் காலம் எடுக்கும் என கோல்டர் மேலும் தெரிவித்தார்.

(ம)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af **பிரெஞ்சு மொழி**

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்.
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம்: PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர்: யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

ஆரம்பம்: 02.07.2016. உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் —> புகையிரதகடவை —> AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

**பணம் தவறிவிட்டது**
பலாலி வீதி., திருநெல்வேலி. கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் ஒரு தொகைப் பணம் 13.07.2016 பிற்பகல் 6.40 மணியளவில் தவறியுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ. பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு.077 612 5250

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
A/l 2016.
மாபெரும் கருத்தரங்கு
**அரசியல் விஞ்ஞானம்**
ஆரம்பம் :-17,19 திகதிகளில்
நேரம் :- 17.07.2016 —> 1.00pm
19.07.2016 —> 8.30am
S.கோகுலன்
(BA (Hons) pol.spl
* வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.
* கையேடுகள் வழங்கப்படும்.
* உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் ஏற்பாட்டில்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள்**

எதிர்வரும் ஆவணி மாதம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்கில் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான கௌரவ ஈ.சரவணபவன் அவர்களது ஏற்பாட்டில் சரவணபவன் அறக்கட்டளையும், புலமைச்சுடரும் இணைந்து நடாத்தும் விசேட இலவசக் கருத்தரங்குகள் பின்வரும் இடங்களில் இடம்பெறவுள்ளன.

| | | |
|---|---|---|
| 17.07.2016 (ஞாயிறு) | ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி | (மு.பகல் 8.30- பி.ப 3.30) |
| | பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை | (மு.பகல் 8.30- பி.ப 3.30) |
| 18.07.2016 (திங்கள்) | காரைநகர் யாழ்ரன் கல்லூரி | (பி.பகல் 2.30- பி.ப 5.30) |
| 19.07.2016 (செவ்வாய்) | வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி | (மு.பகல் 8.30- பி.ப 3.30) |
| | சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி | (மு.பகல் 8.30- பி.ப 3.30) |

**இக் கருத்தரங்கில்**

- இலங்கையின் மூத்த முன்னணி ஆசிரியர் கொழும்பு **திரு. பி. அம்பிகைபாகன்** (புலமை ஆசான்)
- யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர் **திரு.வே.அன்பழகன்** (யாழ். கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை)
- வவுனியா, யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர் **திரு. என்.எஸ். தீபன்** (யா. மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
- புலமைச்சுடர் கையேட்டின் வளவாளர் **திரு. து. திலீப்குமார்** (கொழும்பு / விவேகானந்தாக் கல்லூரி)

ஆகியோர் வளவாளராகப் பங்குபற்றி வழிகாட்டல்களை வழங்கவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்களின் பெற்றோர்கள் அத்தியடி பிள்ளையார் கோவிலடி, வட்டுக்கோட்டை எனும் முகவரியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனது அலுவலகத்துக்குச் சென்று பதிவினை மேற்கொள்ளவும் இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களைையும் பங்குபற்றி பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- மேலதிக தொடர்புகளுக்கு 021 2051355 அல்லது 021 4927422 அல்லது 0716361361.

குறிப்பு:- அனைத்து மாணவர்களும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது ஆசிரியர்களுடன் வருகை தரவும்.

சரவணபவன் அறக்கட்டளையும் புலமைச்சுடர் ஆசிரியர் குழுமம்
கருத்தரங்கு ஏற்பாட்டுக்குழு

## உயரப் பாய்ந்தது பளை

யாழ்ப்பாணம், ஜூலை 15

மாகாணமட்ட தடகளத் தொடரில் 13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் பளை மத்திய கல்லூரி தங்கம் வென்றது.

பளை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர். நிலவேணி 1.23 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கத்தைக் கைப்பற்றினார். நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.காவியா 1.22 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த வி.விதுசா 1.2 மீற்றர் உயரத்துக்குப்பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
தகைமை, திறமை அனுபவம் கொண்ட வளவாளர்கள்
கூடிய நேரம் குறைந்த கட்டணம்
வடமாகாண வரி உத்தியோகத்தர்
சனி(16/7), ஞாயிறு (17/7), செவ்வாய் (19/7), சனி (23/7) காலை 9.00 - 4.00 மணிவரை
வடமாகாண சன சமூக மற்றும் ஆய்வு உத்தியோகத்தர்
பிரதி சனி 1.00 - 5.00 மணிவரை
கல்வியியலாளர் SLTES
பிரதி ஞாயிறு 10.00 - 4.00 மணிவரை
கணக்காய்வாளர்
பிரதி ஞாயிறு 9.00 - 4.00 மணிவரை
GS, சமுர்த்தி, சட்டமாணி வகுப்புகளும் நடைபெறுகின்றன
D.O, P.M.A EB Exam வகுப்புக்கள்
சனி, ஞாயிறு 9.00 மணி
T.P: 0766 883394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கிபகுதில்)

**கருத்தரங்கு**
July-24 இல் நடைபெறவுள்ள வடமாகாண வரி உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
23/07/2016-9.00-4.00Pm
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள் ஆராயப்படும்.
கல்வியாளர் சேவை
SLTES
24/07/2016-9.00-4.00Pm
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்
T.P 077 4696695

**உடனடி வேலை வாய்ப்பு**
- விளம்பரத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் அனுபவமும் உள்ள ஆண்,பெண் இருபாலருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.
- 6 மாத காலத்திற்குள் உங்கள் திறமையை பொறுத்து குறைந்தது 2 லட்சம் ரூபாயை பெறக்கூடிய வாய்ப்பு.
- தகுதி - O/L
V2 Travels and Tours (Pvt) Ltd.
5 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றி வரும் எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டு நன்மை பெறுங்கள்.
0768226243 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.